# அப்போஸ்தலருடைய நடபடிகள்

## லூக்காவின் இரண்டாவது புத்தகம்

1 அன்பான தேயோப்பிலுவே, நான் எழுதிய
முதல் புத்தகத்தில் இயேசு செய்தவைக
ளையும், கற்பித்தவைகளையும் எல்லாம்
பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். 2நான் இயேசுவின்
வாழ்க்கை முழுவதையும் தொடக்கத்திலிருந்து
இறுதியில் அவர் பரலோகத்திற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டது வரைக்கும் எழுதியிருந்
தேன். இது நடக்கும் முன் இயேசு தான் தேர்ந்
தெடுத்த அப்போஸ்தலர்களிடம் பேசினார்.
பரிசுத்த ஆவியின் வல்லமையால் அப்போஸ்
தலர்கள் செய்யவேண்டியவற்றை இயேசு
அவர்களுக்குக் கூறினார். 3இது இயேசுவின்
மரணத்திற்குப் பின்னர் நிகழ்ந்தது. ஆனால்
அவர் அப்போஸ்தலருக்குத் தான் உயிரோடி
ருப்பதைக் காட்டினார். வல்லமைமிக்க செயல்
கள் பலவற்றைச் செய்து இயேசு இதை நிரூபித்
தார். இயேசு மரணத்தினின்று எழுந்த பின்பு
40 நாட்களில் அப்போஸ்தலர்கள் பலமுறை
இயேசுவைப் பார்த்தனர். தேவனுடைய இராஜ்
யத்தைப் பற்றி இயேசு அப்போஸ்தலர்களிடம்
பேசினார். 4ஒரு முறை இயேசு அவர்களோடு
உணவு உட்கொண்டு இருக்கும்போது எருச
லேமை விட்டுப் போக வேண்டாமென அவர்
களுக்குக் கூறினார். இயேசு, "பிதா உங்களுக்
குச் சிலவற்றைக் குறித்து வாக்குறுதி அளித்
துள்ளார். இதைக் குறித்து முன்னரே நான்
உங்களுக்குக் கூறினேன். இங்கேயே எருசலே
மில் இந்த வாக்குறுதியைப் பெறுவதற்காகக்
காத்திருங்கள். 5யோவான் மக்களுக்கு, தண்ணீ
ரால் ஞானஸ்நானம் வழங்கினான். ஆனால்
ஒரு சில நாட்களில் நீங்கள் பரிசுத்த ஆவியால்
ஞானஸ்நானம் பெறுவீர்கள்" என்று சொன்
னார்.

## இயேசுவின் பரமேறுதல்

6அப்போஸ்தலர்கள் எல்லோரும் ஒருமித்
துக் கூடியிருந்தார்கள். அவர்கள் இயேசுவை
நோக்கி, "ஆண்டவரே, நீங்கள் யூதர்களுக்கு
அவர்களது இராஜ்யத்தை மீண்டும் கொடுக்
கும் காலம் இதுவா?" என்று வினவினார்கள்.
7இயேசு அவர்களை நோக்கி "நாட்களையும்
நேரத்தையும் பற்றிய முடிவெடுக்கும் அதி
காரம் உடையவர் பிதா ஒருவரே. உங்களால்
இந்தக் காரியங்களை அறிந்து கொள்ளமுடி
யாது. 8ஆனால் பரிசுத்த ஆவியானவர் உங்க
ளிடம் வருவார். வரும்போது நீங்கள் வல்ல
மையைப் பெறுவீர்கள். நீங்கள் எனது சாட்
சிகளாக இருப்பீர்கள். மக்களுக்கு என்னைப்
பற்றிக் கூறுவீர்கள். முதலில் எருசலேமின்
மக்களுக்குக் கூறுவீர்கள். பின் யூதேயா முழு
வதும், சமாரியாவிலும் உலகத்தின் எல்லாப்
பகுதியிலும் நீங்கள் மக்களுக்குக் கூறுவீர்கள்"
என்றார்.
9இயேசு அப்போஸ்தலர்களுக்கு இந்தக் காரி
யங்களைக் குறித்துக் கூறிய பிறகு வானிற்குள்
ளாக அவர் மேலே எடுத்துச் செல்லப்பட்டார்.
அப்போஸ்தலர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்
போதே, அவர் மேகத்திற்குள்ளாகச் சென்றார்.
பின்னர் அவர்களால் அவரைப் பார்க்க முடிய
வில்லை. 10இயேசு மேலே போய்க் கொண்
டிருந்தார். அப்போஸ்தலர்கள் வானையே
நோக்கிக் கொண்டிருந்தனர். திடீரென வெண்
ணிற ஆடை அணிந்த இருவர் (தேவதூதர்கள்)
அவர்களுக்கு அருகே நின்றனர். 11அவ்விரு
வரும் அப்போஸ்தலர்களை நோக்கி, "கலிலே
யாவிலிருந்து வந்துள்ள மனிதர்களே, ஏன்
நீங்கள் வானத்தைப் பார்த்தவாறே நின்று
கொண்டிருக்கிறீர்கள்? இயேசு உங்களிடமி
ருந்து பரலோகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்
டதை நீங்கள் கண்டீர்கள். நீங்கள் பார்த்த
போது சென்றதைப் போலவே அவர் திரும்
பவும் வருவார்" என்று கூறினர்.

## புதிய அப்போஸ்தலர்

12பின்பு ஒலிவ மலையிலிருந்து அப்போஸ்
தலர்கள் எருசலேமுக்குத் திரும்பிச் சென்றனர்.
(இம்மலை எருசலேமிலிருந்து சுமார் ஒன்றரை
மைல் தூரத்தில் உள்ளது) 13அப்போஸ்தலர்கள்
நகரத்திற்குள் சென்றனர். அவர்கள் தாங்கள்
தங்கியிருந்த இடத்திற்குச் சென்றார்கள். அந்த
அறை மாடியிலிருந்தது. பேதுரு, யாக்கோபு,
யோவான், அந்திரேயா, பிலிப்பு, தோமா,
பார்த்தலொமேயு, மத்தேயு, அல்பேயுவின் மக
னாகிய யாக்கோபு, செலோத்தே எனப்படும்
சீமோன் மற்றும் யாக்கோபின் மகனாகிய
யூதாஸ் ஆகிய அப்போஸ்தலர்கள் அங்கிருந்
தனர். 14அப்போஸ்தலர்கள் அனைவரும் சேர்ந்
திருந்தனர். ஒரே குறிக்கோள் உடையோராய்
விடாது பிரார்த்தனை செய்து கொண்டேயி
ருந்தனர். இயேசுவின் தாயாகிய மரியாளும்
அவரது சகோதரர்களும் சில பெண்களும்
அப்போஸ்தலரோடு கூட இருந்தனர்.
15சில நாட்களுக்குப் பிறகு விசுவாசிகளாக
அவர்கள் ஒன்று கூடினர். (சுமார் 120 பேர்
அக்கூட்டத்தில் இருந்தனர்.) பேதுரு எழுந்து

நின்று, **16-17**“சகோதரர்களே! வேதவாக்கியங்
களில் பரிசுத்த ஆவியானவர் சில காரியங்கள்
நடக்கும் என்று தாவீதின் மூலமாகக் கூறினார்.
நமது கூட்டத்தில் ஒருவனாகிய யூதாஸைக்
குறித்து அவன் கூறியுள்ளான். யூதாஸ் நம்
மோடு கூட சேவையில் ஈடுபட்டிருந்தான்.
இயேசுவைச் சிறைபிடிக்க யூதாஸ் மனிதர்
களுக்கு வழிகாட்டுவான் என்பதை ஆவியா
னவர் கூறியிருந்தார்,” என்றான்.
**18**(இதைச் செய்வதற்கு யூதாஸிற்குப் பணம்
தரப்பட்டது. ஒரு நிலத்தை வாங்குவதற்கு
அப்பணம் பயன்படுத்தப்பட்டது. ஆனால்
யூதாஸ் தலைகுப்புற வீழ்ந்து அவன் சரீரம்
பிளவுண்டது. அவனது குடல் வெளியே
சரிந்தது. **19**எருசலேமின் மக்கள் அனைவரும்
இதை அறிந்தனர். எனவேதான் அந்நிலத்திற்கு
‘அக்கெல்தமா’ என்று பெயரிட்டனர். அவர்
கள் மொழியில் அக்கெல்தமா என்பது “இரத்த
நிலம்” எனப் பொருள்படும்.)
**20**“சங்கீதத்தின் புத்தகத்தில் யூதாஸைக்
குறித்து இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

‘மக்கள் அவனது நிலத்தருகே செல்லலா
காது, யாரும் அங்கு வாழலாகாது.’
சங்கீதம் 69:25

மேலும் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

‘இன்னொருவன் அவன்பணியை பெறட்
டும்.’ சங்கீதம் 109:8

**21-22**“எனவே இன்னொருவன் நம்மோடு
சேர்ந்து கொண்டு இயேசு உயிரோடு எழுந்த
தற்குச் சாட்சியாக இருக்கட்டும். ஆண்டவ
ராகிய இயேசு நம்மோடு இருந்தபோது எப்
போதும் நம்மோடு கூட இருந்த மனிதர்களில்
ஒருவனாக அவன் இருத்தல் வேண்டும்.
யோவான் ஞானஸ்நானம் கொடுக்கத் தொடங்
கியதிலிருந்து இயேசு பரலோகத்திற்கு அழைத்
துக்கொள்ளப்பட்டது வரைக்கும் நம்மோடு
இருந்தவனாக அவன் இருக்கவேண்டும்” என்
றான்.
**23**அப்போஸ்தலர்கள் கூட்டத்திற்கு முன் இரு
வரை நிறுத்தினர். ஒருவன் யோசேப்பு பர்சபா
என்பவன். அவன் யுஸ்து என அழைக்கப்
பட்டான். மற்றவன் மத்தியா என்பவன்.
**24-25**அப்போஸ்தலர்கள் “ஆண்டவரே, நீர்
எல்லா மனிதர்களின் உள்ளங்களையும் அறிந்
தவர். இந்த இருவரில் உம் சேவைக்கு நீர்
யாரைத் தேர்ந்தெடுக்கிறீர் என்பதை எங்க
ளுக்குக் காட்டும். யூதாஸ் இதனைவிட்டு நீங்கித்
தனக்குரிய இடத்திற்குச் சென்று விட்டான்.
ஆண்டவரே, எந்த மனிதன் அப்போஸ்தல
னாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்ப
தைக் காட்டும்!” என்று பிரார்த்தனை செய்
தார்கள். **26**பின்னர் அப்போஸ்தலர்கள் அந்த
இருவரில் ஒருவனைத் தேர்ந்தெடுக்க சீட்டுகள்
எழுதிப் போட்டனர். அதன்படி ஆண்டவர்
விரும்பியவராக மத்தியாவை சீட்டுகள்
காட்டின. எனவே அவன் மற்ற பதினொருவ
ரோடும் கூட ஓர் அப்போஸ்தலன் ஆனான்.

### பரிசுத்த ஆவியானவரின் வருகை

**2** பெந்தெகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்
அனைவரும் ஓரிடத்தில் கூடியிருந்தனர்.
**2**திடீரென வானிலிருந்து ஓசை ஒன்று எழுந்
தது. பெருங்காற்று அடித்தாற்போல அது
ஒலித்தது. அவர்கள் அமர்ந்திருந்த வீடு முழு
வதையும் அவ்வொலி நிரப்பிற்று. **3**நெருப்புக்
கொழுந்து போன்றவற்றை அவர்கள் கண்
டனர். அக்கொழுந்துகள் பிரிந்து சென்று
அங்கிருந்த ஒவ்வொருவர் மேலும் நின்றன.
**4**அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியால்
நிரப்பப்பட்டார்கள். பல்வேறு மொழிகளில்
அவர்கள் பேச ஆரம்பித்தார்கள். இப்படிப்பட்
டதான வல்லமையை பரிசுத்த ஆவியானவர்
அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார்.
**5**அக்காலத்தில் எருசலேமில் மிக பக்திமான்
களாகிய யூதர்கள் சிலர் தங்கியிருந்தனர். உல
கத்தின் எல்லா தேசத்தையும் சார்ந்தவர்களாய்
இந்த மனிதர்கள் இருந்தனர். **6**ஒலியைக் கேட்டு
இம்மனிதர்கள் பெருங்கூட்டமாய் அங்கு வந்
தனர். அப்போஸ்தலர்கள் பேசிக்கொண்டிருக்
கையில் ஒவ்வொரு மனிதனும் தனது சொந்த
மொழியில் கேட்டதால் அம்மனிதர்கள் வியப்
புற்றனர். **7**யூதர்கள் இதனால் ஆச்சரியமடைந்
தனர். அப்போஸ்தலர்கள் எவ்வாறு இதைச்
செய்ய முடிந்தது என்பதை அவர்களால்
புரிந்துகொள்ளமுடியவில்லை. அவர்கள்,
“பாருங்கள்! பேசிக்கொண்டிருக்கும் இந்த
மனிதர்கள் (அப்போஸ்தலர்கள்) எல்லோரும்
கலிலேயாவைச் சேர்ந்தவர்கள்! **8**ஆனால் நமது
மொழிகளில் அவர்கள் பேசிக்கொண்
டிருப்பதைக் கேட்கிறோம். எப்படி இது இய
லும்? நாம் **9**பார்த்தியா, மேதியா, ஏலாம்,
மெசொபொதாமியா, யூதேயா, கப்பதோகியா,
பொந்து, ஆசியா, **10**பிரிகியா, பம்பிலியா,
எகிப்து, சிரேனே நகரங்களிற்கு அருகேயுள்ள
லிபியா நாட்டுப் பகுதிகள், **11**கிரேத்தா, ரோமி
லிருந்து வந்த மக்கள் மற்றும் அரேபியா
ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள். நம்மில் சிலர்
யூதர்களாகப் பிறந்தவர்கள். மற்றவர்கள் யூதர்
களாக மதம் மாறியவர்கள். நாம் வெவ்வேறு
நாட்டினர். ஆனால் இவர்கள் நம் மொழிகளில்
பேசுவதைக் கேட்கிறோமே! அவர்கள் தேவ
னைக் குறித்துக் கூறும் மேன்மையான காரி
யங்களை நம்மெல்லோராலும் புரிந்து கொள்ள
முடிகிறதே” என்றார்கள். **12**மக்கள் அனை
வரும் வியப்புற்றவர்களாகவும் குழப்பமடைந்
தவர்களாகவும் காணப்பட்டனர். அவர்கள்
ஒருவரையொருவர் நோக்கி, “என்ன நடந்து
கொண்டிருக்கின்றது?” என்று வினவினர்.
**13**பிற மக்கள் அப்போஸ்தலர்களைப்
பார்த்துச் சிரித்தனர். அம்மக்கள் அப்போஸ்

தலர் மிகுதியான மதுவைப் பருகியிருந்தனர்
என நினைத்தனர்.

### பேதுரு மக்களிடம் பேசுதல்

14அப்பொழுது பேதுரு மற்ற அப்போஸ்
தலர் பதினொருவரோடும் எழுந்து நின்றான்.
எல்லா மக்களும் கேட்கும்படியாக உரக்கப்
பேசினான். அவன், “எனது யூத சகோதரர்
களே, எருசலேமில் வசிக்கும் மக்களே, நான்
கூறுவதைக் கவனியுங்கள். நீங்கள் தெரிந்து
கொள்ளவேண்டிய சில கருத்துகளை உங்க
ளுக்குக் கூறுவேன். கவனமாகக் கேளுங்கள்.
15நீங்கள் நினைக்கிறது போல இம்மனிதர்கள்
மது பருகியிருக்கவில்லை. இப்போது காலை
ஒன்பது மணிதான். 16இங்கு இன்றைக்கு
நிகழ்ந்து கொண்டிருப்பதைக் குறித்து யோ
வேல் என்னும் தீர்க்கதரிசி எழுதியிருக்கிறார்.
யோவேல் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்:

17 ‘தேவன் கூறுகிறார், கடைசி நாட்களில்
நான் எனது ஆவியை எல்லா மக்களுக்
கும் அள்ளி வழங்குவேன். ஆண் மக்க
ளும், பெண்மக்களும் தீர்க்கதரிசனம்
உரைப்பர். உங்கள் இளைஞர் தரிசனம்
காண்பார்கள். உங்கள் முதியோர்
விசேஷ கனவுகள் காண்பர்.
18 அந்நேரத்தில் எனது ஆவியை எனது
ஊழியர்களாகிய ஆண்களுக்கும் பெண்
களுக்கும் கொடுப்பேன். அவர்கள் தீர்க்க
தரிசனம் உரைப்பர்.
19 மேலே வானில் வியப்புறும் காட்சிக
ளைக் காண்பிப்பேன். கீழே பூமியிலும்
சான்றுகள் தருவேன். அங்கு இரத்தம்,
நெருப்பும், புகைமண்டலமும் இருக்கும்.
20 சூரியன் இருளாக மாறும். நிலா இரத்தம்
போல் சிவப்பாகும். அப்போது கர்த்தரு
டைய மகத்தான மகிமைமிக்க நாள்
வரும்.
21 கர்த்தர் மேல் நம்பிக்கை வைக்கும் ஒவ்
வொரு மனிதனும் இரட்சிக்கப்படுவான்.’
யோவேல் 2:28-32

22“எனது யூத சகோதரர்களே, இந்த
வார்த்தைகளைக் கவனியுங்கள். நாசரேத்தின்
இயேசு மிகச் சிறப்பான மனிதர். தேவன்
இதைத் தெளிவாக உங்களுக்குக் காட்டினார்.
இயேசுவின் மூலமாக அவர் செய்த வல்லமை
மிக்க வியப்பான காரியங்களால் தேவன்
இதை நிரூபித்தார். நீங்கள் எல்லோரும் இந்தக்
காரியங்களைப் பார்த்தீர்கள். எனவே இது
உண்மையென்பது உங்களுக்குத் தெரியும்.
23இயேசு உங்களுக்குக் கொடுக்கப்பட்டார்.
நீங்கள் அவரைக் கொன்றீர்கள். தீயவர்களின்
உதவியோடு இயேசுவைச் சிலுவையில்
அறைந்தீர்கள். ஆனால் இவையெல்லாம்
நடக்குமென்பதை தேவன் அறிந்திருந்தார். இது
தேவனுடைய திட்டமாக இருந்தது. வெகு
காலத்திற்கு முன்னரே தேவன் இந்தத் திட்
டத்தை வகுத்திருந்தார். 24மரணத்தின் வேத
னையை இயேசு அனுபவித்தார். ஆனால்
தேவன் அவரை விடுவித்தார். தேவன் இயே
சுவை மரணத்திலிருந்து எழுப்பினார். மர
ணம் இயேசுவைத் தொடர்ந்து தன் பிடிக்குள்
வைத்திருக்க முடியவில்லை. 25தாவீது இயேசு
வைக் குறித்து இவ்வாறு கூறினான்:

நான் ஆண்டவரை எப்போதும் என்
முன் காண்கிறேன். என்னைப் பாதுகாப்
பதற்கு எனது வலப்புறத்தே உள்ளார்.
26 எனவே என் உள்ளம் மகிழுகிறது, என்
வாய் களிப்போடு பேசுகிறது. ஆம்,
எனது சரீரமும் கூட நம்பிக்கையால்
வாழும்.
27 ஏனெனில் மரணத்தின் இடத்தில்* எனது
ஆத்துமாவை நீர் விட்டு விடுவதில்லை.
உமது பரிசுத்தமானவரின் சரீரத்தைக்
கல்லறைக்குள் அழுகிவிட நீர் அனுமதிப்
பதில்லை.
28 வாழும் வகையை எனக்குப் போதித்தீர்.
என்னருகே நீர் வந்து அளவற்ற ஆனந்
தம் தருவீர்.’
சங்கீதம் 16:8-11

29“எனது சகோதரர்களே, நமது முன்னோ
ராகிய தாவீதைக் குறித்து உண்மையாகவே
உங்களுக்கு என்னால் சொல்லமுடியும். அவன்
இறந்து புதைக்கப்பட்டான். அவன் புதைக்கப்
பட்ட இடம் இங்கேயே நம்மிடையே இன்றும்
உள்ளது. 30தாவீது ஒரு தீர்க்கதரிசி. தேவன்
கூறிய சில செய்திகளை அவன் அறிந்திருந்
தான். தாவீதின் குடும்பத்திலுள்ள ஒருவரைத்
தாவீதைப் போன்று மன்னனாக்குவேன்
என்று தேவன் தாவீதுக்கு வாக்குறுதி அளித்
திருந்தார். 31அது நடக்கும் முன்பே தாவீது
அதனை அறிந்திருந்தான். எனவே தான் அவ
ரைக் குறித்து தாவீது இவ்வாறு கூறினான்:

‘அவர் மரணத்தின் இடத்தில் விடப்பட
வில்லை. அவர் சரீரம் கல்லறையில்
அழுகவில்லை.’
சங்கீதம் 16:10

தாவீது மரணத்தினின்று எழும்பும்
கிறிஸ்துவைக் குறித்துப் பேசினான். 32எனவே
தாவீதை அல்ல, இயேசுவையே தேவன் மர
ணத்தினின்று எழுப்பினார். நாங்கள் எல்லோ
ரும் இதற்கு சாட்சிகள். நாங்கள் அவரைக்
கண்டோம். 33இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டார். இப்போது இயேசு தேவ
னோடு, தேவனுடைய வலது பக்கத்தில் இருக்
கிறார். பிதா (தேவன்) பரிசுத்த ஆவியை
இயேசுவுக்குக் கொடுத்துள்ளார். பிதா கொடுப்

---

**மரணத்தின் இடத்தில்** இலக்கியப்படி “பாதா
ளம்.”

பதாக வாக்குறுதி அளித்தது பரிசுத்த ஆவியே
யாகும். எனவே இயேசு அந்த ஆவியை இப்
பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிறார்.
இதையே நீங்கள் பார்க்கவும், கேட்கவும் செய்கி
றீர்கள்.
34-35தாவீது பரலோகத்திற்கு எடுத்துக்கொள்
ளப்பட்டவரல்ல. பரலோகத்திற்கு எடுத்துக்
கொள்ளப்பட்டவர் இயேசுவே. தாவீது கூறி
னான்,

'தேவன் என் கர்த்தரிடம் சொன்னார்,
உம் எதிரிகள் அனைவரையும் உம்
அதிகாரத்தின் கீழ் கொண்டு வரும்வரை
என் வலதுபுறத்தில் உட்கார்ந்து கொள்
ளும்.'

சங்கீதம் 110:1

36"எனவே எல்லா யூத மனிதர்களும் இதை
உண்மையாகத் தெரிந்திருக்க வேண்டும். ஆண்
டவராகவும் கிறிஸ்துவாகவும் இருக்கும்படி
யாக இயேசுவை தேவன் உண்டாக்கினார்.
அவரே நீங்கள் சிலுவையில் அறைந்த
மனிதர்" என்றான்.
37மக்கள் இதைக் கேட்டபோது அவர்கள்
தங்கள் இதயத்தில் மிகவும் வருத்தம் அடைந்
தார்கள். அவர்கள் பேதுருவையும் பிற அப்
போஸ்தலரையும் நோக்கி, "நாங்கள் என்ன
செய்ய வேண்டும்?" என்று கேட்டார்கள்.
38பேதுரு அவர்களை நோக்கி, "நீங்கள்
ஒவ்வொருவரும் உங்கள் இருதயத்தையும்
வாழ்க்கையையும் மாற்றி, இயேசு கிறிஸ்து
வின் பெயரில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்
ளுங்கள். அப்போது தேவன் உங்கள் பாவங்
களை மன்னிப்பார். நீங்களும் பரிசுத்த ஆவி
யின் வரத்தைப் பெறுவீர்கள். 39இந்த வாக்
குறுதி உங்களுக்குரியது. அது உங்கள்
பிள்ளைகளுக்கும் தொலைவில் வாழ்கின்ற
எல்லா மக்களுக்கும் கூட உரியது. ஆண்ட
வராகிய நமது தேவன் தன்னிடம் அழைக்கிற
ஒவ்வொரு மனிதனுக்கும் அது உரியது"
என்று கூறினான்.
40வேறு பல வார்த்தைகளையும் கூறி
பேதுரு அவர்களை எச்சரித்தான். அவன்
அவர்களை, "இன்று வாழ்கின்ற மக்களின்
தீமைகளிலிருந்து உங்களைக் காத்துக்கொள்
ளுங்கள்" என்று வேண்டினான். 41பேதுரு
கூறியவற்றை ஏற்றுக்கொண்ட (விசுவாசித்த)
அந்த மக்கள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்
டனர். அந்த நாளில் விசுவாசிகளின் கூட்டத்
தில் சுமார் 3000 மக்கள் சேர்த்துக் கொள்ளப்
பட்டனர்.
42விசுவாசிகள் தொடர்ந்து ஒன்றாக சந்தித்
தனர். அப்போஸ்தலரின் போதனையை கற்
பதற்குத் தங்கள் நேரத்தைச் செலவிட்டனர்.
விசுவாசிகள் ஒருவரோடொருவர் பகிர்ந்து
கொண்டனர். அவர்கள் ஒருமித்து உண்டு,
ஒருமித்து பிரார்த்தனை செய்தார்கள்.

### விசுவாசிகளின் ஒருமனம்

43பல வல்லமை மிக்க, வியப்பான காரியங்
களை அப்போஸ்தலர்கள் செய்து கொண்டிருந்
தனர். ஒவ்வொருவரும் தேவனை மிகவும் மரி
யாதையாக உணர்ந்தனர். 44எல்லா விசுவாசி
களும் ஒருமித்து வசித்தனர். அவர்கள் எல்லா
வற்றையும் பகிர்ந்து கொண்டனர். 45விசுவா
சிகள் அவர்களது நிலங்களையும் அவர்களுக்
குச் சொந்தமான பொருட்களையும் விற்றனர்.
பின்னர் பணத்தைப் பங்கிட்டு, தேவைப்பட்ட
ஒவ்வொருவருக்கும் அவர்களது தேவைக்கேற்
பக் கொடுத்தனர். 46ஒவ்வொரு நாளும் விசுவா
சிகள் தேவாலயத்தில் சந்தித்தனர். அவர்களது
குறிக்கோள் ஒன்றாகவே இருந்தது. அவர்
களுடைய வீடுகளில் ஒருமித்து உண்டனர்.
அவர்கள் உணவைப் பங்கிட்டுக் கொள்
வதிலும் களிப்புமிக்க உள்ளங்களோடு உண்
பதிலும் மகிழ்ச்சியடைந்தனர். 47விசுவாசிகள்
தேவனை வாழ்த்தினர். எல்லா மக்களும்
அவர்களை விரும்பினர். ஒவ்வொரு நாளும்
அதிகமதிகமான மக்கள் இரட்சிக்கப்பட்டனர்.
விசுவாசிகளின் கூட்டத்தில் கர்த்தர் அம்மக்
களைச் சேர்த்துக்கொண்டிருந்தார்.

### ஊனமுற்ற மனிதனின் சுகம்

3 ஒருநாள் பேதுருவும் யோவானும் தேவால
யத்துக்குப் போனார்கள். பிற்பகல் மூன்று
மணியாகி இருந்தது. அது தினமும் தேவால
யத்தில் பிரார்த்தனை நேரமாகும். 2அவர்கள்
தேவாலயத்தின் முற்றத்தில் போய்கொண்டி
ருக்கும்போது, ஒரு மனிதன் அங்கிருந்தான்.
அவன் பிறந்தது முதல் ஊனமுற்றவனாக
இருந்தான். அவனால் நடக்க முடியாததால்
அவனது நண்பர்கள் சிலர் அவனைச் சுமந்து
வந்தனர். அவனது நண்பர்கள் ஒவ்வொரு
நாளும் அவனைத் தேவாலயத்துக்கு
அழைத்து வந்தனர். அவர்கள் ஊனமுற்ற
மனிதனைத் தேவாலயத்துக்கு வெளியே ஒரு
பெருங்கதவின் அருகே உட்கார வைத்தனர்.
அது அலங்கார வாசல் என அழைக்கப்
பட்டது. தேவாலயத்துக்குள் போகும் அனை
வரிடமும் அம்மனிதன் பணத்திற்காகப் பிச்சை
கேட்டான். 3அன்றையத்தினம் அம்மனிதன்
பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்குள்
போய்க்கொண்டிருப்பதைக் கண்டான். அவன்
அவர்களிடம் பணத்திற்காக வேண்டினான்.
4பேதுருவும் யோவானும் ஊனமுற்ற அம்
மனிதனை நோக்கி, "எங்களைப் பார்" என்
றனர். 5அம்மனிதன் அவர்களைப் பார்த்தான்.
அவர்கள் ஏதேனும் கொஞ்சம் பணம் கொடுப்
பார்களென அவன் எதிர்பார்த்தான். 6ஆனால்
பேதுரு, "என்னிடம் வெள்ளியோ, பொன்னோ
கிடையாது, ஆனால் உனக்குக் கொடுக்கக்
கூடிய வேறு பொருள் என்னிடம் உள்ளது.
நாசரேத்தைச் சேர்ந்த இயேசு கிறிஸ்துவின்
வல்லமையால் (நாமத்தினால்) எழுந்து நட!"
என்று கூறினான். 7பின் பேதுரு அம்மனித

னின் வலதுகையைப் பிடித்து அவனைத் தூக்
கினான். உடனே அம்மனிதனின் பாதங்களும்
கால்களும் பலம் பெற்றன. 8அம்மனிதன் குதித்
தெழுந்து, அவனது பாதங்களில் நின்று, நடக்க
ஆரம்பித்தான். அவன் அவர்களோடு தேவால
யத்துக்குள் சென்றான். அம்மனிதன் நடந்து
கொண்டும், குதித்துக் கொண்டும் தேவனை
வாழ்த்தியவனாய் இருந்தான். 9-10எல்லா மக்க
ளும் அவனை அடையாளம் கண்டு கொண்
டனர். எப்போதும் அலங்கார வாசல் அருகே
அமர்ந்து பணத்திற்காகப் பிச்சை கேட்கும்
ஊனமுற்ற மனிதனே அவன் என்று மக்கள்
அறிந்தனர். இப்போது அதே மனிதன் நடந்து
கொண்டிருப்பதையும், தேவனை வாழ்த்திக்
கொண்டிருப்பதையும் அவர்கள் கண்டார்கள்.
மக்கள் ஆச்சரியமடைந்தார்கள். எவ்வாறு
இது நடக்கக் கூடுமென்பதை அவர்களால்
புரிந்துகொள்ள முடியவில்லை.

### பேதுருவின் பிரசங்கம்

11அம்மனிதன் பேதுருவோடும் யோவா
னோடும் சேர்ந்து கொண்டிருந்தான். அம்மனி
தன் நலம் பெற்றதையறிந்து எல்லா மக்களும்
ஆச்சரியம் கொண்டனர். சாலமோனின் மண்ட
பத்தில் பேதுருவிடமும் யோவானிடமும் அவர்
கள் ஓடிச் சென்றனர். 12இதைக் கண்டதும்
பேதுரு, மக்களை நோக்கி, "எனது யூத சகோ
தரர்களே, நீங்கள் ஏன் இதைக் கண்டு ஆச்சரி
யப்படுகிறீர்கள்? இம்மனிதனை எங்களது
வல்லமையால் நடக்கும்படியாகச் செய்தோம்
என்பது போல் நீங்கள் எங்களைப் பார்க்
கிறீர்கள். நாங்கள் நல்லவர்களாக இருப்பதால்
இதைச் செய்ய முடிந்தது என்று நீங்கள்
நினைக்கிறீர்களா?

13 "இல்லை! தேவன் இதைச் செய்தார்!
அவர் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவ
னும் யாக்கோபின் தேவனும் ஆனவர். அவரே
நமது முன்னோர்களின் தேவன். அவர் தனது
விசேஷ ஊழியரான இயேசுவுக்கு மகிமையை
அளித்தார். ஆனால் நீங்களோ இயேசுவைக்
கொல்லும்படியாகக் கொடுத்தீர்கள். பிலாத்து
இயேசுவுக்கு விடுதலையளிக்க முடிவு செய்
தான். ஆனால் உங்களுக்கு இயேசு வேண்டா
தவரென நீங்கள் பிலாத்துவுக்குக் கூறினீர்கள்.
14இயேசு தூயவராகவும் நல்லவராகவும் இருந்
தார். ஆனால் நீங்கள் அவர் தேவையில்லை
யெனக் கூறினீர்கள். இயேசுவுக்குப் பதிலாக
ஒரு கொலையாளியை* உங்களுக்குத் தரும்
படியாக நீங்கள் பிலாத்துவை வேண்டினீர்கள்.
15உயிரளிக்கிறவரை நீங்கள் கொன்றீர்கள்.
ஆனால் தேவனோ அவரை மரணத்திலிருந்து
எழுப்பினார். நாங்கள் இதற்கு சாட்சிகள்.
எங்கள் கண்களாலேயே இதைக் கண்டோம்.
16இயேசுவின் வல்லமையே ஊனமுற்ற மனி
தனை நன்றாக நடக்கும்படிச் செய்தது. இயேசு
வின் வல்லமையில் நாங்கள் நம்பிக்கை
வைத்ததால் இது நிகழ்ந்தது. நீங்கள் இம்மனி
தனைப் பார்க்க முடிகிறது. உங்களுக்கு இவ
னைத் தெரியும். இயேசுவின் மீதுள்ள நம்பிக்
கையால் அவன் முழுக்கக் குணமடைந்தான்.
அது நிகழ்ந்ததை நீங்கள் எல்லாரும் கண்
டீர்கள்.

17"எனது சகோதரர்களே, நீங்கள் செய்
வதை அறியாததால் அவற்றை இயேசுவுக்குச்
செய்தீர்கள் என்பதை நான் அறிவேன். உங்
கள் தலைவர்களும் அதைப் புரிந்து கொள்ள
வில்லை. 18இக்காரியங்கள் நடந்தேறுமென
தேவன் கூறினார். அவரது கிறிஸ்து துன்புற்று
இறப்பார் என்பதை தேவன் தம் தீர்க்க
தரிசிகள் மூலமாகக் கூறினார். தேவன் இதை
எவ்வாறு நிறைவேற்றினார் என்பதை உங்
களுக்குக் கூறியுள்ளேன். 19எனவே நீங்கள்
உங்கள் இருதயங்களையும், வாழ்க்கையையும்
மாற்றிக்கொள்ளுங்கள்! தேவனிடம் திரும்
புங்கள். அவர் உங்கள் பாவங்களை மன்னிப்
பார். 20பின் ஆண்டவர் (தேவன்) உங்களுக்கு
ஆவிக்குரிய இளைப்பாறுதலை நல்குவார்.
கிறிஸ்துவாக இருக்கத் தேர்ந்தெடுக்கப்பட்
டவராகிய இயேசுவை அவர் உங்களுக்குக்
கொடுப்பார். 21ஆனால் எல்லாக் காரியங்களும்
மீண்டும் சரியாகும்வரை இயேசு பரலோகத்
தில் இருக்கவேண்டும். பல்லாண்டுகளுக்கு
முன்னரே தேவன் தனது பரிசுத்த தீர்க்கதரி
சிகள் மூலமாகப் பேசியபோதே, இவற்றைப்
பற்றிக் கூறியுள்ளார். 22மோசே, 'கர்த்தராகிய
உங்கள் தேவன் உங்களுக்கு ஒரு தீர்க்கதரி
சியை அளிப்பார். உங்கள் சொந்த மக்களிடை
யேயிருந்து (யூதரிடமிருந்து) அந்தத் தீர்க்கதரிசி
தோன்றுவார். அவர் என்னைப் போலவே
இருப்பார். அத்தீர்க்கதரிசி உங்களுக்குக் கூறு
கின்ற எல்லாவற்றிற்கும் நீங்கள் கீழ்ப்படிய
வேண்டும். 23எந்த மனிதனாகிலும் அந்தத்
தீர்க்கதரிசிக்குக் கீழ்ப்படிய மறுத்தால் அப்
போது அம்மனிதன் தேவனுடைய மக்களிட
மிருந்து பிரிந்து இறப்பான்'* என்றான்.
24தேவனுக்காகப் பேசிய சாமுவேலும் அவ
ருக்குப் பின் வந்த மற்ற எல்லாத் தீர்க்கதரிசிக
ளும் இக்காலத்தைக் குறித்துப் பேசினார்கள்.
25தீர்க்கதரிசிகள் பேசிய அனைத்தையும் நீங்
கள் பெற்றீர்கள். அதைப்போலவே தேவன்
உங்கள் முன்னோரோடு செய்த உடன்படிக்கை
யையும் நீங்கள் பெற்றீர்கள். தேவன் உங்கள்
தந்தையாகிய ஆபிரகாமிடம், 'உன் தலைமு
றையினரால் உலகின் ஒவ்வொரு தேசமும்
ஆசீர்வதிக்கப்படும்'* என்று கூறினார்.
26தேவன் தனது விசேஷ ஊழியரை (இயேசு)
அனுப்பியுள்ளார். தேவன் அவரை முதலாவ
தாக உங்களிடம் அனுப்பினார். உங்களை

---

**கொலையாளி** பரபாஸ், பிலாத்துவிடம் யூதர்கள் இயேசுவுக்குப் பதிலாக இவனையே விடுதலை செய்யும்படிக் கூறினர். லூக்கா 23:19 பார்க்க.

**கர்த்தராகிய ... இறப்பான்** உபா. 18:15,19.

**உன் ... படும்** ஆதியாகமம் 22:18; 26:24.

ஆசீர்வதிப்பதற்கு தேவன் இயேசுவை அனுப்பினார். நீங்கள் ஒவ்வொருவரும் தீய செயல்களைச் செய்கிறதிலிருந்து உங்களைத் திருப்புவதின் மூலம் தேவன் இதைச் செய்கிறார்” என்றான்.

## யூத ஆலோசனைச் சங்கத்தின் முன் பேதுருவும் யோவானும்

4 பேதுருவும், யோவானும் மக்களிடம் பேசிக்கொண்டிருக்கும்போது சில மனிதர்கள் அவர்களிடம் வந்தார்கள். யூத ஆசாரியர்களும், ஆலயத்தைப் பாதுகாக்கும் வீரர்களுக்குத் தலைவனும், சில சதுசேயரும்* அவர்களோடு வந்திருந்தனர். 2பேதுருவும், யோவானும் மக்களிடம் போதித்தவற்றைக் குறித்து அவர்கள் அதிருப்தி அடைந்திருந்தனர். அப்போஸ்தலர்கள் இயேசுவைக் குறித்து மக்களுக்குக் கூறும்போது, மக்கள் மரணத்திலிருந்து இயேசுவின் வல்லமையால் உயிர்த்தெழுவர் என்பதையும் போதித்தார்கள். 3யூதத் தலைவர்கள் பேதுருவையும் யோவானையும் பிடித்துச் சிறையில் அடைத்தனர். அது ஏற்கெனவே இரவு நேரமாயிருந்தது. எனவே அடுத்த நாள் வரைக்கும் பேதுருவையும் யோவானையும் சிறையில் வைத்திருந்தார்கள். 4ஆனால் பேதுருவும் யோவானும் செய்த போதனைகளை கேட்ட மக்களில் பலரும் அவர்கள் கூறியவற்றை விசுவாசித்தனர். அவர்களின் எண்ணிக்கை சுமார் ஐயாயிரம் பேராக இருந்தது.

5மறுநாள் யூதத் தலைவர்களும், அதிகாரிகளும், வேதபாரகரும் எருசலேமில் சந்தித்தனர். 6அன்னா (தலைமை போதகர்), காய்பா, யோவான் அலெக்சாந்தர் ஆகியோரும் அங்கிருந்தனர். தலைமை ஆசாரியனின் குடும்பத்தினர் அனைவரும் அங்கிருந்தனர். 7எல்லா ஜனங்களுக்கும் முன்பாகப் பேதுருவையும் யோவானையும் அவர்கள் நிறுத்தினர். யூத அதிகாரிகள் பலமுறை அவர்களிடம், “ஊனமுற்ற இந்த மனிதனை எவ்வாறு குணப்படுத்தினீர்கள்? எந்த வல்லமையைப் பயன்படுத்தினீர்கள்? யாருடைய அதிகாரத்தினால் நீங்கள் இதைச் செய்தீர்கள்?” என்று கேட்டார்கள். 8அப்போது பேதுரு பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டான். அவன் அவர்களை நோக்கி, “மக்களின் அதிகாரிகளே, முதிய தலைவர்களே, 9ஊனமுற்ற மனிதனுக்கு ஏற்பட்ட நல்ல காரியத்தைக் குறித்து எங்களை வினவுகிறீர்களா? அவனைக் குணப்படுத்தியது யார் என்று எங்களை வினவுகிறீர்களா? 10நீங்கள் யாவரும், யூத மக்கள் அனைவரும், இம்மனிதன் நாசரேத்தைச் சேர்ந்த இயேசு கிறிஸ்துவின் வல்லமையால் குணம் ஆக்கப்பட்டான் என்பதை அறிந்து கொள்ள வேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தீர்கள். தேவன் அவரை மரணத்திலிருந்து எழுப்பினார். இந்த மனிதன் ஊனமுற்றவனாயிருந்தான். ஆனால் இப்போது இயேசுவின் வல்லமையால் குணம் பெற்று உங்களுக்கு முன்பாக எழுந்து நிற்கிறான்.

> 11 ‘கட்டிடம் கட்டுபவர்களாகிய நீங்கள்
> இயேசுவை முக்கியமற்ற கல்லைப்
> போன்று கருதினீர்கள். ஆனால் இந்தக்
> கல்லோ மூலைக்கல்லாயிற்று.’
> *சங்கீதம் 118:22*

12மக்களை இரட்சிக்கக் கூடியவர் இயேசு ஒருவரே. உலகத்தில் மக்களை இரட்சிக்கும் வல்லமையுடன் தரப்பட்ட நாமம் இயேசுவினுடையது மட்டுமே. இயேசுவின் மூலமாகவே நாம் இரட்சிக்கப்படவேண்டும்!” என்றான்.

13பேதுருவும் யோவானும் வேறு சிறப்பான பயிற்சியோ கல்வியோ பெறவில்லை என்பதை யூதத் தலைவர்கள் புரிந்து கொண்டனர். பேதுருவும் யோவானும் பேசுவதற்கு அஞ்சவில்லை என்பதையும் அவர்கள் கண்டனர். அதனால் அதிகாரிகள் வியப்புற்றனர். பேதுருவும் யோவானும் இயேசுவுடன் இருந்தவர்கள் என்பதை உணர்ந்தனர். 14இரண்டு அப்போஸ்தலர்களுடன் ஊனமாயிருந்த அந்த மனிதன் நின்று கொண்டிருப்பதை அவர்கள் கண்டனர். அம்மனிதன் குணமடைந்திருப்பதை அவர்கள் கண்டனர். எனவே அப்போஸ்தலருக்கு எதிராக அவர்களால் எதையும் சொல்ல முடியவில்லை. 15அக்கூட்டத்திலிருந்து போகுமாறு யூதத் தலைவர்கள் அவர்களுக்குக் கூறினர். அதன் பின்பு தாங்கள் செய்யவேண்டியது என்னவென்று யூதத் தலைவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். 16அவர்கள், “இம்மனிதர்களை (அப்போஸ்தலரை) நாம் என்ன செய்வோம்? அவர்கள் பேரதிசயம் ஒன்றைச் செய்துள்ளார்கள் என்பதை எருசலேமின் ஒவ்வொரு மனிதனும் அறிவான். இது தெளிவு. இது உண்மையல்லவென்று நம்மால் சொல்ல முடியாது. 17ஆனால் இம்மனிதனைக் (இயேசுவை) குறித்து இவர்கள் மக்களுக்குச் சொல்வதற்கு அஞ்சும்படி செய்ய வேண்டும். அப்போது மக்களிடம் இச்செய்தி மேலும் பரவாது” என்றனர்.

18எனவே யூதத் தலைவர்கள் பேதுருவையும் யோவானையும் மீண்டும் உள்ளே அழைத்தனர். இயேசுவின் பெயரில் எதையும் கூறாதபடியும் போதிக்காதபடியும் அவர்கள் அப்போஸ்தலர்களுக்குக் கூறினர். 19ஆனால் பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பதிலாக, “நீங்கள் எதைச் சரியென்று நினைக்கிறீர்கள்? தேவன் எதை விரும்புவார்? நாங்கள் கீழ்ப்படியவேண்டுவது உங்களுக்கா அல்லது

---

**சதுசேயர்** முன்னணியிலுள்ள ஒரு யூதமதக் குழு. இவர்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள முதல் 5 புத்தகங்களை மட்டுமே ஒத்துக்கொள்வர். அவர்கள், மக்கள் மரணத்திற்குப் பிறகு மீண்டும் வாழ்கிறதில்லை என்று நம்புகிறவர்கள்.

தேவனுக்கா? 20நாங்கள் அமைதியாக இருக்க
முடியாது. நாங்கள் பார்த்தவற்றையும் கேட்
டவற்றையும் மக்களுக்குக் கண்டிப்பாகக் கூற
வேண்டும்" என்றார்கள். 21-22நடந்ததற்காக
எல்லா மக்களும் தேவனை வாழ்த்திக் கொண்
டிருந்தபடியால் யூதத் தலைவர்கள் அப்போஸ்
தலரைத் தண்டிப்பதற்கு ஒரு வழியும் காண
முடியவில்லை. (இந்த அதிசயம் தேவனிடமி
ருந்து வந்த ஒரு சான்று. குணமாக்கப்பட்ட
மனிதன் நாற்பது வயதிற்கும் மேற்பட்டவனா
யிருந்தான்!) எனவே யூத அதிகாரிகள் மீண்
டும் அப்போஸ்தலரை எச்சரித்து விடுவித்
தனர்.

### விசுவாசிகளின் பிரார்த்தனை

23பேதுருவும் யோவானும் யூதத் தலைவர்
களின் கூட்டத்தை விட்டு நீங்கி, அவர்களது
குழுவிற்குச் சென்றனர். முக்கிய ஆசாரியரும்,
முதிய யூத அதிகாரிகளும் அவர்களுக்குச்
சொன்ன எல்லாவற்றையும் அவர்கள் தங்கள்
குழுவினருக்குக் கூறினர். 24விசுவாசிகள் இத
னைக் கேட்டபோது, அவர்கள் ஒரே மனதுடன்
தேவனிடம் பிரார்த்தனை செய்தனர். அவர்கள்
எல்லோரும் ஒரே விதமாக உணர்ந்தனர்.
25அவர்கள், "கர்த்தாவே, வானத்தையும், பூமி
யையும், கடலையும், உலகத்திலுள்ள எல்லா
வற்றையும் உண்டாக்கியவர் நீர் ஒருவரே.
எங்களது தந்தையாகிய (முன்னோராகிய)
தாவீது உம் ஊழியனாக இருந்தான். பரிசுத்த
ஆவியின் உதவியால் அவன் கீழ்வரும் வார்த்
தைகளை எழுதினான்.

'தேசங்கள் ஏன் கூக்குரல் எழுப்பு
கின்றன? ஏன் உலக மக்கள் தேவனுக்
கெதிராகத் திட்டமிடுகின்றனர்? அவர்
கள் செய்வது வீணானது.
26 பூமியின் அரசர்கள் போருக்குத் தயாரா
கின்றனர். தலைவர்கள் அனைவரும்
தேவனுக்கும் அவருடைய கிறிஸ்துவிற்
கும் எதிராக ஒருமித்துக் கூடுகின்றனர்.'
சங்கீதம் 2:1-2

27ஏரோதுவும் பொந்தியு பிலாத்துவும்
தேசங்களும், எல்லா யூத ஜனங்களும் சேர்ந்து
எருசலேமில் இயேசுவுக்கு எதிராகக் கூடின
போது இவை அனைத்தும் உண்மையாகவே
நிகழ்ந்தன. இயேசு உமது தூய ஊழியர்.
அவரே கிறிஸ்துவாகும்படி நீர் உண்டாக்கிய
வர். 28கூடி வந்த இந்த மக்கள் உம் திட்டம்
நிறைவேறும்படி இயேசுவுக்கு எதிராகச்
செயல்பட்டனர். உம் வல்லமையின்படியும்,
சித்தத்தின்படியும் அது நிகழ்ந்தது. 29கர்த்
தாவே, இப்போதும் அவர்கள் கூறுவதைக்
கவனியும். அவர்கள் எங்களை அச்சமடையும்
படியாகச் செய்ய முயன்று கொண்டிருக்கி
றார்கள். கர்த்தாவே, நாங்கள் உமக்கு ஊழியம்
செய்பவர்கள். 30நீர் விரும்புகிறவற்றை நாங்
கள் தைரியமாகக் கூறுவதற்கு எங்களுக்கு
உதவும். நோயுற்றோரைக் குணப்படுத்தும்.
சான்றுகள் கொடும். உம் தூய பணியாள
ராகிய இயேசுவின் வல்லமையால் அதிசயங்
கள் நடக்கும்படிச் செய்யும்" என்று பிரார்த்
தனை செய்தனர்.

31விசுவாசிகள் பிரார்த்தனை செய்த பிறகு
அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்
கள் எல்லோரும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்
பட்டனர். அச்சமின்றி தேவனுடைய செய்
தியைத் தொடர்ந்து கூறினர்.

### விசுவாசிகளின் ஒருமித்த வாழ்வு

32விசுவாசிகள் அனைவரும் இருதயத்தில்
ஒரு மனமுள்ளவர்களாய் ஒரே ஊக்கமுடை
யோராய் இருந்தனர். அவர்களில் ஒருவரும்
தன்னிடமிருந்த பொருட்கள் தனக்கு மட்டுமே
சொந்தமானவை எனக் கூறவில்லை. மாறாக
அவர்கள் எல்லாவற்றையும் பகிர்ந்து கொண்
டனர். 33மிகுந்த வல்லமையோடு, அப்போஸ்
தலர்கள் கர்த்தராகிய இயேசு மரணத்தினின்று
உண்மையாகவே எழுப்பப்பட்டார் என்பதை
மக்களுக்குக் கூறினர். 34விசுவாசிகளை
தேவன் அதிகமாக ஆசீர்வதித்தார். அவர்கள்
அனைவரும் தேவையான பொருட்களைப்
பெற்றனர். வயல்களையோ, வீடுகளையோ
உடைய ஒவ்வொருவரும் அவற்றை விற்றனர்.
அப்பணத்தைக் கொண்டு வந்து 35அதனை
அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தனர். பின்பு
ஒவ்வொருவருக்கும் தேவைக்கேற்ப பொருட்
கள் கொடுக்கப்பட்டன.

36விசுவாசிகளில் ஒருவன் யோசேப்பு
என அழைக்கப்பட்டான். அப்போஸ்தலர்கள்
அவனை பர்னபாஸ் என்று அழைத்தனர்.
(இந்தப் பெயர், "பிறருக்கு உதவுகின்ற மனி
தன்" எனப் பொருள்படும்) அவன் சீப்புருவில்
பிறந்த லேவியன்.* 37அவனுக்குச் சிறிது நிலம்
இருந்தது. அவன் அந்த நிலத்தை விற்று
பணத்தைக் கொண்டு வந்து, அதை அப்போஸ்
தலர்களிடம் கொடுத்தான்.

### அனனியாவும் சப்பீராளும்

5 அனனியா என்றொரு மனிதன் வாழ்ந்து
வந்தான். அவனது மனைவியின் பெயர்
சப்பீராள். தனக்கிருந்த கொஞ்ச நிலத்தை அன
னியா விற்றான். 2ஆனால் தனக்குக் கிடைத்த
பணத்தில் ஒரு பகுதியை மட்டுமே அவன்
அப்போஸ்தலர்களுக்குக் கொடுத்தான். மீதியி
ருந்த பணத்தை இரகசியமாக தனக்கென
வைத்துக் கொண்டான். அவன் மனைவி
இதனை அறிந்து இத்திட்டத்துக்கு ஒப்புக்
கொண்டாள். 3பேதுரு "அனனியாவே, சாத்
தான் (பிசாசு) உனது இருதயத்தை ஆள ஏன்
அனுமதித்தாய்? நீ பொய் கூறி, பரிசுத்த

**லேவியர்** இவர்கள் லேவியின் குடும்பத்தினர். இவர்கள் தேவாலயத்தில் யூத ஆசாரியர்களுக்கு உதவினர்.

ஆவியை ஏமாற்ற முயன்றாய். நீ உனது
நிலத்தை விற்றாய். ஆனால் பணத்தில் ஒரு
பகுதியை ஏன் உனக்காக வைத்துக் கொண்
டாய்? 4நீ நிலத்தை விற்கும் முன்பு அது
உனக்கு உரியதாக இருந்தது. நீ அதனை
விற்ற பிறகும் அந்தப் பணத்தை நீ விரும்பிய
வகையில் செலவழித்திருக்கலாம். ஏன் இந்தத்
தீய செயலைச் செய்வதற்கு எண்ணினாய்?
நீ தேவனிடம் பொய் கூறினாய், மனிதரிடம்
அல்ல!” என்றான்.
5-6அனனியா இதனைக் கேட்டபோது, கீழே
விழுந்து உயிர்விட்டான். சில இளைஞர்கள்
வந்து அவன் சரீரத்தைப் பொதிந்தனர்.
அதனை வெளியே எடுத்துச் சென்று புதைத்
தனர். இதைக் குறித்துக் கேள்விப்பட்ட ஒவ்
வொரு மனிதனின் மனமும் அச்சத்தால் நிரம்
பியது.
7சுமார் மூன்று மணிநேரம் கழித்து அவ
னுடைய மனைவி சப்பீராள் உள்ளே வந்தாள்.
தனது கணவனுக்கு நிகழ்ந்ததைக் குறித்து
அவள் அறிந்திருக்கவில்லை. 8பேதுரு
அவளை நோக்கி, “உங்கள் நிலத்திற்காக எவ்
வளவு பணம் கிடைத்தது என்பதைக் கூறு.
இவ்வளவுதானா?” என்று கேட்டான்.
சப்பீராள் பதிலாக, “ஆம், இவ்வளவு தான்
எங்கள் நிலத்திற்காகக் கிடைத்தது” என்றாள்.
9பேதுரு அவளை நோக்கி, “கர்த்தருடைய
ஆவியைச் சோதிப்பதற்கு நீயும் உன் கண
வனும் ஏன் ஒத்துக்கொண்டீர்கள்? கவனி,
அந்தக் காலடிகளின் சத்தத்தைக் கேட்டாயா?
உனது கணவனைப் புதைத்த மனிதர்கள் கதவ
ருகே வந்துவிட்டனர். உன்னையும் அவர்கள்
அவ்வாறே சுமந்து செல்வர்” என்றான். 10அதே
கணத்தில் சப்பீராள் அவன் காலடியில்
விழுந்து உயிர்விட்டாள். அம்மனிதர்கள்
உள்ளே வந்து அவள் இறந்துவிட்டதைக் கண்
டனர். அவர்கள் அவளைச் சுமந்து சென்று,
அவளது கணவனின் அருகே புதைத்தனர்.
11விசுவாசிகளனைவரும் இந்தக் காரியங்
களைக் குறித்துக் கேட்ட பிற மக்களும் பயத்
தால் நிரம்பினர்.

## தேவனிடமிருந்து சான்றுகள்

12அப்போஸ்தலர்கள் அதிசயங்கள் பலவற்
றையும், வல்லமைமிக்க காரியங்களையும்
செய்தனர். எல்லா மக்களும் இந்தக் காரியங்
களைப் பார்த்தனர். சாலோமோனின் மண்ட
பத்தில் அப்போஸ்தலர்கள் கூடியிருந்தனர்.
அவர்கள் ஒரே நோக்கம் உடையோராக இருந்
தனர். 13வேறு எந்த மக்களும் அவர்களோடு
அங்கு நிற்பதற்கு தகுதியானவர்களாகத் தங்
களைக் கருதவில்லை. அப்போஸ்தலர்களை
எல்லா மக்களும் மிகவும் புகழ்ந்தார்கள். 14மே
லும் மேலும் மிகுதியான மக்கள் கர்த்தரில்
நம்பிக்கை வைத்தனர். பல பெண்களும் ஆண்
களும் விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்க்கப்
பட்டனர்.
15எனவே மக்கள் தங்களுடைய நோயாளி
களை தெருவுக்குக் கொண்டு வந்தனர். பேதுரு
அவ்வழியே வருகிறானென்று கேள்விப்பட்
டனர். எனவே மக்கள் நோயாளிகளை சிறு
கட்டில்களிலும் படுக்கைகளிலும் படுக்கவைத்
தனர். பேதுருவின் நிழல் நோயாளிகள் மீது
விழுந்தால் கூட அவர்கள் குணமாவதற்கு
அதுவே போதும் என்று அவர்கள் நம்பி
பேதுரு நடக்கும் வழியில் அவர்களைப் படுக்க
வைத்தனர். 16எருசலேமின் சுற்றுப்புறத்
திலுள்ள எல்லா ஊர்களிலுமிருந்து மக்கள்
வந்தனர். நோயாளிகளையும் பிசாசின் அசுத்த
ஆவிகளால் பாதிக்கப்பட்டோரையும் அவர்
கள் கொண்டு வந்தனர். இந்த மக்கள் எல்
லோரும் குணம் பெற்றனர்.

## தடை செய்யும் முயற்சி

17தலைமை ஆசாரியனும், அவருடைய
எல்லா நண்பர்களும் (சதுசேயர் எனப்பட்ட
குழுவினர்) மிகவும் பொறாமை கொண்டனர்.
18அவர்கள் அப்போஸ்தலரைப் பிடித்துச்
சிறையில் அடைத்தனர். 19ஆனால் இரவில்
கர்த்தருடைய தூதன் ஒருவன் சிறையின் கதவு
களைத் திறந்தான். தேவதூதன் அப்போஸ்தலர்
களை வெளியே அழைத்துச் சென்று அவர்
களை நோக்கி, 20“செல்லுங்கள். தேவாலயத்
தில் போய் நில்லுங்கள். இப்புதிய வாழ்க்கை
யைக் குறித்த ஜீவ வார்த்தைகள் அனைத்
தையும் மக்களுக்குக் கூறுங்கள்” என்றான்.
21அப்போஸ்தலர்கள் இதைக் கேட்டபோது
அவ்வாறே கீழ்ப்படிந்து தேவாலயத்துக்குச்
சென்றார்கள். அது அதிகாலை வேளையாக
இருந்தது. அப்போஸ்தலர்கள் மக்களுக்குப்
போதிக்க ஆரம்பித்தனர்.
தலைமை ஆசாரியனும் அவனது நண்
பர்களும் தேவாலயத்துக்கு வந்தனர். யூதத்
தலைவர்களும் எல்லா முக்கியமான யூத
முதியவர்களும் கூடி ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு
செய்தனர். அப்போஸ்தலர்களை அவர்களிடம்
அழைத்து வருதவதற்கெனச் சில மனிதர்களை
அனுப்பினர். 22அவர்கள் சிறைக்குப் போன
போது, அங்கு அப்போஸ்தலர்களைக் காண
வில்லை. எனவே அவர்கள் திரும்பிச்
சென்று, யூத அதிகாரிகளுக்கு அதனை
அறிவித்தனர். 23அம்மனிதர்கள், “சிறை பூட்டித்
தாளிடப்பட்டிருந்தது. சிறை வாயில்களருகே
காவலர்கள் நின்றனர். ஆனால் நாங்கள் கதவு
களைத் திறந்தபோது சிறையில் யாரு
மில்லை!” என்றனர். 24தேவாலயத்து காவல
ரின் தலைவனும் முக்கிய போதகர்களும் இத
னைக் கேட்டனர். அவர்கள் குழப்பமுற்றனர்.
அவர்கள் ஆச்சரிய முற்று, “இதனால் என்ன
நடக்கப்போகிறதோ?” என்றனர்.
25பின் மற்றொரு மனிதன் வந்து, “கேளுங்
கள்! நீங்கள் சிறையில் அடைத்த மனிதர்கள்
தேவாலயத்துக்குள் நிற்கின்றனர். அவர்கள்
மக்களுக்கு உபதேசித்துக் கொண்டிருக்கின்

றனர்” என்று அவர்களுக்குக் கூறினான்.
26காவலர் தலைவனும், காவலரும் வெ
ளியே வந்து அப்போஸ்தலரை அழைத்துச்
சென்றனர். மக்களுக்குப் பயந்ததால் வீரர்கள்
தங்கள் வலிமையைப் பயன்படுத்தவில்லை.
மக்கள் சினம் கொண்டு கற்களாலெறிந்து
அவர்களைக் கொல்லக்கூடுமென்று வீரர்கள்
பயந்தனர்.

27வீரர்கள், கூட்டத்திற்கு அப்போஸ்தலரை
அழைத்து வந்து, யூதத் தலைவர்களுக்கு முன்பு
அவர்களை நிற்கும்படியாகச் செய்தனர்.
தலைமை ஆசாரியன் அப்போஸ்தலர்களை
விசாரித்தான். 28அவன், “இந்த மனிதனைக்
(இயேசுவை) குறித்து உபதேசிக்கக் கூடாது
என உங்களுக்கு ஏற்கெனவே நாங்கள் உறுதி
யாகக் கட்டளை இட்டிருக்கவில்லையா?
ஆனால் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?
எருசலேமை உங்கள் உபதேசங்களால் நிரப்
பியுள்ளீர்கள். இந்த மனிதனின் (இயேசுவின்)
மரணத்திற்கு எங்களைக் காரணர்களாக ஆக்
குவதற்கு நீங்கள் முயல்கிறீர்கள்” என்றான்.

29பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும்
பதிலாக “நாங்கள் தேவனுக்குத்தான் கீழ்ப்
படிய வேண்டும். உங்களுக்கு அல்ல! 30நீங்கள்
இயேசுவைக் கொன்றீர்கள். அவரைச் சிலு
வையில் தொங்கும்படியாகச் செய்தீர்கள்.
ஆனால் நமது முன்னோரின் கர்த்தராகிய நம்
தேவன் இயேசுவை மரணத்தினின்று எழுப்
பினார்! 31தேவன் இயேசுவை உயர்த்தித்
தனது வலது பக்கத்தில் உட்கார வைத்துக்
கொண்டார். இயேசுவை எங்கள் தலைவரா
கவும் இரட்சகராகவும் ஆக்கினார். எல்லா யூதர்
களும் தங்கள் இருதயத்தையும் வாழ்க்கை
யையும் மாற்றும்படியாக தேவன் இதைச்
செய்தார். இப்போது தேவன் அவர்கள் பாவங்
களை மன்னிக்க முடியும். 32இக்காரியங்கள்
அனைத்தும் நடந்ததைக் கண்டோம். இவை
அனைத்தும் உண்மையென்று நாங்கள் கூற
முடியும். பரிசுத்த ஆவியானவரும் இவைய
னைத்தும் உண்மையென்று நிலை நாட்
டுகிறார். தேவன் அவருக்குக் கீழ்ப்படிகிற
அனைவருக்கும் பரிசுத்த ஆவியை அளித்
திருக்கிறார்” என்று கூறினர்.

33யூதத் தலைவர்கள் இந்த வார்த்தைகளைக்
கேட்டனர். அவர்கள் மிகுந்த சினம் கொண்
டனர். அப்போஸ்தலரைக் கொல்வதற்கு ஒரு
வழிகாண அவர்கள் திட்டமிட ஆரம்பித்தனர்.
34கூட்டத்திலிருந்த பரிசேயரில்* ஒருவர் எழுந்
தார். அவர் பெயர் கமாலியேல். அவர் வேத
பாரகராக இருந்தார். எல்லா மக்களும் அவரை
மதித்தனர். சில நிமிடங்கள் அப்போஸ்தலரை
வெளியே அனுப்புமாறு அவர் கூறினார்.
35பின் அவர் அங்கிருந்தோரை நோக்கி, “இஸ்ர
வேலின் மனிதர்களே, இம்மனிதருக்கெதிராகச்
செயல்படுமாறு நீங்கள் வகுக்கும் திட்டங்களில்
எச்சரிக்கையாக இருங்கள்! 36எப்போது
தெயுதாஸ் தோன்றினான் என்பதை நினைவு
கூருகிறீர்களா? அவன் தன்னை ஒரு முக்கிய
மான மனிதன் என்று கூறினான். சுமார்
400 மனிதர்கள் அவனோடு சேர்ந்து கொண்
டனர். ஆனால் அவன் கொல்லப்பட்டான்.
அவனைப் பின்பற்றியவர்கள் சிதறுண்டு ஓடி
னார்கள். அவர்களால் எதையும் செய்யக்கூட
வில்லை. 37அவனுக்குப்பின் கலிலேயாவிலி
ருந்து யூதா என்னும் பெயருள்ள மனிதன்
வந்தான். மக்கள்தொகை பதிவு செய்த காலத்
தில் அவன் வந்தான். அவன் தன்னைப் பின்
பற்றியவர்களுக்குத் தலைமையும் தாங்கி
னான். அவனும் கொல்லப்பட்டான். அவனைப்
பின்பற்றிய அனைவரும் சிதறியோடினர்.
38எனவே இப்போது உங்களுக்குச் சொல்கி
றேன். இம்மனிதரிடமிருந்து விலகியிருங்கள்.
அவர்களைத் தனித்து விட்டுவிடுங்கள். அவர்
கள் திட்டம் மனிதர்களிடமிருந்து உருவாகியி
ருந்தால் அது தகர்ந்துவிழும். 39ஆனால் அது
தேவனிடமிருந்து வந்ததெனில், நீங்கள் அவர்
களைத் தடுக்கவியலாது. நீங்கள் தேவனுட
னேயே சண்டையிடுபவர்களாக ஆவீர்கள்”
என்றார்.

கமாலியேல் கூறியவற்றிற்கு யூதத் தலை
வர்கள் உடன்பட்டனர். 40அவர்கள் அப்போஸ்
தலர்களை மீண்டும் உள்ளே அழைத்தனர்.
அவர்கள் அப்போஸ்தலரை அடித்து இயேசு
வைக் குறித்து மேலும் மக்களிடம் பேசா
திருக்குமாறு கூறினர். பின்னர் அப்போஸ்
தலர்களைப் போகுமாறு விடுவித்தனர். 41அப்
போஸ்தலர்கள் கூட்டத்தை விட்டுச் சென்றனர்.
இயேசுவின் பெயரில் வெட்கமுறும்படியாகக்
கிடைக்கப்பெற்ற பெருமைக்காக அப்போஸ்
தலர்கள் மகிழ்ந்தனர். 42மக்களுக்குப் போதிப்
பதை அப்போஸ்தலர்கள் நிறுத்தவில்லை.
இயேசுவே கிறிஸ்து என்னும் நற்செய்தியை
அப்போஸ்தலர்கள் மக்களுக்குத் தொடர்ந்து
கூறி வந்தனர். தேவாலயத்திலும், மக்களின்
வீடுகளிலும் ஒவ்வொரு நாளும் அவர்கள்
இதைச் செய்தனர்.

## உதவியாளர்கள் நியமனம்

6 இயேசுவைப் பின்பற்றுவோராகப் பற்பல
மக்கள் மாறிகொண்டிருந்தனர். ஆனால்
அதே வேளையில் கிரேக்க மொழி பேசுகின்ற
சீஷர்களுக்கும் மற்ற யூதச் சீஷர்களுக்கும் ஒரு
விவாதம் நடந்தது. சீஷர்கள் ஒவ்வொரு நாளும்
பெற்ற பங்கைப் போன்று அவர்களுடனிருந்த
விதவைகளுக்கு அளிக்கப்படவில்லை என்று
அவர்கள் கூறினர். 2பன்னிரண்டு அப்போஸ்
தலர்களும் சீஷர்கள் கூட்டத்தை ஒருமிக்க
அழைத்தனர். அப்போஸ்தலர்கள் அவர்களை
நோக்கி, “தேவனுடைய வார்த்தையைப் போ
திக்கும் எங்கள் வேலை தடையுற்றுள்ளது.

---

**பரிசேயர்கள்** யூத மதக்குழுவினர். இவர்கள் யூதச் சட்டங்களையும் பழக்கவழக்கங்களையும் கவனமாகக் கடைபிடிப்பவர்கள்.

அது நல்லதல்ல! மக்களுக்கு உண்பதற்கு எதை
யேனும் கொடுப்பதில் உதவுவதைக் காட்டி
லும் தேவனுடைய வார்த்தையை தொடர்ந்து
போதிப்பதே எங்களுக்கு நல்லது. 3எனவே,
சகோதரர்களே, உங்களில் ஏழு பேரைத்
தேர்ந்து எடுங்கள். மக்கள் நல்லவர்களெனக்
கருதுவோராக அவர்கள் இருக்கவேண்டும்.
அவர்கள் ஆவியாலும், ஞானத்தாலும் நிரம்
பப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். அவர்
கள் இந்த வேலையைச் செய்யும்படியாக
நாங்கள் அவர்களை நியமிப்போம். 4பின்னர்
நாங்கள் எங்கள் முழு நேரத்தையும் பிரார்த்
தனை செய்வதற்கும், தேவனுடைய வார்த்
தையைப் போதிப்பதற்கும் பயன்படுத்து
வோம்” என்றனர்.

5கூட்டத்தினர் எல்லோரும் இந்தத் திட்டத்தை
வரவேற்றனர். எனவே அவர்கள் ஏழு பேரைத்
தேர்ந்தெடுத்தனர். அவர்கள் ஸ்தேவான் (நம்
பிக்கை மிகுந்தவனும் பரிசுத்த ஆவியால்
நிரப்பப்பட்டவனுமான மனிதன்), பிலிப்பு,*
ப்ரோகோரஸ், நிகனோர், தீமோன், பர்மேனஸ்,
நிக்கோலஸ் (அந்தியோகியாவிலிருந்து வந்த
வனும் யூதனாக மாற்றப்பட்டவனும் ஆவான்)
ஆகியோராவர். 6அவர்கள் அந்த ஏழு
பேரையும் அப்போஸ்தலர்களுக்கு முன்பாக
அழைத்து வந்தனர். அப்போஸ்தலர்கள்
பிரார்த்தனை செய்து தங்கள் கைகளை அவர்
கள்மீது வைத்தனர்.

7தேவனுடைய வார்த்தை மென்மேலும்
பெரும் எண்ணிக்கையிலான மக்களை எட்
டியது. எருசலேமில் சீஷர்களின் எண்
ணிக்கை மேலும் மேலும் அதிகரித்தது. யூத
ஆசாரியர்களில் ஒரு பெரும் கூட்டத்தினரும்
கூட விசுவாசம் வைத்துக் கீழ்ப்படிந்தனர்.

### ஸ்தேவானுக்கு எதிராக யூதர்கள்

8ஸ்தேவான் (எழுவரில் ஒருவன்) மிகுந்த
ஆசீர்வாதத்தைப் பெற்றான். தேவனிடமிருந்து
ஸ்தேவானும் அற்புதங்கள் செய்யும் வல்லமை
யையும் தேவனிடமிருந்து மக்களுக்குச் சான்
றுகளைக் காட்டும் வல்லமையையும் பெற்
றிருந்தான். 9ஆனால் சில யூதர்கள் வந்து
ஸ்தேவானிடம் விவாதித்தனர். அவர்கள் ஒரு
யூத ஜெப ஆலயத்திலிருந்து வந்திருந்தனர்.
அது விடுதலை பெற்ற யூதர்களுக்குரிய* ஜெப
ஆலயமாய் இருந்தது. (இந்த ஜெப ஆலயம்
சிரேனே, அலெக்ஸாண்டிரியா ஆகிய இடங்
களிலுள்ள யூதர்களுக்கு உரியது) சிலிசியா,
ஆசியா ஆகிய இடங்களின் யூதர்களும் அவர்
களோடிருந்தனர். அவர்கள் எல்லோரும் வந்து
ஸ்தேவானிடம் விவாதித்தனர். 10ஞானத்தோடு
பேசுவதற்கு ஆவியானவர் ஸ்தேவானுக்கு உத
வினார். அவனுடைய வலிமையான சொற்கள்
யூதர்கள் அவனோடு வாதிட முடியாதபடி செய்
தன. 11எனவே யூதர்கள் சில மனிதர்களுக்கு
கூலி கொடுத்து “மோசேக்கு எதிராகவும், தேவ
னுக்கெதிராகவும் ஸ்தேவான் தீயவற்றைக்
கூறுவதை நாங்கள் கேட்டோம்” என்று சொல்
லச் செய்தார்கள். 12இவ்வாறு செய்ததால்
யூதர்கள் மக்களையும், முதிய யூதத் தலைவர்
களையும், வேதபாரகரையும் கலக்கமுறச்
செய்தனர். அவர்கள் மிகுந்த கோபமடைந்து
ஸ்தேவானிடம் வந்து அவனைப் பிடித்தனர்.
யூத அதிகாரிகள் கூடியிருந்த இடத்திற்கு
அவனை அழைத்துச் சென்றனர். 13யூதர்கள்
சிலரை அக்கூட்டத்திற்கு அழைத்து வந்தனர்.
ஸ்தேவானைக் குறித்துப் பொய் சொல்லும்படி
அவர்களுக்கு யூதர்கள் கூறியிருந்தனர். அந்த
மனிதர்கள், “இவன் (ஸ்தேவான்) எப்போதும்
பரிசுத்தமான இடத்தைக் (தேவாலயத்தை)
குறித்து கெட்டதையே சொல்கிறான். மோசே
யின் சட்டத்திற்கு எதிராகவே எப்போதும்
சொல்கிறான். 14நாசரேத்தைச் சேர்ந்த இயேசு
இந்த இடத்தை அழிப்பார் என்று அவன்
கூறியதை நாங்கள் கேட்டோம். நாம் கடைப்
பிடிக்குமாறு மோசே சொன்னவற்றை இயேசு
மாற்றுவார் என்றும் அவன் கூறினான்” என்
றனர். 15கூட்டத்தில் அமர்ந்திருந்த மக்கள் எல்
லோரும் ஸ்தேவானைக் கூர்ந்து நோக்கினர்.
அவனது முகம் தேவதூதனின் முகத்தைப்
போன்று தோன்றியது. அவர்கள் அதைக்
கண்டனர்.

### ஸ்தேவானின் பேச்சு

7 தலைமை ஆசாரியன் ஸ்தேவானை
நோக்கி, “இந்தக் காரியங்கள் எல்லாம்
உண்மைதானா?” என்று கேட்டான். 2ஸ்தே
வான் பதிலாக, “எனது யூத தந்தையரே,
சகோதரரே, நான் கூறுவதைக் கேளுங்கள்.
மகிமைபொருந்திய நமது தேவன் நமது தந்தை
யாகிய (முன்னோராகிய) ஆபிரகாமுக்குக்
காட்சிகொடுத்தார். ஆபிரகாம் மெசொபொதா
மியாவில் இருந்தார். அவர் ஆரானில் வாழ்
வதற்கு முன்பு நடந்த நிகழ்ச்சி இது. 3தேவன்
ஆபிரகாமை நோக்கி, ‘உன் நாட்டையும் உன்
உறவினர்களையும் விட்டுவிட்டு, நான் காண்
பிக்கும் நாட்டிற்குப் போ’* என்றார். 4எனவே
ஆபிரகாம் கல்தேயா நாட்டை விட்டுச் சென்
றார். ஆரானில் வசிப்பதற்காகச் சென்றார்.
ஆபிரகாமின் தந்தை இறந்த பிறகு, நீங்கள்
இப்போது வசிக்கிற இந்த இடத்திற்கு தேவன்
அவரை அனுப்பினார். 5ஆனால் தேவன்
ஆபிரகாமுக்கு இந்த நாட்டில் எதையும் கொடுக்
கவில்லை; ஒரு அடி நிலம் கூட கொடுக்க
வில்லை. ஆனால் ஆபிரகாமுக்கும் அவர்
குழந்தைகளுக்கும் எதிர்காலத்தில் இந்நாட்
டைக் கொடுப்பதாக தேவன் வாக்களித்தார்.
(ஆபிரகாமுக்குக் குழந்தை இல்லாதிருந்த

---

**பிலிப்பு** இவன் அப்போஸ்தலரான பிலிப்பு அல்ல.

**விடுதலை பெற்ற யூதர்கள்** இவர்களோ அல்லது இவர்களது தந்தைமார்களோ முன்பு அடிமைகளாக இருந்தனர். இப்போது விடுவிக்கப்பட்டுள்ளனர்.

**உன் ... போ** ஆதி. 12:1.

போது இது நடந்தது) 6தேவன் அவருக்குக்
கூறியது இதுவாகும். ‘உன் சந்ததியர் மற்
றொரு நாட்டில் வாழ்வர். அவர்கள் அந்நியர்
களாயிருப்பர். அந்நாட்டின் மக்கள் அவர்
களை அடிமைப்படுத்துவர்.* 400 வருடங்
களுக்கு அவர்களை மோசமாக நடத்துவர்.
7ஆனால் அவர்களை அடிமையாக்கிய நாட்
டினரை நான் தண்டிப்பேன்.’ தேவன் மேலும்,
‘இந்தக் காரியங்கள் நடந்தபின் உன் மக்கள்
அந்நாட்டிலிருந்து வெளியேறுவர். பின் உன்
மக்கள் இங்கு இந்த இடத்தில் என்னை
வழிபடுவர்’* என்றார். 8தேவன் ஆபிரகா
மோடு ஓர் உடன்படிக்கை பண்ணினார். இந்த
உடன்படிக்கையின் அடையாளமே விருத்தசே
தனமாகும். எனவே ஆபிரகாமுக்கு ஒரு மகன்
பிறந்ததும், அவன் பிறந்து எட்டு நாட்களான
பின் ஆபிரகாம் தன் மகனுக்கு விருத்தசேதனம்
செய்வித்தார். அவரது மகனின் பெயர்
ஈசாக்கு. ஈசாக்கும் தனது மகன் யாக்கோபுக்கு
விருத்தசேதனம் செய்வித்தார். யாக்கோபும்
தனது மக்களுக்கு அதைச் செய்தார். அந்த
மகன்களே பின்னர் பன்னிரண்டு தந்தையராக
மாறினர்.

9“இந்தத் தந்தையர் யோசேப்பைக் (அவர்
களது இளைய சகோதரன்) கண்டு பொறாமை
கொண்டனர். எகிப்தில் ஒரு அடிமையாக
யோசேப்பை அவர்கள் விற்றனர். ஆனால்
தேவன் யோசேப்போடு இருந்தார். 10யோசேப்
புக்கு அங்கு பல தொல்லைகள் நேர்ந்தாலும்,
தேவன் அத்தொல்லைகள் எல்லாவற்றிலிருந்
தும் அவரைக் காப்பாற்றினார். பார்வோன்
எகிப்தின் அரசனாக இருந்தான். அவன்
யோசேப்புக்கு தேவன் கொடுத்த ஞானத்தைக்
கண்டு அவரை விரும்பவும் நேசிக்கவும் செய்
தான். எகிப்தின் ஆளுநர் வேலையைப் பார்
வோன் யோசேப்புக்குக் கொடுத்தான். பார்
வோனின் வீட்டிலுள்ள எல்லா மக்களையும்
ஆளுவதற்கும் யோசேப்பை பார்வோன் அனு
மதித்தான். 11ஆனால் எகிப்திலும், கானானிலு
மிருந்த எல்லா நிலங்களும் வறண்டுபோயின.
அங்கு உணவு தானியங்கள் வளர முடியாதப
டிக்கு நாடு வறட்சியுற்றது. இது மக்களுக்குப்
பெரும் துன்பத்தை விளைவித்தது. நமது
தந்தையருக்கு உண்பதற்கு எதுவும் அகப்பட
வில்லை. 12ஆனால் எகிப்தில் உணவு
சேமித்து வைக்கப்பட்டிருப்பதை யாக்கோபு
கேள்விப்பட்டார். எனவே அவர் நமது தந்தை
யரை (யாக்கோபின் மகன்கள்) அங்கு அனுப்
பினார். (இது எகிப்துக்கு அவர்களின் முதற்
பயணமாயிருந்தது.) 13பின்னர் அவர்கள்
இரண்டாம் முறையாகவும் அங்குச் சென்றார்
கள். இந்தத் தடவை யோசேப்பு தன் சகோதரர்
களிடம் தான் யாரென்பதைக் கூறினான்.
பார்வோனுக்கும் யோசப்பின் குடும்பத்தைக்
குறித்துத் தெரிய வந்தது. 14பின் யோசேப்பு
தன் தந்தையாகிய யாக்கோபை எகிப்துக்கு
அழைத்து வருவதற்கென்று சில மனிதர்களை
அனுப்பினார். தன் எல்லா உறவினர்களை
யும் கூட (அங்கு மொத்தம் 75 பேர்) அழைத்தார்.
15எனவே யாக்கோபு எகிப்திற்குப் போனார்.
யாக்கோபும் நமது தந்தையரும் (முதாதையர்
கள்) அவர்களின் மரணம் மட்டும் அங்கு
வாழ்ந்தனர். 16பின்னர் அவர்கள் சரீரங்கள்
சீகேமுக்கு அனுப்பப்பட்டன. அவர்கள் அங்கு
ஒரு கல்லறையில் வைக்கப்பட்டனர். (வெள்ளி
யைக் கொடுத்து ஏமோரின் மகன்களிடமிருந்து
சீகேமில் ஆபிரகாம் வாங்கிய கல்லறை அது.)

17“எகிப்தில் யூத மக்களின் தொகை பெரு
கியது. நமது மக்கள் அங்கு மென்மேலும்
பெருகினர். (தேவன் ஆபிரகாமுக்குக் கொடுத்த
வாக்குறுதியைச் செயல்படுத்த வேண்டிய
காலம் நெருங்கிக் கொண்டிருந்தது) 18பின்
இன்னொரு மன்னன் எகிப்தை ஆளத் தொடங்
கினான். அவனுக்கு யோசேப்பைப்பற்றி
எதுவும் தெரியாது. 19இந்த மன்னன் நமது
மக்களை ஏமாற்றினான். நம் முன்னோருக்கு
அவன் தீமை செய்தான். அம்மன்னன்
அவர்களது குழந்தைகளை இறக்கும்படியாக
வெளியே போடும்படிச் செய்தான். 20இக்காலத்
தில் தான் மோசே பிறந்தார். அவர் அழகான
குழந்தையாகவும் தேவனுக்கு இனிமையான
வராகவும் இருந்தார். தன் தந்தையின் வீட்டில்
மூன்று மாத காலத்துக்கு மோசேயை வைத்
துப் பராமரித்தார்கள். 21மோசேயை வெளியில்
விட்டபொழுது பார்வோனின் மகள் அவனை
எடுத்துத் தன் சொந்தக் குழந்தையைப் போன்
றே வளர்த்தாள். 22தங்களிடமிருந்த எல்லா
ஞானத்தையும் எகிப்தியர்கள் மோசேக்கு
கற்பித்தனர். அவர் கூறியவற்றிலும் செய்தவற்
றிலும் வல்லமைமிக்கவராக இருந்தார்.

23“மோசே நாற்பது வயதாக இருந்தபோது
தன் சகோதரர்களான யூத மக்களைச் சந்திப்
பது நல்லது என்று நினைத்தார். 24எகிப்தியன்
ஒருவன் யூதன் ஒருவனுக்கு எதிராகத் தவறு
செய்வதை அவர் கண்டார். எனவே அவர்
யூதனுக்கு சார்பாகச் சென்றார். யூதனைப்
புண்படுத்தியதற்காக மோசே எகிப்தியனைத்
தண்டித்தார். மோசே அவனைப் பலமாகத்
தாக்கியதால் அவன் இறந்தான். 25தேவன்
அவர்களை மீட்பதற்காக அவரைப் பயன்படுத்
துவதை யூத சகோதரர்கள் புரிந்து கொள்வார்
கள் என்று மோசே எண்ணினார். ஆனால்
அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. 26மறுநாள்
இரண்டு யூதர்கள் சண்டையிடுவதை மோசே
பார்த்தார். அவர்களுக்குள் அமைதியை நிலை
நாட்ட அவர் முயன்றார். அவர், ‘மனிதரே,
நீங்கள் இருவரும் சகோதரர்கள். நீங்கள் ஏன்
ஒருவரையொருவர் மோசமாக நடத்துகிறீர்
கள்?’ என்றார். 27ஒருவனுக்கு எதிராகத்
தவறிழைத்த மற்றொருவன் மோசேயைத்
தள்ளிவிட்டான். அவன் மோசேயை நோக்கி,

---

**உன் ... அடிமைப்படுத்துவர்** ஆதி. 15:13-14.

**இந்த ... வழிபடுவர்** ஆதி. 15:14, யாத். 3:12.

‘நீ எங்கள் அதிகாரியாகவும் நீதிபதியாகவும்
இருக்கும்படி யாராவது கூறினார்களா?
இல்லை. 28நேற்று எகிப்தியனைக் கொன்றது
போல என்னைக் கொல்லுவாயோ?’* என்
றான். 29அவன் இவ்வாறு கூறுவதைக் கேட்ட
மோசே எகிப்தை விட்டுச் சென்றார். மீதியா
னில் வாழும்படியாகச் சென்றார். அவர் அங்கு
அந்நியனாக இருந்தார். மீதியானில் இருந்த
போது, மோசேக்கு இரண்டு மகன்கள் பிறந்
தனர்.

30“மோசே நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகு
சீனாய் மலையின் அருகேயுள்ள வனாந்தரத்
தில் இருந்தார். எரிகின்ற புதரின் ஜூவாலை
யிலிருந்து ஒரு தேவதூதன் அவருக்குத் தோன்
றினான். 31அதைக் கண்டு மோசே வியந்தார்.
நன்கு பார்க்கும்படியாக அவர் அருகே சென்
றார். மோசே ஒரு சத்தத்தைக் கேட்டார். அது
தேவனுடைய குரலாக இருந்தது. 32தேவன்
கூறினார், ‘ஆபிரகாமின் தேவனும், ஈசாக்
கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய
உங்கள் முன்னோரின் தேவன் நானே’*
என்றார். மோசே பயத்தால் நடுங்க ஆரம்பித்
தார். அவர் புதரைப் பார்க்கவும் அஞ்சினார்.
33கர்த்தர் அவரிடம், ‘உன் மிதியடிகளைக்
கழற்று. நீ நின்று கொண்டிருக்கும் இந்த இடம்
பரிசுத்த பூமி. 34எகிப்தில் எனது மக்கள்
மிகவும் துன்புறுவதைக் கண்டிருக்கிறேன்.
என் மக்கள் அழுவதைக் கேட்டிருக்கிறேன்.
அவர்களைக் காப்பாற்றுவதற்காக இறங்கி
வந்துள்ளேன். மோசே! இப்பொழுது வா, நான்
எகிப்திற்கு உன்னைத் திரும்பவும் அனுப்
புகிறேன்’* என்றார்

35“யூதர்கள் அவர்களுக்கு வேண்டாமெனக்
கூறிய அதே மோசே அவர்தான். அவர்கள்
அவரிடம், ‘நீ எங்களுக்கு அதிபதியாகவும்,
நீதிபதியாகவும் இருக்கமுடியுமென்று யாரா
வது கூறினார்களா? இல்லை!’ என்றனர்.
தேவன் அதிபதியாகவும் மீட்பராகவும் மோசே
யாகிய அதே மனிதனை அனுப்பினார்.
தேவன் ஒரு தேவதூதனின் உதவியோடு
மோசேயை அனுப்பினார். எரியும் புதரில்
மோசே கண்ட தேவதூதன் இவனே. 36அதனால்
மோசே மக்களை வெளியே நடத்திச் சென்றார்.
அவர் வல்லமை வாய்ந்த செயல்களையும்
அற்புதங்களையும் செய்தார். எகிப்திலும்,
செங்கடலிலும், வனாந்தரத்திலும் 40 ஆண்டு
கள் இவற்றை மோசே செய்தார். 37‘தேவன்
உங்களுக்கு ஒரு தீர்க்கதரிசியைக் கொடுப்பார்.
உங்கள் மக்களிடமிருந்தே அந்தத் தீர்க்கதரிசி
வருவார். அவர் என்னைப் போலவே இருப்
பார்’* என்று கூறிய அதே மோசேதான்
அவர். 38வனாந்தரத்தில் யூதர்களின் கூட்டத்
தோடு இருந்தவர் இவரேதான். சீனாய்
மலையில் தன்னோடு பேசிய தேவதூதனுடன்
இருந்தார். நமது முன்னோரோடும் அவர் இருந்
தார். மோசே தேவனிடமிருந்து ஜீவன் தரும்
கட்டளைகளைப் பெற்றார். மோசே நமக்கு
அந்தக் கட்டளைகளைக் கொடுத்தார்.

39“ஆனால் நமது தந்தையர் (முன்னோர்
கள்), மோசேக்குக் கீழ்ப்படிய மறுத்தனர்.
அவர்கள் அவரைத் தள்ளி ஒதுக்கினர். மீண்
டும் எகிப்துக்குப் போகவேண்டுமென அவர்
கள் விரும்பினர். 40நம் தந்தையர் ஆரோனை
நோக்கி, ‘மோசே நம்மை எகிப்து நாட்டிற்கு
வெளியே வழிநடத்தினார். ஆனால் அவருக்கு
என்ன நேர்ந்தது என்பதை நாங்கள் அறி
யோம். எனவே எங்களுக்கு முன்னே போக
வும் எங்களுக்கு வழிகாட்டவும் சில தெய்வங்
களை உண்டாக்கும்’* என்றனர். 41எனவே
மக்கள் கன்றுக்குட்டியைப் போன்ற ஒரு சிலை
உண்டாக்கினர். பின் அவர்கள் அதற்குப்
படைப்பதற்காகப் பொருட்களைக் கொண்டு
வந்தனர். தங்கள் கைகளால் உண்டாக்கிய
அதனைக் கண்டு மக்கள் மகிழ்ந்தனர்!
42ஆனால் தேவன் அவர்களுக்கு எதிராகத்
திரும்பினார். வானத்திலுள்ள பொய்யான
தெய்வங்களின் கூட்டத்தை வழிபடுவதிலிருந்து
அவர்களைத் தடுப்பதை தேவன் நிறுத்திக்
கொண்டார். தீர்க்கதரிசிகளின் நூலிலும்
இவைதான் எழுதப்பட்டுள்ளன. தேவன் சொல்
கிறார்,

> ‘யூத மக்களாகிய நீங்கள் எனக்கு இரத்த
> படைப்புக்களையோ பலிகளையோ 40
> ஆண்டுகளாக வனாந்தரத்தில் கொண்டு
> வரவில்லை.
> 43 உங்களோடு மோளேகிற்காக (பொய்
> யான தெய்வமாகிய) ஒரு கூடாரத்தையும்
> ரெம்பான் என்னும் நட்சத்திர உருவத்
> தையும் சுமந்து சென்றீர்கள். இந்த விக்
> கிரகங்களை நீங்கள் வழிபடுவதற்காக
> உருவாக்கினீர்கள். எனவே நான் உங்
> களை பாபிலோனுக்கு அப்பால் அனுப்
> புவேன்.’
>
> *ஆமோஸ் 5:25-27*

44“வனாந்தரத்தில் பரிசுத்தக் கூடாரம்* நமது
தந்தையரிடம் (முன்னோரிடம்) இருந்தது.
இந்தக் கூடாரத்தை எப்படி உண்டாக்குவது
என்று தேவன் மோசேயிடம் கூறினார். தேவன்
காட்டிய திட்டத்தின்படியே மோசே அதை
உண்டாக்கினார். 45பின்னால் பிற தேசங்களின்
நிலங்களைக் கைப்பற்றும்படியாக யோசுவா
நமது தந்தையரை வழிநடத்தினார். நமது

---

**நீ ... கொல்லுவாயோ** *யாத். 2:14.*

**ஆபிரகாமின் ... நானே** *யாத். 3:6.*

**உன் ... அனுப்புகிறேன்** *யாத். 3:5-10.*

**தேவன் ... இருப்பார்** *உபா. 18:15.*

**மோசே .... உண்டாக்கும்** *யாத். 32:1.*

**பரிசுத்த கூடாரம்** *இது சாட்சிக்குரிய கூடாரம். நகரத்தக்கது. பத்து கட்டளைகளை இங்கு வைத்திருந்தனர். மோசே காலத்தில் தேவன் தம் மக்களைச் சந்திக்கும் இடம்.*

மக்கள் அங்குச் சென்றபோது அங்கிருந்த மக்களை தேவன் வெளியேறும்படிச் செய்தார். நமது மக்கள் இப்புதிய நிலத்திற்குச் சென்றபொழுது, இதே கூடாரத்தைத் தம்முடன் எடுத்துச் சென்றனர். தாவீதின் காலம் வரைக்கும் நம் மக்கள் அதை வைத்திருந்தனர்.
46தேவன் தாவீதைக் குறித்து மகிழ்ந்தார். தாவீது தேவனிடம் யாக்கோபின் தேவனாகிய அவருக்கு ஒரு வீட்டைக் கட்ட அனுமதி வேண்டினான்.
47ஆனால் சாலமோன் தான் (தாவீதின் மகன்) அந்த ஆலயத்தைக் கட்டினான்:
48“ஆனால் உன்னதமானவர் (தேவன்) மனிதர் தங்கள் கைகளால் கட்டும் வீடுகளில் வசிப்பதில்லை. தீர்க்கதிரிசி இதனையே எழுதினார். கர்த்தர் கூறுகிறார்,

‘வானம் எனது சிம்மாசனம்.
49 பூமி எனது பாதங்கள் வைக்கும் இடம்.
எனக்காக எவ்விதமான வீட்டைக் கட்டப் போகிறீர்கள்? ஓய்வெடுக்க எனக்கு ஓர் இடம் தேவையில்லை.
50 நான் இவை எல்லாவற்றையும் உண்டாக்கினேன் என்பதை நினைவுகூருங்கள்!’”
ஆமோஸ் 5:25-27

என்றான்.
51பின் ஸ்தேவான், “பிடிவாதமான யூதத் தலைவர்களே! நீங்கள் உங்கள் இருதயங்களை தேவனுக்குக் கொடுக்கவில்லை! நீங்கள் அவர் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்க மாட்டீர்கள்! பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் கூற முயல்வதை எப்போதும் எதிர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்கள் தந்தையர் இதனைச் செய்தார்கள். நீங்களும் அவர்களைப் போலவே இருக்கிறீர்கள்! 52உங்கள் தந்தையர் தங்கள் காலத்தில் வாழ்ந்த ஒவ்வொரு தீர்க்கதரிசியையும் புண்படுத்தினார்கள். அந்தத் தீர்க்கதரிசிகள் வெகு காலத்திற்கு முன்பே நீதியுள்ள ஒருவர் (கிறிஸ்து) வருவார் எனக் கூறினார்கள். ஆனால் உங்கள் தந்தையர் அத் தீர்க்கதரிசிகளைக் கொன்றார்கள். இப்பொழுது நீங்கள் நீதியுள்ள அவருக்கு எதிராகத் திரும்பியுள்ளீர்கள். 53மோசேயின் சட்டத்தைப் பெற்றவர்கள் நீங்கள். தமது தேவதூதர்களின் மூலமாகத் தேவன் இந்தச் சட்டத்தை உங்களுக்குக் கொடுத்தார். ஆனால் நீங்களோ இந்தச் சட்டத்திற்குக் கீழ்ப்படிவதில்லை” என்றான்.

### ஸ்தேவான் கொல்லப்படுதல்

54இவற்றை ஸ்தேவான் கூறுவதை யூதத் தலைவர்கள் கேட்டனர். அவர்கள் மிகுந்த சினம் அடைந்தனர். யூதத் தலைவர்கள் பித்துப் பிடித்தவர்களைப்போல, ஸ்தேவானை நோக்கிப் பற்களைக் கடித்தனர். 55ஆனால் ஸ்தேவானோ பரிசுத்த ஆவியால் நிரம்பியவனாக இருந்தான். ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்தான். அவன் தேவனுடைய மகிமையைக் கண்டான். தேவனுடைய வலது பக்கத்தில் இயேசு நிற்பதைக் கண்டான். 56ஸ்தேவான், “பாருங்கள்! பரலோகம் திறந்திருப்பதை நான் பார்க்கிறேன். தேவனுடைய வலபக்கத்தில் மனித குமாரன் (இயேசு) நிற்பதை நான் காண்கிறேன்!” என்றான்.
57பின் யூத அதிகாரிகள் எல்லோரும் உரத்த குரலில் சத்தமிட்டார்கள். அவர்கள் கைகளால் தமது காதுகளைப் பொத்திக் கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் ஸ்தேவானை நோக்கி ஓடினர். 58அவர்கள் அவனை நகரத்திற்கு வெளியில் கொண்டு சென்று அவன் சாகும் வரை அவன்மீது கற்களை எறிந்தார்கள். ஸ்தேவானுக்கு எதிராகப் பொய் கூறியவர்கள் தங்களது மேலாடைகளை சவுல் என்னும் இளைஞனிடம் கொடுத்தார்கள். 59பின் அவர்கள் ஸ்தேவானின் மேல் கற்களை வீசினார்கள். ஆனால் ஸ்தேவான் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தான். அவன், “கர்த்தராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக் கொள்ளும்!” என்றான். 60அவன் முழங்காலில் நின்று, “கர்த்தரே! இந்தப் பாவத்திற்காக அவர்களைக் குற்றம் சாட்டாதிரும்!” என்று பிரார்த்தித்தான். இதைக் கூறிய பிறகு ஸ்தேவான் இறந்து போனான்.

8 ஸ்தேவானின் கொலை ஒரு நல்ல நிகழ்ச்சியே என்று சவுல் அச்சமயம் ஒப்புக் கொண்டான்.

### விசுவாசிகளுக்கு உபத்திரவம்

2-3சில நல்ல (பக்தியுள்ள) மனிதர்கள் ஸ்தேவானைப் புதைத்தனர். அவர்கள் அவனுக்காகச் சத்தமிட்டு அழுதனர். எருசலேமிலுள்ள விசுவாசிகளின் கூட்டத்திற்கு அன்றிலிருந்து யூதர்கள் தீங்கிழைக்க ஆரம்பித்தனர். அவர்களை அதிகமாகத் துன்புறுமாறு யூதர்கள் செய்தனர். அக்கூட்டத்தை அழிப்பதற்குச் சவுலும் முயன்று கொண்டிருந்தான். சவுல் அவர்களின் வீடுகளுக்குள் நுழைந்தான். அவர்களில் ஆண்களையும் பெண்களையும் வெளியே இழுத்து வந்து சிறைக்குள் தள்ளினான். எல்லா விசுவாசிகளும் எருசலேமைவிட்டு அகன்றனர். அப்போஸ்தலர்கள் மட்டுமே அங்குத் தங்கினர். யூதேயா, மற்றும் சமாரியா ஆகிய நாடுகளின் பல பகுதிகளுக்கும் விசுவாசிகள் சென்றனர். 4விசுவாசிகள் எல்லா இடங்களிலும் பரவியிருந்தனர். விசுவாசிகள் சென்ற இடங்களில் எல்லாம் மக்களுக்கு நற்செய்தியைக் கூறினர்.

### சமாரியாவில் பிலிப்பு

5பிலிப்பு சமாரியாவிலுள்ள ஒரு நகரத்திற்குச் சென்றான். அவன் கிறிஸ்துவைப் பற்றிப் போதித்தான். 6அங்குள்ள மக்கள் பிலிப்பு கூறியதைக் கேட்டனர். அவன் செய்து கொண்

டிருந்த அதிசயங்களைக் கண்டனர். பிலிப்பு
கூறிய செய்திகளைக் கவனமாகக் கேட்டனர்.
7அம்மக்களில் பலரினுள்ளும் அசுத்த ஆவிகள்
இருந்தன. அசுத்த ஆவிகள் அவர்களை விட்
டுப் போகும்படியாக பிலிப்பு கட்டளையிட்
டான். அவை வெளியே வந்தபோது, ஆவிகள்
மிகுந்த சத்தமிட்டன. பாரிச வியாதிக்காரர்கள்
பலரும், ஊனமுற்றவர்கள் பலரும் அங்கிருந்த
னர். பிலிப்பு அவர்களையும் குணப்படுத்தி
னான். 8இதனால் அந்நகர மக்கள் மிகுந்த சந்
தோஷம் அடைந்தனர்.

9ஆனால் அந்நகரில் சீமோன் என்னும் பெய
ருள்ள மனிதன் இருந்தான். பிலிப்பு அங்கு
வருமுன்னர், சீமோன் மந்திர தந்திரங்களைச்
செய்தான். சமாரியா மக்களைத் தனது தந்திரங்
களால் வியப்புறச் செய்தான். 10முக்கியமான,
மற்றும் முக்கியமற்ற மக்கள் அனைவரும்
சீமோன் கூறியவற்றை நம்பினர். மக்கள்,
"'மகத்தான வல்லமை' எனப்படும் தேவனு
டைய வல்லமை இம்மனிதனுக்கு உள்ளது!"
என்றனர். 11சீமோன் தனது மந்திர தந்திரங்
களால் மக்களை நீண்ட நாட்களாக வியக்க
வைத்தான். மக்கள் அவனைப் பின்பற்றுவோ
ராயினர். 12ஆனால் பிலிப்பு தேவனுடைய
இராஜ்யத்தைப் பற்றிய நற்செய்தியையும்,
இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும் மக்க
ளுக்கு எடுத்துக் கூறினான். ஆண்களும் பெண்
களும் பிலிப்புவை நம்பினர். அவர்கள்
ஞானஸ்நானம் பெற்றனர். 13சீமோனும் கூட
நம்பிக்கை வைத்து ஞானஸ்நானம் பெற்றான்.
சீமோன் பிலிப்புவோடு இருந்து வந்தான்.
பிலிப்பு செய்த அற்புதங்களையும், வல்லமை
மிக்க காரியங்களையும் கண்ட சீமோன் வியப்
படைந்தான்.

14அப்போஸ்தலர்கள் இன்னும் எருசலேமில்
இருந்தனர். தேவனுடைய வார்த்தையைச் சமா
ரியாவின் மக்கள் ஏற்றுக்கொண்டனர் என்
பதை அவர்கள் கேள்விப்பட்டார்கள். 15ஆகவே
பேதுருவையும் யோவானையும் அவர்களிடம்
அனுப்பினார்கள். பேதுருவும் யோவானும்
வந்தபோது சமாரிய விசுவாசிகள் பரிசுத்த
ஆவியைப் பெறவேண்டுமென்று அவர்கள்
பிரார்த்தனை செய்தனர். 16இந்த மக்கள் கர்த்
தராகிய இயேசுவின் பெயரில் ஞானஸ்நானம்
பெற்றிருந்தார்கள். ஆனால் பரிசுத்த ஆவியான
வர் அவர்களில் ஒருவர்மீதும் இறங்கி வர
வில்லை. இந்த நோக்கத்திற்காகப் பேதுருவும்
யோவானும் பிரார்த்தனை செய்தனர்.
17இரண்டு அப்போஸ்தலர்களும் அவர்கள் கை
களை மக்கள் மீது வைத்தார்கள். அப்போது
அம்மக்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றனர்.

18அப்போஸ்தலர்கள் தமது கைகளை மக்
கள்மீது வைத்தபோது ஆவியானவர் அவர்
களுக்கு அளிக்கப் பெற்றதைச் சீமோன் பார்த்
தான். எனவே சீமோன் அப்போஸ்தலர்களிடம்
பணத்தைக் கொண்டுவந்து 19"நான் ஒருவன்
மீது எனது கையை வைத்ததும், அவன்
பரிசுத்த ஆவியைப் பெறும்படிக்கு இந்த வல்ல
மையை எனக்குத் தாருங்கள்" என்றான்.

20பேதுரு சீமோனை நோக்கி, "நீயும் உனது
பணமும் அழிவைக் காணட்டும்! தேவனுடைய
வரத்தைப் பணத்தால் வாங்கமுடியும் என்று
நீ எண்ணினாய். 21இந்த வேலையில் நீ பங்
கைப் பெற முடியாது. தேவனுக்கு முன்பாக
உனது இருதயம் நேர்மையாக இல்லை.
22உனது மனதை மாற்று! நீ செய்த இந்தத்
தீய காரியத்திலிருந்து விலகி விடு. கர்த்தரை
நோக்கி பிரார்த்தனை செய். நீ இவ்வாறு
நினைத்ததை அவர் மன்னிக்கக் கூடும். 23நீ
வெறுப்பினாலும், பொறாமையினாலும்
நிரம்பி, பாவத்தால் ஆளப்பட்டிருப்பதை நான்
பார்க்கிறேன்" என்றான்.

24சீமோன் பதிலாக, "கர்த்தரிடம் (தேவனி
டம்) நீங்கள் இருவரும் எனக்காகப் பிரார்த்
தனை செய்யுங்கள். நீங்கள் சொன்னவை
எனக்கு நேராதபடிக்கு பிரார்த்தனை செய்யுங்
கள்!" என்றான்.

25தாங்கள் கண்ட, இயேசு செய்த காரியங்
களை, அப்போஸ்தலர்கள் மக்களுக்குக் கூறி
னர். கர்த்தரின் செய்தியை அப்போஸ்தலர்
மக்களுக்கு கூறினர். பின்பு அவர்கள் எருசலே
முக்குத் திரும்பிச் சென்றனர். வழியில் அவர்
கள் சமாரியர்களின் ஊர்கள் பலவற்றிற்குச்
சென்று, மக்களுக்கு நற்செய்தியைப் போதித்
தனர்.

### எத்தியோப்பிய அதிகாரியும் பிலிப்புவும்

26தேவதூதன் ஒருவன் பிலிப்புவிடம் பேசி
னான். "புறப்பட்டு தெற்கு நோக்கிச் செல்.
எருசலேமிலிருந்து காசாவிற்குப் போகும்
பாதைக்குச் செல். அந்தப் பாதை பாலைவனம்
வழியாகச் செல்கிறது" என்றான். 27எனவே
பிலிப்பு தயாராகிப் புறப்பட்டுச் சென்றான்.
பாதையில் எத்தியோப்பியாவிலிருந்து வந்த
மனிதன் ஒருவனைக் கண்டான். அம்மனிதன்
ஆண்மையிழந்தவன்.* எத்தியோப்பியாவின்
அரசியாகிய கந்தாகே என்பவளின் அலுவ
லரில் அவன் ஒரு முக்கிய அதிகாரியாக
இருந்தான். அவன் அவளது கருவூலத்திற்குப்
பொறுப்பாயிருந்தான். அம்மனிதன் எருசலே
மில் வழிபாடு செய்யச் சென்றிருந்தான். 28இப்
போது அவன் வீட்டிற்குப் பயணமாகிக்கொண்
டிருந்தான். அவன் தனது இரதத்தில் அமர்ந்து
தீர்க்கதரிசியாகிய ஏசாயாவின் புத்தகத்தில்
சில பகுதிகளை வாசித்துக்கொண்டிருந்தான்.
29ஆவியானவர் பிலிப்புவை நோக்கி, "இரதத்
தின் அருகே போய் காத்திரு" என்றார்.
30எனவே பிலிப்பு இரதத்தை நோக்கி ஓடி
னான். அம்மனிதன் தீர்க்கதரிசியாகிய ஏசாயா
வின் நூலிலிருந்து வாசிப்பதைக் கேட்டான்.
பிலிப்பு அவனை நோக்கி, "நீ படித்துக்கொண்

---

**ஆண்மையிழந்தவன்** குடும்ப வாழ்விற்குத் தகு
தியற்றவன். ஆள்வோர்கள் இத்தகையவர்களுக்கு
முக்கிய பதவிகள் கொடுத்தனர்.

டிருப்பதைப் புரிந்துகொள்ள முடிகிறதா?”
என்று கேட்டான்.
31 அம்மனிதன், “நான் எப்படிப் புரிந்து
கொள்ளமுடியும்? அதை விளக்கிச் சொல்லக்
கூடிய ஒருவர் தேவை!” என்றான். அவன்
பிலிப்புவை இரதத்தினுள் ஏறி, அவனோடு
உட்காருமாறு வேண்டினான். 32 வேதவாக்கி
யத்தில் அவன் படித்துக்கொண்டிருந்த பகுதி
இதோ.

*அவர் கொல்லப்படுவதற்காக அழைத்துச்*
*செல்லப்படும் ஆட்டைப் போன்றிருந்தார்.*
*அவர், தனது முடி வெட்டப்படுகிறபோது*
*சத்தமிடாதிருக்கிற ஆட்டுக் குட்டியைப்*
*போன்றிருந்தார்.*
33 *அவர் அவமானப்படுத்தப்பட்டார். அவர்*
*உரிமைகள் பறிக்கப்பட்டன. உலகில்*
*அவர் வாழ்க்கை முடிந்தது. அவர் குடும்*
*பம் (வழித்தோன்றல்கள்) பற்றி சொல்*
*வதற்கு எதுவுமில்லை.”*

*ஏசாயா 53:7-8*

34 அதிகாரி பிலிப்புவிடம், “யாரைக் குறித்
துத் தீர்க்கதரிசி சொல்கின்றார் என்பதைத்
தயவுசெய்து எனக்குக் கூறுங்கள். தன்னைக்
குறித்தா அல்லது வேறு யாரைக் குறித்து
அவர் பேசுகிறார்?” என்று கேட்டான்.
35 பிலிப்பு பேச ஆரம்பித்தான். அவன் வேத
வாக்கியத்தின் இந்தப் பகுதியிலிருந்து பேச
ஆரம்பித்து, அம்மனிதனுக்கு இயேசுவைப்
பற்றிய நற்செய்தியைச் சொல்லத் தொடங்
கினான்.

36 அவர்கள் மேலும் பயணம் செய்கையில்
தண்ணீர் இருந்த ஓர் இடத்திற்கு அருகே
வந்தனர். அதிகாரி, “பார்! இங்கு தண்ணீர்
உள்ளது. நான் ஞானஸ்நானம் பெறுவதற்குத்
தடை ஏது?” என்றான்.
37* 38 அதிகாரி இரதத்தை நிறுத்தக்
கட்டளையிட்டான். பிலிப்புவும் அதிகாரியும்
நீருக்குள் இறங்கினர். பிலிப்பு அவருக்கு
ஞானஸ்நானம் கொடுத்தான். 39 அவர்கள் நீரிலி
ருந்து வெளிவந்தபோது கர்த்தரின் ஆவியான
வர் பிலிப்புவை எடுத்துச் சென்றுவிட்டார்.
அதிகாரி அவனை மீண்டும் பார்க்கவில்லை.
அதிகாரி தனது வீட்டை நோக்கிப் பயணமா
னான். அவன் மகிழ்வுடன் இருந்தான்.
40 ஆசோத்து என்னும் பட்டணத்தில் பிலிப்பு
பின்னர் காட்சி தந்தான். அவன் செசரியா
என்னும் நகரத்திற்குப் போய்க் கொண்டிருந்
தான். அவன் நற்செய்தியை ஆசோத்திலிருந்து
செசரியா செல்லுகிற எல்லா ஊர்களிலும்
போதித்தான்.

### சவுல் மனம் மாறுதல்

9 சவுல் கர்த்தரின் (இயேசுவின்) சீஷரைப்
பயமுறுத்தவும், கொல்லவும் எப்பொ
ழுதும் முயன்று கொண்டிருந்தான். எனவே
அவன் தலைமை ஆசாரியனிடம் சென்றான்.
2 தமஸ்கு நகரத்தில் ஜெப ஆலயங்களிலுள்ள
யூதர்களுக்குக் கடிதங்களை எழுதுமாறு அவ
ரைக் கேட்டான். தமஸ்குவில் கிறிஸ்துவின்
வழியைப் பின்பற்றுகிற சீஷர்களைக் கண்டு
பிடிக்கும் அதிகாரத்தை அவனுக்குக் கொடுக்
குமாறு தலைமை ஆசாரியரைக் கேட்டான்.
அங்கு ஆணோ, பெண்ணோ, விசுவாசிகள்
எவரையேனும் கண்டால் அவன் அவர்க
ளைக் கைதுசெய்து எருசலேமிற்குக் கொண்டு
வர விரும்பினான்.

3 எனவே சவுல் தமஸ்குவிற்கு புறப்பட்டுச்
சென்றான். அவன் நகரத்திற்கு அருகே வந்த
போது, அவனைச் சுற்றிலும் மிகுந்த பிரகா
சமான ஒளி வானிலிருந்து திடீரென வெளிச்
சமிட்டது. 4 சவுல் தரையில் விழுந்தான். அவன்
தன்னோடு பேசுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான்.
“சவுலே, சவுலே! நீ ஏன் புண்படுத்தும் காரி
யங்களை எனக்குச் செய்து கொண்டிருக்
கிறாய்?” என்றது அச்சத்தம்.

5 சவுல், “ஆண்டவரே, நீர் யார்?” என்று
கேட்டான். அந்தச் சத்தம் பதிலாக, “நான்
இயேசு. 6 நீ புண்படுத்த நினைப்பது என்
னையே. நீ எழுந்து நகரத்துக்குள் போ.
அங்கிருக்கும் ஒருவர் நீ செய்யவேண்டியதை
உனக்குக் கூறுவார்” என்றது.

7 சவுலோடு பயணம் செய்த மனிதர் நின்
றனர். அவர்கள் எதுவும் சொல்லவில்லை.
அம்மனிதர் சத்தத்தைக் கேட்டனர். ஆனால்
யாரையும் பார்க்கவில்லை. 8 சவுல் தரையிலி
ருந்து எழுந்தான். அவன் கண்களைத் திறந்த
போது அவனால் பார்க்க முடியவில்லை.
எனவே சவுலோடு வந்த மனிதர்கள் அவன்
கையைப் பிடித்து, அவனைத் தமஸ்குவுக்கு
அழைத்துச் சென்றனர். 9 மூன்று நாட்கள் சவு
லால் பார்க்க முடியவில்லை, அவன் எதையும்
உண்ணவோ, எதையும் பருகவோ இல்லை.

10 தமஸ்குவில் இயேசுவின் சீஷன் ஒருவன்
இருந்தான். அவன் பெயர் அனனியா. கர்த்தர்
ஒரு தரிசனத்தில் அவனிடம் வந்து பேசினார்.
கர்த்தர், “அனனியாவே!” என்று அழைத்தார்.
அனனியா பதிலாக, “ஆண்டவரே, இதோ
இருக்கிறேன்” என்றான்.

11 கர்த்தர் அனனியாவை நோக்கி, “எழுந்து
நெடும்வீதி எனப்படும் தெருவுக்குப் போ. யூதா
ஸின்* வீட்டைக் கண்டுபிடி. தர்சு நகரத்தின்
சவுல் என்ற மனிதனுக்காக விசாரி. அவன்
அங்குப் பிரார்த்தனை செய்து கொண்டிருக்

---

**வாக்கியம் 37** பின்னால் வந்த சில படிகளில் 37 வது வாக்கியம் சேர்க்கப்பட்டுள்ளது. பிலிப்பு பதிலாக, “நீ முழு மனதோடு நம்பினால் உன்னால் முடியும்” என்றார். அந்த அதிகாரி, “நான் இயேசு கிறிஸ்துதான் தேவனுடைய குமாரன் என்று நம்புகிறேன்” என்றான்.

**யூதாஸ்** இவன் அப்போஸ்தலனாகிய யூதாஸ் அல்ல.

கிறான். 12சவுல் ஒரு காட்சி கண்டான். அக்
காட்சியில் அனனியா என்றொரு மனிதன்
அவனிடம் வந்து கரங்களை அவன்மீது வைத்
தான். அப்போது சவுலால் மீண்டும் பார்க்க
முடிந்தது" என்றார். 13ஆனால் அனனியா
பதிலாக, "ஆண்டவரே (இயேசுவே) பல மக்கள்
இம்மனிதனைக் (சவுலை) குறித்து எனக்குக்
கூறியிருக்கிறார்கள். எருசலேமிலுள்ள உமது
தூய மக்களுக்கு இந்த மனிதன் செய்த தீமை
களை அவர்கள் எனக்குச் சொன்னார்கள்.
14இப்போது அவன் (சவுல்) இங்கு தமஸ்கு
வுக்கு வந்துள்ளான். உம்மில் விசுவாசம்
வைக்கிற எல்லோரையும் கைது செய்யும்
அதிகாரத்தைத் தலைமைப் போதகர்கள் அவ
னுக்கு அளித்துள்ளனர்" என்றான்.

15ஆனால் கர்த்தர் அனனியாவிடம், "போ!
நான் சவுலை ஒரு முக்கிய வேலைக்காகத்
தேர்ந்துள்ளேன். அவன் மன்னருக்கும், யூத
மக்களுக்கும் பிற நாடுகளுக்கும் என்னைப்
பற்றிச் சொல்லவேண்டும். 16என் பெயருக்காக
அவன் படவேண்டிய துன்பங்களை நான் சவு
லுக்குக் காட்டுவேன்" என்றார்.

17எனவே அனனியா புறப்பட்டு, யூதாஸின்
வீட்டிற்குச் சென்றான். அவன் தனது கை
களைச் சவுலின் மீது வைத்து, "சவுலே, எனது
சகோதரனே, கர்த்தர் இயேசு என்னை அனுப்
பினார். நீ இங்கு வந்து கொண்டிருந்தபொழுது
வழியில் நீ பார்த்தவரும் அவரே. நீ மீண்டும்
பார்வை அடையவும், பரிசுத்த ஆவியால்
நிரம்பவும் இயேசு என்னை இங்கு அனுப்
பினார்" என்றான். 18உடனே மீன் செதில்கள்
போன்றவை சவுலின் கண்களிலிருந்து விழுந்
தன. சவுலால் மீண்டும் பார்க்க முடிந்தது.
சவுல் எழுந்து ஞானஸ்நானம் பெற்றான்.
19அவன் ஆகாரம் உண்டு, பலம் பெற்றவனாய்
உணர்ந்தான்.

### சவுல் தமஸ்குவில் போதித்தல்

சில நாட்கள் தமஸ்குவில் சவுல் இயேசுவின்
சீஷர்களோடு இருந்தான். 20ஜெப ஆலயங்களில்
இயேசுவைக் குறித்துப் போதிக்க ஆரம்பித்
தான். மக்களுக்கு, "இயேசு தேவனுடைய குமா
ரன்!" என்று கூறினான்.

21சவுலைக் கேட்ட எல்லா மக்களும் வியப்
புற்றனர். அவர்கள், "இவன் எருசலேமிலிருந்த
அதே மனிதன். இந்தப் பெயரை (இயேசு)
நம்பிய மக்களை அழிக்க முற்பட்டுக் கொண்
டிருந்தான்! அவன் இங்கும் அதைச் செய்வதற்
காகவே வந்தான். இயேசுவின் சீஷர்களைக்
கைது செய்து எருசலேமிலுள்ள தலைமை
ஆசாரியர்களிடம் அழைத்துச் செல்வதற்கு
வந்தான்" என்றனர். 22ஆனால் சவுலோ மென்
மேலும் வல்லமையில் பெருகினான். அவன்
இயேசுவே கிறிஸ்து என நிரூபித்தான். தமஸ்கு
வில் அவன் சான்றுகள் வலுவாக இருந்தபடி
யால் யூதர்கள் அவனோடு வாக்குவாதம்
செய்ய இயலவில்லை.

### சவுல் தப்பிச் செல்லுதல்

23பல நாட்களுக்குப் பிறகு, யூதர்கள் சவு
லைக் கொல்லத் திட்டமிட்டனர். 24சவுலுக்காக
நகரத்தின் கதவுகளை இரவும் பகலும் யூதர்கள்
காவல் செய்து கொண்டிருந்தனர். அவர்கள்
அவனைக் கொல்ல விரும்பினர். ஆனால்
சவுல் அவர்களின் சதித்திட்டத்தைக் குறித்து
சொல்லப்பட்டிருந்தான். 25ஒரு நாள் இரவில்
சில சீஷர்கள் அவன் நகரத்திலிருந்து வெளியே
றுவதற்கு உதவினர். சீஷர்கள் அவனை ஒரு
கூடையில் வைத்தனர். நகரக்கோட்டையிலி
ருந்த ஒரு துவாரத்தின் வழியாக கூடையை
இறக்கி அவனை வெளியே விட்டனர்.

### எருசலேமில் சவுல்

26பிறகு சவுல் எருசலேமுக்குச் சென்றான்.
சீஷர் குழுவில் சேர்ந்துகொள்ள அவன் முயற்
சித்தான். ஆனால் அவர்கள் எல்லோரும்
அவனைக் கண்டு பயந்தனர். சவுல் உண்மை
யாகவே இயேசுவைப் பின்பற்றுகிறவன் என்
பதை அவர்கள் நம்பவில்லை. 27ஆனால்
பர்னபா சவுலை ஏற்றுக்கொண்டு அவனை
அப்போஸ்தலரிடம் அழைத்து வந்தான்.
பர்னபா அப்போஸ்தலருக்குத் தமஸ்குவுக்குச்
செல்லும் பாதையில் சவுல் கர்த்தரை தரிசித்
ததைச் சொன்னான். கர்த்தர் சவுலிடம் பேசிய
வகையை பர்னபா அப்போஸ்தலருக்கு விளக்
கினான். பின் அவன் அப்போஸ்தலர்களுக்கு
இயேசுவுக்காக பயமின்றி தமஸ்குவில் மக்க
ளுக்கு சவுல் போதித்ததையும் சொன்னான்.

28சவுலும் சீஷரோடு தங்கினான். பயமின்றி
கர்த்தரைப் பற்றி எருசலேமின் எல்லா பகுதிக
ளுக்கும் சென்று போதித்தான். 29கிரேக்கமொழி
பேசிய யூதரிடம் சவுல் அவ்வப்போது
பேசினான். அவர்களோடு விவாதங்கள் நடத்
தினான். ஆனால் அவனைக் கொல்வதற்கு
அவர்கள் முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.
30சகோதரர்கள் (விசுவாசிகள்) இதைப்பற்றி
அறிந்தபோது அவர்கள் சவுலை செசரியா
நகரத்திற்கு அழைத்துச் சென்றனர். செசரியா
விலிருந்து தர்சு நகரத்திற்கு அவர்கள் சவுலை
அனுப்பினர்.

31யூதேயா, கலிலேயா, சமாரியா, ஆகிய
இடங்களிலுள்ள சபையினர் அமைதியுடன்
வாழ்ந்தார்கள். பரிசுத்த ஆவியானவரின் உத
வியால் வலிமையூட்டப்பட்டுக் கொண்டிருந்
தார்கள். தாங்கள் வாழ்ந்த வகையால் கர்த்
தரை அவர்கள் மதித்தனர் என்பதை விசுவா
சிகள் காட்டினர். ஏனெனில் பரிசுத்த ஆவியா
னவரின் உதவியினால் விசுவாசிகள் குழு
பெருகி வளர்ந்தது.

32எருசலேமைச் சுற்றிலுமிருந்த எல்லா
ஊர்கள் வழியாகவும் பேதுரு பயணமானான்.
லித்தாவில் வாழ்ந்த விசுவாசிகளை* அவன்

---

**விசுவாசிகள்** பரிசுத்தமானவர்கள். இயேசுவில் விசுவாசமுடையோரின் பெயர்.

*சந்தித்தான். 33அங்கு பக்கவாத வியாதியால்*
*பீடிக்கப்பட்ட ஐனேயா என்ற பெயருள்ள ஒரு*
*வனை அவன் கண்டான். கடந்த எட்டு ஆண்டு*
*களாக ஐனேயாவால் அவனது படுக்கையை*
*விட்டு நகர முடியவில்லை. 34பேதுரு அவனி*
*டம், “ஐனேயாவே, இயேசு கிறிஸ்து உன்னைக்*
*குணமாக்குகிறார். எழுந்து உன் படுக்கையை*
*மடக்கு. உன்னால் இப்போது இதனைச் செய்ய*
*முடியும்!” என்றான். ஐனேயா உடனே எழுந்து*
*நின்றான்.*

*35லித்தாவில் வாழ்ந்த எல்லா மக்களும்*
*சாரோனின் மக்களும் அவனைக் கண்டனர்.*
*இம்மக்கள் கர்த்தரிடம் திரும்பினார்கள்.*

### யோப்பாவில் பேதுரு

*36யோப்பா நகரில் தபித்தா என்னும்*
*பெயருள்ள இயேசுவின் சீஷப் பெண் இருந்*
*தாள். (அவளது கிரேக்க பெயரான, தொர்காள்,*
*“மான்” எனப் பொருள்பட்டது) அவள்*
*மக்களுக்கு எப்போதும் நன்மையையே செய்*
*தாள். தேவைப்பட்ட மக்களுக்குப் பண உதவி*
*யும் செய்து வந்தாள். 37பேதுரு லித்தாவிலிருக்*
*கும்போது, தபித்தா நோய்வாய்ப்பட்டு இறந்*
*தாள். அவர்கள் அவளது சரீரத்தைக் கழுவி*
*மாடியில் ஓர் அறையில் வைத்திருந்தனர்.*
*38யோப்பாவில் சீஷர்கள் பேதுரு லித்தாவில்*
*இருப்பதைக் கேள்விப்பட்டனர். (லித்தா யோப்*
*பாவுக்கு அருகிலுள்ளது). எனவே அவர்கள்*
*இரண்டு மனிதர்களைப் பேதுருவிடம் அனுப்*
*பினர். அவர்கள் அவனிடம் “விரைந்து எங்க*
*ளிடம் சீக்கிரம் வாரும்!” என்று வேண்டினர்.*
*39பேதுரு தயாராகி அவர்களோடு போனான்.*
*அவன் வந்து சேர்ந்தபொழுது அவனை*
*மாடிக்கு அழைத்துச் சென்றார்கள். விதவை*
*கள் எல்லோரும் பேதுருவைச் சூழ்ந்து நின்*
*றனர். அவர்கள் அழுது கொண்டிருந்தனர்.*
*தொர்காள் உயிரோடிருந்தபோது செய்த*
*அங்கிகளையும், பிற ஆடைகளையும் பேதுரு*
*வுக்குக் காட்டினர். 40பேதுரு எல்லா மக்க*
*ளையும் அறைக்கு வெளியே அனுப்பினான்.*
*அவன் முழங்காலில் நின்று பிரார்த்தனை*
*செய்தான். பின் அவன் தபித்தாவின் சரீரத்*
*துக்கு நேராகத் திரும்பி, “தபித்தாவே, எழுந்து*
*நில்!” என்றான். அவள் கண்களைத் திறந்தாள்.*
*அவள் பேதுருவை கண்டபோது, எழுந்து*
*அமர்ந்தாள். 41அவன் அவளுக்கு நேராகக்*
*கையை நீட்டி, அவள் எழுந்திருக்கும்படி*
*உதவினான். பின் அவன் விசுவாசிகளையும்,*
*விதவைகளையும் அறைக்குள் அழைத்தான்.*
*அவர்களுக்குத் தபித்தாவைக் காட்டினான்.*
*அவள் உயிரோடிருந்தாள்! 42யோப்பாவி*
*லுள்ள மக்கள் எல்லோரும் இதனை அறிந்*
*தனர். அவர்களில் பலர் கர்த்தரை நம்பினர்.*
*43பேதுரு யோப்பாவில் பல நாட்கள் தங்*
*கினான். தோல் தொழிலாளியான சீமோன்*
*என்னும் பெயருள்ள ஒரு மனிதனோடு அவன்*
*தங்கினான்.*

### பேதுருவும் கொர்நேலியுவும்

10 *செசரியா நகரில் கொர்நேலியு என்னும்*
*மனிதன் இருந்தான். ரோமப் படையில்*
*“இத்தாலிய” வகுப்பில் அவன் ஒரு படை*
*அதிகாரியாக இருந்தான். 2கொர்நேலியு நல்ல*
*(பக்தியுள்ள) மனிதன். அவனும் அவன் வீட்*
*டில் வாழ்ந்த எல்லா மக்களும் உண்மையான*
*தேவனை வணங்கினர். தனது பணத்தின்*
*பெரும் பகுதியையும் அவன் ஏழை மக்களுக்*
*குக் கொடுத்தான். கொர்நேலியு தேவனிடம்*
*எப்போதும் பிரார்த்தனை செய்து கொண்டி*
*ருந்தான். 3ஒருநாள் மதியத்திற்குப்பின் மூன்று*
*மணியளவில் கொர்நேலியு ஒரு காட்சியைக்*
*கண்டான். அவன் தெளிவாக அதைக் கண்*
*டான். அக்காட்சியில் தேவனிடமிருந்து ஒரு*
*தூதன் அவனிடம் வந்து, “கொர்நேலியுவே!”*
*என்றான்.*

*4கொர்நேலியு தேவதூதனைக் கண்டு*
*பயந்து, “ஆண்டவரே, என்ன வேண்டும்?”*
*என்றான்.*

*தேவதூதன் கொர்நேலியுவிடம், “தேவன்*
*உனது பிரார்த்தனைகளுக்குச் செவிசாய்த்*
*தார். நீ ஏழை மக்களுக்குக் கொடுக்கும் தருமங்*
*களை அவர் பார்த்தார். தேவன் உன்னை*
*நினைவு கூருகிறார். 5யோப்பா நகரத்திற்குச்*
*சில மனிதரை அனுப்பு, சீமோன் என்னும்*
*மனிதனை அழைத்து வருவதற்கு அம்மனிதர்*
*களை அனுப்பு. சீமோன், பேதுரு எனவும்*
*அறியப்படுகிறான். 6சீமோன் எனப்படும்*
*தோல் தொழிலாளியோடு சீமோன் பேதுரு*
*தங்கிக் கொண்டிருக்கிறான். கடற்கரையில்*
*உள்ள ஒரு பெரிய வீட்டில் இப்போது இருக்*
*கிறான்” என்றான். 7கொர்நேலியுவோடு*
*பேசிய தேவதூதன் அகன்றான். பின் கொர்*
*நேலியு இரண்டு வேலைக்காரர்களையும், ஒரு*
*வீரனையும் அழைத்தான். அந்த வீரன் ஒரு*
*நல்ல (பக்தியுள்ள) மனிதன். கொர்நேலியுவின்*
*நெருக்கமான உதவியாளர்களில் அவ்வீரனும்*
*ஒருவன். 8கொர்நேலியு அம்மூன்று மனிதருக்*
*கும் எல்லாவற்றையும் விளக்கினான். பின்*
*அவன் அவர்களை யோப்பாவிற்கு அனுப்*
*பினான். 9மறுநாள் இம்மனிதர்கள் யோப்பா*
*அருகே வந்தனர். அப்போது பேதுரு மாடிக்கு*
*பிரார்த்தனை செய்வதற்காகப் போய்க் கொண்*
*டிருந்தான். அப்போது மதியமாகிக் கொண்*
*டிருந்தது. 10பேதுரு பசியடைந்தான். அவன்*
*உண்ண வேண்டுமென நினைத்தான். ஆனால்*
*பேதுரு உண்ணும்படியாக அவர்கள் உண*
*வைத் தயாரித்துக்கொண்டிருக்கும்போது அவ*
*னுக்கு ஒரு காட்சி தெரிந்தது. 11திறந்த*
*வானத்தின் வழியாக ஏதோ ஒன்று இறங்கி*
*வருவதை அவன் கண்டான். அது பூமிக்கு*
*வரும் பெரிய விரிப்பைப் போன்றிருந்தது.*
*அதனுடைய நான்கு மூலைகளிலிருந்து*
*பூமிக்கு அது இறக்கப்பட்டது. 12ஒவ்வொரு*
*வகை பிராணியும் அதில் இருந்தது. நடப்பன,*
*பூமியில் ஊர்வன, வானில் பறக்கும் பறவை*

கள் போன்ற யாவும் அதில் இருந்தன. 13பின்
ஒரு குரல் பேதுருவை நோக்கி, “எழுந்திரு
பேதுரு, இந்தப் பிராணிகளில் நீ விரும்புகிற
யாவையும் சாப்பிடு” என்றது. 14ஆனால்
பேதுரு, “நான் அதை ஒருக்காலும் செய்யமாட்
டேன். கர்த்தாவே! தூய்மையற்றதும், பரிசுத்
தமற்றதுமான உணவை நான் ஒருமுறைகூடப்
புசித்ததில்லை” என்றான்.

15ஆனால் குரல் மீண்டும் அவனுக்கு,
“தேவன் இவற்றைச் சுத்தமாக உண்டாக்கியுள்
ளார். அவற்றை தூய்மையற்றவை என்று
கூறாதே!” என்றது. 16இவ்வாறு மூன்றுதடவை
நிகழ்ந்தது. பிறகு அப்பொருள் முழுவதும்
வானத்திற்குள் எடுத்துக்கொள்ளப்பட்டது.

17இந்தக் காட்சியின் பொருள் என்ன என்று
பேதுரு ஆச்சரியப்பட்டான். இதற்கிடையில்
கொர்நேலியு அனுப்பிய மனிதர்கள் சீமோ
னின் வீட்டைக் கண்டுபிடித்தனர். அவர்கள்
வாசலருகே நின்று கொண்டிருந்தனர். 18அவர்
கள், “சீமோன் என்று அழைக்கப்படும் பேதுரு
இங்கு வசிக்கிறாரா?” என்று கூப்பிட்டுக் கேட்
டார்கள்.

19பேதுரு இப்போதும் அந்தக் காட்சியைப்
பற்றியே நினைத்துக் கொண்டிருந்தான்.
ஆனால் ஆவியானவர் அவனுக்கு, “கவனி!
மூன்று மனிதர்கள் உன்னைத் தேடிக் கொண்
டிருக்கிறார்கள். 20எழுந்து கீழே போ. அம்மனி
தர்களோடு கேள்விகள் எதுவும் கேட்காமல்
போ. நான் அவர்களை உன்னிடம் அனுப்பியி
ருக்கிறேன்” என்றார். 21எனவே பேதுரு
இறங்கி அம்மனிதரிடம் சென்றான். அவன்,
“நீங்கள் தேடி வந்த மனிதன் நானே. நீங்கள்
ஏன் இங்கு வந்தீர்கள்?” என்றான்.

22அம்மனிதர்கள், “ஒரு தேவதூதன் உம்
மைத் தனது வீட்டிற்கு அழைத்து வருமாறு
கொர்நேலியுவுக்குக் கூறியுள்ளான். கொர்
நேலியு ஒரு படை அதிகாரி. அவன் ஒரு
நல்ல நேர்மையான மனிதன். அவன் தேவனை
வணங்குகிறான். எல்லா யூத மக்களும்
அவனை மதிக்கின்றனர். நீர் கூறும் காரியங்
களைக் கொர்நேலியு கேட்கும்படியாக அவ
னது வீட்டிற்கு உம்மை அழைக்கும்படியாக
கொர்நேலியுவுக்கு தேவதூதன் கூறியுள்ளான்”
என்றனர். 23பேதுரு அம்மனிதரை உள்ளே
கூப்பிட்டு இரவில் அங்கே தங்கும்படியாகக்
கேட்டுக் கொண்டான்.

மறுநாள் பேதுரு தயாராகி அம்மூன்று
மனிதரோடும் சென்றான். யோப்பாவிலிருந்து
சில சகோதரர்கள் பேதுருவோடு சென்றனர்.
24அடுத்தநாள் செசரியா நகரத்திற்குள் அவர்
கள் வந்தனர். கொர்நேலியு அவர்களுக்காகக்
காத்துக் கொண்டிருந்தான். அவனது வீட்டில்
உறவினரையும், நெருங்கிய நண்பர்களையும்
ஏற்கெனவே வரவழைத்திருந்தான். 25பேதுரு
வீட்டிற்குள் நுழைந்தபோது கொர்நேலியு
அவர்களைச் சந்தித்தான். கொர்நேலியு பேது
ருவின் பாதங்களில் விழுந்து அவனை வணங்
கினான். 26ஆனால் பேதுரு அவனை எழுந்தி
ருக்குமாறு கூறினான். பேதுரு “எழுந்திரு,
நானும் உன்னைப் போன்ற ஒரு மனிதனே”
என்றான். 27பேதுரு கொர்நேலியுவோடு தொ
டர்ந்து பேசிக் கொண்டிருந்தான். பேதுரு
உள்ளே சென்று ஒரு பெரிய கூட்டமாகக் கூடி
யிருந்த மக்களை அங்கே கண்டான். 28பேதுரு
மக்களை நோக்கி, “யூதரல்லாத எந்த மனித
னோடும் சந்திப்பதோ தொடர்புகொள்வதோ
கூடாது என்பது எங்கள் யூதச்சட்டம் என்பதை
நீங்கள் நன்கு அறிவீர்கள். ஆனால் நான்
எந்த மனிதனையும் ‘தூய்மையற்றவன்’
எனவும், ‘சுத்தமற்றவன்’ எனவும் அழைக்கக்
கூடாது என்று தேவன் எனக்குக் காட்டியுள்
ளார். 29அதனால்தான் அம்மனிதர் இங்கு வரு
மாறு என்னை அழைத்தபோது நான் மறுக்க
வில்லை. எதற்காக என்னை இங்கு அழைத்
தீர்கள் என்பதை இப்போது தயவுசெய்து
கூறுங்கள்” என்றான்.

30கொர்நேலியு, “நான்கு நாட்களுக்கு முன்,
என் வீட்டில் நான் பிரார்த்தனை செய்து
கொண்டிருந்தேன். அது இதே வேளை பிற்
பகல் மூன்று மணியாயிருந்தது. திடீரென
ஒரு மனிதன் எனக்கு முன்பாக நின்று கொண்
டிருந்தான். அவன் ஒளிமிக்க பிரகாசமான
ஆடைகளை அணிந்து கொண்டிருந்தான்.
31அம்மனிதன், ‘கொர்நேலியுவே! தேவன் உன்
பிரார்த்தனையைக் கேட்டார். நீ ஏழை மக்
களுக்கு அளிக்கும் தருமங்களை தேவன்
பார்த்தார். தேவன் உன்னை நினைவுகூரு
கிறார். 32எனவே சில மனிதர்களை யோப்பா
நகரத்திற்கு அனுப்பு. சீமோன் எனப்படும்
பேதுருவை வரச்சொல். தோல் தொழிலாளி
யான சீமோன் என்னும் பெயர்கொண்ட
ஒருவனின் வீட்டில் பேதுரு தங்கியிருக்கிறான்.
அவன் வீடு கடற்கரையில் உள்ளது’ என்றான்.
33எனவே உடனேயே உமக்கு வரச்சொல்லி
யனுப்பினேன். நீர் இங்கு வந்தது நல்லது.
இப்போது தேவனுக்கு முன்பாக நாங்கள்
அனைவரும் கர்த்தர் எங்களுக்குச் சொல்லும்
படியாக உமக்குக் கட்டளையிட்டவற்றைக்
கேட்க இங்கு கூடியிருக்கிறோம்” என்றான்.

## கொர்நேலியுவின் வீட்டில் பேதுரு

34பேதுரு பேச ஆரம்பித்தான், “மெய்யா
கவே தேவனுக்கு எல்லா மனிதரும் சமமான
வர்கள் என்பதை நான் இப்போது புரிந்து
கொள்கிறேன். 35சரியானவற்றைச் செய்து
அவரை வழிபடுகிற எந்த மனிதனையும்
தேவன் ஏற்றுக்கொள்கிறார். 36தேவன் யூத
மக்களோடு பேசியுள்ளார். இயேசு கிறிஸ்
துவின் மூலமாக சமாதானம் வந்தது என்ற
நற்செய்தியை தேவன் அவர்களுக்கு அனுப்
பியுள்ளார். இயேசு எல்லா மக்களின் கர்த்தரா
வார். 37யூதேயா முழுவதும் நிகழ்ந்த செயல்
களை நீங்கள் அறிவீர்கள். யோவான் மக்க
ளுக்கு ஞானஸ்நானத்தைக் குறித்து உபதே

சிக்கத் துவங்கியதற்குப் பின் இவை யாவும்
கலிலேயாவில் ஆரம்பமாயின. 38நீங்கள் நாச
ரேத்தின் இயேசுவைக் குறித்து அறிவீர்கள்.
பரிசுத்த ஆவியையும், வல்லமையையும்
அவருக்குக் கொடுத்து தேவன் அவரைக்
கிறிஸ்துவாக்கினார். இயேசு எல்லா இடங்
களுக்கும் சென்று மக்களுக்கு நல்லவற்றைச்
செய்து கொண்டிருந்தார். பிசாசினால் முடக்
கப்பட்ட மக்களை இயேசு குணப்படுத்தினார்.
தேவன் இயேசுவோடிருந்தார் என்பதை இது
காட்டிற்று. 39யூதேயாவிலும் எருசலேமிலும்
இயேசு செய்த எல்லாவற்றையும் நாங்கள்
பார்த்தோம். அதற்கு நாங்கள் சாட்சிகள்.
ஆனால் இயேசு கொல்லப்பட்டார். மரத்தினால்
செய்யப்பட்ட சிலுவையில் அவரை அறைந்
தனர். 40ஆனால் மரணத்திற்குப்பின் மூன்
றாவது நாள் தேவன் இயேசுவை உயிரோடு
எழுப்பினார். இயேசுவை மக்கள் தெளிவாகப்
பார்க்கும் வாய்ப்பை தேவன் கொடுத்தார்.
41ஆனால் எல்லா மக்களும் அவரைப் பார்க்க
வில்லை. தேவனால் ஏற்கெனவே தேர்ந்தெடுக்
கப்பட்ட சாட்சிகள் மட்டும் அவரைப் பார்த்
தார்கள். நாங்களே அந்த சாட்சிகள்! இயேசு
மரித்து பின்னர் எழுந்த பிறகு அவரோடு
உண்டோம், குடித்தோம். 42மக்களுக்குப்
போதிக்கும்படியாக இயேசு எங்களுக்குக் கூறி
னார். உயிரோடிருக்கும் மக்களுக்கும் மரித்த
மக்களுக்கும் நீதிபதியாக தேவன் நியமித்தவர்
அவரே என்று மக்களுக்குச் சொல்லும்படி
எங்களுக்குக் கூறினார். 43இயேசுவில் நம்
பிக்கை வைக்கிற ஒவ்வொரு மனிதனும் தன்
பாவங்களிலிருந்து மன்னிக்கப்படுவான்.
இயேசுவின் பெயரால் தேவன் அம்மனிதனின்
பாவங்களை மன்னிப்பார். இது உண்மை
யென்று எல்லா தீர்க்கதரிசிகளும் கூறுகின்
றனர்" என்றான்.

### யூதரல்லாதவரையும் பரிசுத்த ஆவியானவர் நிரப்புதல்

44பேதுரு இந்த வார்த்தைகளைப் பேசிக்
கொண்டிருக்கையிலேயே, பரிசுத்த ஆவியா
னவர் அப்பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த
எல்லா மக்களின் மீதும் வந்திறங்கினார்.
45பேதுருவோடு வந்த யூத விசுவாசிகள் வியந்
தனர். யூதரல்லாத மக்களுக்கும் பரிசுத்த ஆவி
யானவர் அருளப்பட்டதைக் கண்டு அவர்கள்
ஆச்சரியமடைந்தனர். 46ஏனெனில் அவர்கள்
வேற்று மொழிகளைப் பேசுவதையும், தேவ
னைத் துதிப்பதையும் யூத விசுவாசிகள்
கேட்டனர். பின்பு பேதுரு 47"தண்ணீரின் மூலம்
இம்மக்கள் ஞானஸ்நானம் பெறுவதை நாம்
மறுக்க முடியாது. நாம் பெற்றதைப் போலவே
இவர்களும் பரிசுத்த ஆவியைப் பெற்றார்கள்!"
என்றான்.

48கொர்நேலியுவும் அவன் உறவினரும்
நண்பர்களும் இயேசு கிறிஸ்துவின் பெயரில்
ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று பேதுரு
கட்டளையிட்டான். பின் அம்மக்கள்
பேதுருவைச் சில நாட்கள் தங்களோடு தங்கும்
படியாகக் கேட்டுக்கொண்டனர்.

### எருசலேமில் பேதுரு

11 யூதரல்லாத மக்களும் தேவனுடைய போ
தனையை ஏற்றுக்கொண்டார்கள் என்
பதை அப்போஸ்தலர்களும் யூதேயாவிலுள்ள
சகோதரரும் கேள்விப்பட்டனர். 2எனவே எருச
லேமுக்குப் பேதுரு வந்தபோது சில யூத விசு
வாசிகள் அவனோடு வாதிட்டனர். 3அவர்கள்,
"யூதரல்லாதவர்களும் விருத்தசேதனமில்லாத
வர்களும் ஆகிய மக்களின் வீடுகளுக்கு நீங்கள்
சென்றீர்கள்! அவர்களோடு சாப்பிடவும் செய்
தீர்கள்!" என்று கூறினார்கள்.

4எனவே பேதுரு நடந்தது முழுவதையும்
அவர்களுக்கு விளக்கினான். 5பேதுரு, "நான்
யோப்பா நகரில் இருந்தேன். நான் பிரார்த்
தனை செய்து கொண்டிருந்தபோது, எனக்கு
ஒரு தரிசனம் கிடைத்தது. அக்காட்சியில் நான்
ஏதோ ஒன்று வானிலிருந்து கீழே வரக்கண்
டேன். அது ஒரு பெரிய விரிப்பைப் போன்று
தோற்றமளித்தது. அதன் நான்கு மூலைக
ளாலும் பிடித்து பூமிக்கு அது இறக்கப்பட்டது.
அது கீழே இறங்கி எனக்கு வெகு அருகாமை
யில் நின்றது. 6நான் அதனுள்ளே கவனமாகப்
பார்த்தேன். ஊரும் பிராணிகளையும்,
வானில் பறக்கும் பறவைகளையும் கண்டேன்.
வீட்டு விலங்குகளையும், வன விலங்குகளை
யும் நான் பார்த்தேன். 7ஒரு குரல் என்னை
நோக்கி, 'பேதுரு எழுந்திரு. இந்தப் பிராணி
களில் எதையேனும் நீ புசிக்கலாம்' என்று
கூறிற்று. 8ஆனால் நான், 'கர்த்தாவே நான்
ஒருபோதும் அதைச் செய்யமாட்டேன். தூய்
மையற்றதும் அசுத்தமான பொருளையும் நான்
ஒருபோதும் தின்றதில்லை' என்றேன்.
9ஆனால் வானத்திலிருந்து மீண்டும் அந்தக்
குரல் பதில் கூறிற்று. 'தேவன் இவை சுத்தமா
னவை என அறிவித்துள்ளார். தூய்மையற்
றவை என அவற்றை அழைக்காதே!' 10இது
மூன்று தடவை நடந்தது. பின்னர் அவை
முழுவதும் வானத்திற்குத் திரும்ப எடுத்துக்
கொள்ளப்பட்டன. 11பின் நான் வசித்துக்
கொண்டிருந்த வீட்டிற்கு மூன்று மனிதர்கள்
வந்தார்கள். செசரியா நகரத்திலிருந்து அவர்
கள் என்னிடம் அனுப்பப்பட்டவர்கள். 12சந்தே
கப்படாது அவர்களோடு போகும்படி ஆவி
யானவர் கூறினார். இந்த ஆறு சகோதரர்களும்
கூட என்னோடு வந்தார்கள். கொர்நேலியுவின்
வீட்டிற்கு நாங்கள் சென்றோம். 13கொர்நேலியு
தனது வீட்டில் அவன் கண்ட தேவதூதனைக்
குறித்து எங்களுக்குக் கூறினான். தேவதூதன்
கொர்நேலியுவை நோக்கி, 'சில மனிதரை
யோப்பாவுக்கு அனுப்பு. சீமோன் பேதுருவை
இங்கு வரும்படி அழைப்பாய். 14அவன்
உங்களிடம் பேசுவான். உங்களையும் உங்கள்
குடும்பத்தினர் அனைவரையும் அவன் கூறும்

செய்திகள் இரட்சிக்கும்’ என்றான். 15நான்
பேச ஆரம்பித்த பிறகு, துவக்கத்தில்* பரிசுத்த
ஆவியானவர் நம்மீது வந்ததைப் போலவே,
அவர்கள் மீதும் பரிசுத்த ஆவியானவர் வந்
தார். 16அப்போது கர்த்தராகிய இயேசுவின்
வார்த்தைகளை நான் நினைவுகூர்ந்தேன்.
கர்த்தர், ‘யோவான் மக்களுக்குத் தண்ணீரால்
ஞானஸ்நானம் வழங்கினான். ஆனால் நீங்
களோ பரிசுத்த ஆவியானவரால் ஞானஸ்
நானம் பெறுவீர்கள்’ என்றார். 17கர்த்தராகிய
இயேசு கிறிஸ்துவில் நாம் நம்பிக்கை வைத்த
தால் நமக்குக் கொடுக்கப்பட்ட அதே வரத்தை
இந்த மக்களுக்கும் தேவன் கொடுத்தார். ஆகை
யால் நான் தேவனுடைய செயலைத் தடுக்க
முடிந்ததா? முடியவில்லை!” என்றான்.

18யூத விசுவாசிகள் இதனைக் கேட்டதும்
அவர்கள் வாதிடுவதை நிறுத்தினர். அவர்கள்
தேவனை வாழ்த்திக் கூறினார்கள், “ஆகை
யால் தேவன் யூதரல்லாத மக்கள் தங்கள்
இருதயங்களை மாற்றி நம்மைப் போன்ற
வாழ்க்கை உடையவர்களாய் வாழ அனுமதிக்
கிறார்” என்று ஒப்புக்கொண்டனர்.

### அந்தியோகியாவிற்கு நற்செய்தி

19ஸ்தேவான் கொல்லப்பட்ட பிறகு
விளைந்த துன்பங்களினால் விசுவாசிகள்
சிதறுண்டனர். தூரத்து இடங்களாகிய பெ
னிக்கே, சீப்புரு, அந்தியோகியா போன்ற
இடங்களுக்குச் சில விசுவாசிகள் சென்றனர்.
விசுவாசிகள் நற்செய்தியை இந்த இடங்களி
லெல்லாம் கூறினர். ஆனால் யூதர்களுக்கு
மட்டுமே அவ்வாறு செய்தார்கள். 20இந்த
விசுவாசிகளில் சிலர் சீப்புரு, சிரேனே ஆகிய
நாடுகளிலிருந்து வந்த மனிதர்கள். இந்த
மனிதர்கள் அந்தியோகியாவுக்கு வந்தபோது
அவர்களும் கிரேக்கரிடம் (யூதரல்லாதோரிடம்)
பேசினர். அந்த கிரேக்க மக்களுக்குக் கர்த்தர்
இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவர்கள்
கூறினர்.

21கர்த்தர் விசுவாசிகளுக்கு உதவிக்
கொண்டிருந்தார். பெரும் எண்ணிக்கையி
லான மக்கள் விசுவாசம் வைத்து கர்த்தரைப்
பின்பற்றினர்.

22எருசலேமின் சபை அந்தியோகியாவிலி
ருந்த இப்புதிய விசுவாசிகளைப்பற்றி அறிந்
தது. எனவே பர்னபாவை அந்தியோகியா
வுக்கு அனுப்பினர். 23-24பர்னபா நல்ல மனி
தன். அவன் பரிசுத்த ஆவியாலும் மிகுந்த
விசுவாசத்திலும் நிரம்பியிருந்தான். அந்தி
யோகியா மக்கள் பெரிதும் தேவ ஆசீர்வாதம்
பெற்றதைக் கண்டான், அது பர்னபாவுக்கு
மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. அவன் அந்தி
யோகியாவின் எல்லா விசுவாசிகளுக்கும்
உற்சாகமூட்டினான். அவன் அவர்களை
நோக்கி, “ஒருபொழுதும் விசுவாசம் இழக்கா
தீர்கள். எப்பொழுதும் உங்கள் முழு இருதயத்
தோடு கர்த்தருக்குக் கீழ்ப்படியுங்கள்” என்
றான். பற்பல மக்கள் கர்த்தரின் சீஷராயினர்.

25பின்பு பர்னபா தர்சு நகரத்திற்குச் சென்
றான். அவன் சவுலைத் தேடினான். 26அவன்
சவுலைப் பார்த்தபோது பர்னபா அவனை
அந்தியோகியாவுக்கு அழைத்து வந்தான். ஓர்
ஆண்டு முழுவதும் சவுலும் பர்னபாவும்
அங்கே தங்கி இருந்தனர். விசுவாசிகளின்
கூட்டம் ஒருங்கே கூடியபோதெல்லாம் சவுலும்
பர்னபாவும் அவர்களைச் சந்தித்து மக்கள்
பலருக்குப் போதித்தனர். அந்தியோகியாவில்
இயேசுவின் சீஷர்கள் முதன்முதலாக “கிறிஸ்த
வர்கள்” என்று அழைக்கப்பட்டனர்.

27அதே கால கட்டத்தில் சில தீர்க்கதரிசிகள்
எருசலேமிலிருந்து அந்தியோகியாவிற்குச்
சென்றனர். 28அந்தத் தீர்க்கதரிசிகளில் ஒருவன்
அகபு. அந்தியோகியாவில் அகபு எழுந்து
நின்று பேசினான். “உலகம் முழுவதற்கும்
மிகப் பெரிய பஞ்சம் வருகிறது. மக்கள்
உண்ண உணவிராது” என்று பரிசுத்த ஆவி
யானவரின் துணையால் அறிவித்தான். (கில
வுதியு என்னும் சக்கரவர்த்தியின் காலத்தில்
உண்மையாகவே இப்பஞ்சம் ஏற்பட்டது)
29யூதேயாவில் வாழ்ந்த சகோதர சகோதரி
களுக்கு உதவவேண்டுமென விசுவாசிகள்
முடிவெடுத்தனர். தங்களால் முடிந்தவரைக்கும்
அவர்களுக்கு அனுப்புவதாக ஒவ்வொரு விசு
வாசியும் திட்டமிட்டனர். 30அவர்கள் அப்
படியே பணத்தைச் சேர்த்து பர்னபாவிடமும்
சவுலிடமும் கொடுத்தனர். பின் பர்னபாவும்
சவுலும் அதனை யூதேயாவிலிருந்த பெரி
யோரிடம் கொண்டு வந்தனர்.

### ஏரோது அகிரிப்பா சபையைத் துன்புறுத்துதல்

12 அதே காலத்தில் சபையைச் சார்ந்த
சில மக்களை ஏரோது துன்புறுத்த
ஆரம்பித்தான். 2ஏரோது யாக்கோபை
வாளால் வெட்டிக் கொல்லுவதற்கு ஆணை
யிட்டான். யாக்கோபு யோவானின் சகோதரன்.
3யூதர்கள் இதை விரும்பினர் என்பதை
ஏரோது கண்டான். எனவே அவன் பேதுரு
வையும் கைது செய்ய முடிவெடுத்தான். (இது
பஸ்கா பண்டிகை எனப்படும் யூதரின் பண்
டிகையின்போது நடந்தது) 4ஏரோது பேதுரு
வைக் கைது செய்து சிறையில் வைத்தான்.
16 வீரர்களின் கூட்டம் பேதுருவைக் காவல்
காத்தது. பஸ்கா பண்டிகை கழியுமட்டும் காத்
திருப்பதற்கு ஏரோது விரும்பினான். பின்னர்
மக்களின் முன்னால் பேதுருவைக் கொண்டு
வர அவன் திட்டமிட்டான். 5எனவே பேதுரு
சிறையில் வைக்கப்பட்டான். ஆனால் சபையி
னரோ பேதுருவுக்காகத் தொடர்ந்து தேவனிடம்
பிரார்த்தித்துக் கொண்டிருந்தனர்

---

**துவக்கத்தில்** பெந்தெகோஸ்தே நாளில் திருச்சபை ஆரம்பித்த அன்று வாசிக்க: அப். 2வது அதிகாரம்.

### பேதுரு விடுவிக்கப்படுதல்

6இரண்டு வீரர்களுக்கு மத்தியில் பேதுரு
படுத்து உறங்கிக் கொண்டிருந்தான். அவன்
இரண்டு சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தான்.
மேலும் அதிகமான வீரர்கள் சிறைக்கதவைக்
காத்துக் கொண்டிருந்தனர். அது இரவுப்பொ
ழுது. மறுநாள் மக்களின் முன்பாகப் பேது
ருவை அழைத்துவர ஏரோது திட்டமிட்டிருந்
தான்.

7அறையில் திடீரென ஒரு ஒளி பிரகா
சித்தது. தேவதூதன் ஒருவன் பேதுருவைப்
பக்கவாட்டில் தொட்டு எழுப்பினான். தேவ
தூதன் “விரைந்து எழு!” என்றான். பேதுரு
வின் கரங்களிலிருந்து விலங்குகள் கழன்று
விழுந்தன. 8தேவதூதன் பேதுருவை நோக்கி,
“ஆடைகளை உடுத்து, செருப்புகளை அணிந்
துகொள்” என்றான். அவ்வாறே பேதுருவும்
செய்தான். பின் தேவதூதன் “அங்கியை
அணிந்துகொண்டு என்னைத் தொடர்ந்து வா”
என்றான். 9தேவதூதன் வெளியே சென்றான்.
பேதுருவும் அவனைத் தொடர்ந்தான். நடந்
தவை உண்மையா என்பது பேதுருவுக்குத்
தெரியவில்லை. ஏதோ ஒரு காட்சியைக் காண்
பதாகவே அவன் எண்ணினான். 10பேதுருவும்
தேவதூதனும் முதல் காவலனையும் இரண்
டாம் காவலனையும் கடந்தனர். நகரத்திலிருந்து
அவர்களைப் பிரித்த பெரிய இரும்புக்
கதவருகே வந்தனர். அந்தக் கதவு தானாகவே
அவர்களுக்காகத் திறந்தது. பேதுருவும் தேவ
தூதனும் கதவின் வழியாகச் சென்று அடுத்த
தெருவரைக்கும் நடந்தார்கள். அப்போது திடீ
ரென தேவதூதன் மறைந்தான்.

11நடந்தது என்னவென்பதைப் பேதுரு அப்
போது உணர்ந்தான். அவன், “கர்த்தர் உண்
மையாகவே தனது தேவதூதனை என்னிடம்
அனுப்பினார் என்பதை நான் அறிவேன்.
ஏரோதிடமிருந்து அவன் என்னை விடுவித்
தான். தீமை எனக்கு நேருமென்று யூதர்கள்
எண்ணினர். ஆனால் கர்த்தர் இவற்றிலிருந்து
என்னைக் காத்தார்” என்று எண்ணினான்.

12பேதுரு அதை உணர்ந்தபோது அவன்
மரியாளின் வீட்டிற்குப் போனான். அவள்
யோவானின் தாய். யோவான் மாற்கு என்றும்
அழைக்கப்பட்டான். பல மக்கள் அங்குக் கூடி
யிருந்தனர். அவர்கள் எல்லோரும் பிரார்த்
தனை செய்து கொண்டிருந்தனர்.

13பேதுரு வெளிக் கதவைத் தட்டினான்.
ரோதை என்னும் பெயருள்ள வேலைக்காரச்
சிறுமி பதில் கூற வந்தாள். 14ரோதை பேதுரு
வின் குரலை அடையாளம் கண்டுகொண்
டாள். அவள் மிகுந்த சந்தோஷம் அடைந்தாள்.
அவள் கதவைத் திறக்கவும் மறந்து விட்டாள்.
அவள் உள்ளே ஓடி, கூட்டத்தினரிடம், “பேதுரு
கதவருகே நிற்கிறார்!” என்றாள். 15விசுவாசி
கள் ரோதையை நோக்கி, “நீ ஒரு பைத்தியம்!”
என்றனர். ஆனால் தான் கூறியது உண்மையே
என்று அவள் வற்புறுத்தினாள். எனவே
அவர்கள், “அது பேதுருவின் தூதனாக இருக்
கவேண்டும்” என்றனர்.

16ஆனால் பேதுரு தொடர்ந்து தட்டிக் கொண்
டேயிருந்தான். விசுவாசிகள் கதவைத் திறந்த
போது பேதுருவைக் கண்டு ஆச்சரியப்பட்டார்
கள். 17அவர்களை அமைதியாக இருக்கும்படி
யாகப் பேதுரு தனது கையால் சைகை செய்
தான். தேவன் அவனைச் சிறையினின்று எவ்
வாறு விடுவித்தார் என்பதை அவன் அவர்க
ளுக்கு விவரித்தான். அவன், “நடந்ததை
யாக்கோபுக்கும் பிற சகோதரருக்கும் சொல்
லுங்கள்” என்றான். பின் வேறிடத்திற்குப்
போவதற்காக அவர்களிடமிருந்து பிரிந்து
சென்றான்.

18மறுநாள் காவலர்கள் மிகவும் நிலை
குலைந்தார்கள். பேதுருவுக்கு என்ன நடந்தி
ருக்குமென்று அவர்கள் அதிசயப்பட்டனர்.
19ஏரோது பேதுருவுக்காக எல்லா இடங்
களிலும் தேடியும் அவன் அகப்படவில்லை.
எனவே ஏரோது காவலரை வினவினான்.
பின் காவலரைக் கொல்லும்படியாக ஆணை
யிட்டான்.

### ஏரோது அகிரிப்பாவின் மரணம்

பின்னர் ஏரோது * யூதேயாவிலிருந்து சென்
றான். அவன் செசரியா நகரத்திற்குச் சென்று
அங்கு சில காலம் தங்கினான். 20தீருவிலும்
சீதோன் நகரிலுமுள்ள மக்களோடு ஏரோது
மிகவும் சினங்கொண்டான். அம்மக்கள் எல்
லோரும் கூட்டமாக ஏரோதுவிடம் வந்தனர்.
பிலாஸ்துவை அவர்கள் தங்கள் பக்கமாக
சேருவதற்குத் தூண்டினார்கள். பிலாஸ்து
அரசனின் நேர்முகப் பணியாள். ஏரோதுவின்
நாட்டிலிருந்து அவர்கள் நாட்டிற்கு உணவுப்
பொருட்கள் வரவேண்டியிருந்ததால் மக்கள்
ஏரோதுவிடம் சமாதானத்தை வேண்டினர்.

21ஏரோது அவர்களைச் சந்திப்பதற்கென
ஒரு நாளைக் குறித்தான். அந்நாளில் ஏரோது,
அரசனுக்கான அழகிய மேலங்கியை
அணிந்து கொண்டிருந்தான். அவன் சிம்மாச
னத்தில் அமர்ந்துகொண்டு மக்களிடம் பேச
ஆரம்பித்தான். 22மக்கள் உரக்க, “இது தேவனு
டைய குரல், மனிதனுடையதல்ல!” என்றனர்.
23ஏரோது இந்த வாழ்த்தைத் தனக்குரியதாக
ஏற்றுக்கொண்டு, தேவனுக்குரிய மகிமையை
அளிக்கவில்லை. எனவே கர்த்தரின் தூதன்
ஒருவன் அவனை நோய்வாய்ப்படச் செய்
தான். அவன் உள்ளே புழுக்களால் உண்ணப்
பட்டு இறந்தான்.

24தேவனுடைய செய்தி பரவிக் கொண்
டிருந்தது. விசுவாசிகளின் எண்ணிக்கைப்
பெருகிக் கொண்டேயிருந்தது.

25எருசலேமில் பர்னபாவும் சவுலும் அவர்
கள் வேலையை முடித்தபோது, அவர்கள்

---

**ஏரோது** ஏரோது அகிரிப்பா - 1, பெரிய ஏரோ
தின் பேரன்.

*அந்தியோகியாவுக்குத் திரும்பினர். யோவான்*
*மாற்கு அவர்களோடிருந்தான்.*

### பர்னபாவுக்கும் சவுலுக்கும் விசேஷ அழைப்பு

13 *அந்தியோகியா சபையில் சில தீர்க்க*
*தரிசிகளும் போதகர்களும் இருந்தனர்.*
*அவர்கள் பர்னபாஸ், சிமியோன் (நீகர்*
*எனவும் அழைக்கப்பட்டான்), லூகி (சிரேனே*
*பட்டணத்தைச் சேர்ந்தவன்), மானாயீன் (ஆட்*
*சியாளனான ஏரோதுவோடு வளர்ந்தவன்),*
*சவுல் ஆகியோர்.* 2 *இம்மனிதர்கள் எல்லோரும்*
*கர்த்தருக்குச் சேவை செய்யவும் உபவாசமி*
*ருக்கவும் செய்தனர். பரிசுத்த ஆவியானவர்*
*அவர்களை நோக்கி, "பர்னபாவையும் சவு*
*லையும் எனக்காக ஒரு சிறப்பான வேலைக்*
*காக தனித்துவிடுங்கள். இந்த வேலையைச்*
*செய்ய நான் அவர்களைத் தேர்ந்துள்ளேன்"*
*என்றார்.*
3 *எனவே சபை உபவாசமிருந்து பிரார்த்*
*தனை செய்தது. பர்னபாவின் மீதும் சவுலின்*
*மீதும் தங்கள் கரங்களை வைத்து வெளியே*
*அனுப்பினர்.*

### சீப்புருவில் பர்னபாவும் சவுலும்

4 *பரிசுத்த ஆவியானவரால் பர்னபாவும்*
*சவுலும் அனுப்பப்பட்டனர். செலூக்கியா*
*நகரத்திற்கு அவர்கள் சென்றனர். பின்*
*செலூக்கியாவிலிருந்து சீப்புரு தீவிற்குக் கடல்*
*வழியாகச் சென்றனர்.* 5 *சாலமி என்னும்*
*நகரத்திற்கு பர்னபாவும் சவுலும் வந்தபோது*
*தேவனுடைய செய்தியை அவர்கள் யூத ஜெப*
*ஆலயங்களில் போதித்தனர். (யோவான் மாற்*
*கும் ஓர் உதவியாளனாக அவர்களோடிருந்*
*தான்)*
6 *அவர்கள் தீவைக் கடந்து பாப்போ நகர்*
*வரைக்கும் சென்றனர். பாப்போவில் மந்திர*
*தந்திரங்கள் செய்த ஒரு யூத மனிதனை அவர்*
*கள் சந்தித்தனர். அவன் பெயர் பர்ஏசு. அவன்*
*ஒரு போலித் தீர்க்கதரிசி.* 7 *ஆளுநர் செர்கியு*
*பவுல் என்பவரோடு பர்ஏசு எப்போதும் இருந்*
*தான். செர்கியு பவுல் ஒரு ஞானவான். அவன்*
*பர்னபாவையும் சவுலையும் சந்திக்க விரும்*
*பினான்.* 8 *ஆனால் எலிமாஸ் என்னும் மந்திர*
*வாதி பர்னபாவுக்கும் சவுலுக்கும் எதிரியாக*
*இருந்தான். (பர்ஏசு என்பதின் கிரேக்க மொழி*
*யாக்கம் எலிமாஸ்) செர்கியுபவுல் இயேசுவை*
*நம்பாதபடி தடுக்க பர்ஏசு முயன்றான்.* 9 *பவுல்*
*பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டான்.*
*(சவுலின் மற்றொரு பெயர் பவுல்) பவுல்*
*எலிமாஸைப் பார்த்து,* 10 *"பிசாசின் மகனே!*
*நீதிக்கெல்லாம் நீ எதிரி. நீ தீய தந்திரங்களா*
*லும் பொய்களாலும் நிரப்பப்பட்டிருக்கிறாய்.*
*கர்த்தரின் உண்மைகளைப் பொய்களாக திரித்*
*துக் கூற எப்போதும் முயல்கிறாய்!* 11 *இப்*
*போது கர்த்தர் உன்னைத் தொடுவார். நீ குருட*
*னாவாய். சில காலம் வரைக்கும் உன்னால்*
*எதையும் பார்க்க முடியாது. சூரியனிலிருந்து*
*வரும் ஒளியைக் கூட பார்க்க முடியாது"*
*என்றான்.*
*அப்போது எலிமாஸுக்கு எல்லாம்*
*இருண்டு போயின. பார்க்க முடியாதபடி அங்*
*குமிங்கும் தடுமாறினான். கையால் பிடித்து*
*அவனை வழிநடத்துகிற ஒருவனைக் கண்டு*
*பிடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.*
12 *ஆளுநர் (செர்கியு பவுல்) இதைப் பார்த்த*
*போது நம்பிக்கை வைத்தான். கர்த்தரைக்*
*குறித்துப் போதிக்கப்படுபவற்றைக் கேட்டு*
*அவன் வியப்புற்றான்.*

### தொடர் ஊழியம்

13 *பாப்போவிலிருந்து பவுலும் அவனோடி*
*ருந்த மனிதர்களும் கடற் பயணமாயினர். பம்பி*
*லியாவிலுள்ள பெர்கே என்னும் நகரத்திற்கு*
*அவர்கள் வந்தனர். ஆனால் யோவான் மாற்கு*
*அவர்களை விட்டுப் பிரிந்தான். அவன் எருச*
*லேமுக்குத் திரும்பினான்.* 14 *அவர்கள் பயணத்*
*தைத் தொடர்ந்து பெர்கேவிலிருந்து பிசிதி*
*யாவுக்கு அருகேயுள்ள நகராகிய அந்தியோ*
*கியாவுக்குப் போனார்கள். அந்தியோகியா*
*வில் ஓய்வுநாளில் யூத ஜெபஆலயத்திற்குள்*
*போய் அமர்ந்தார்கள்.* 15 *மோசேயின் நியாயப்*
*பிரமாணமும், தீர்க்கதரிசிகளின் எழுத்துக்*
*களும் வாசிக்கப்பட்டன. பின் ஜெப ஆலயத்*
*தலைவர்கள் பவுலுக்கும் பர்னபாவுக்கும் ஒரு*
*செய்தி அனுப்பினர். "சகோதரரே, நீங்கள்*
*இங்குள்ள மக்களுக்கு உதவுமாறு ஏதேனும்*
*கூற வேண்டியிருந்தால் தயவுசெய்து பேசுங்*
*கள்" என்றனர்.*
16 *பவுல் எழுந்து நின்றான். அவன் அமை*
*திக்காகத் தன் கைகளை உயர்த்தி, "எனது*
*யூத சகோதரர்களே, உண்மையான தேவனை*
*வழிபடும் மக்களே, தயவுசெய்து நான் சொல்*
*வதைக் கேளுங்கள்.* 17 *இஸ்ரவேலின் தேவன்*
*நமது முன்னோரைத் தெரிந்து கொண்டார்.*
*அவர்கள் அந்நியராக எகிப்தில் வாழ்ந்த*
*காலத்தில் தேவன் அவரது மக்களுக்கு உதவி*
*னார். மிகுந்த வல்லமையால் அந்நாட்டிலி*
*ருந்து அவர்களை அழைத்து வந்தார்.* 18 *வனாந்*
*தரத்தில் நாற்பது ஆண்டுகள் தேவன் அவர்*
*களோடு பொறுமையாக இருந்தார்.* 19 *கானானி*
*லுள்ள ஏழு தேசங்களை தேவன் அழித்தார்.*
*அவரது மக்களுக்கு அவர்கள் நாட்டைக் கொ*
*டுத்தார்.* 20 *இவையெல்லாம் சுமார் நானூற்று*
*ஐம்பது ஆண்டுகளில் நடந்தன. இதன் பிறகு,*
*சாமுவேல் என்னும் தீர்க்கதரிசியின் காலம்*
*வரைக்கும் தேவன் நமது மக்களுக்கு நியாயா*
*திபதிகளை நியமித்தார்.* 21 *பின் மக்கள் ஒரு*
*மன்னன் வேண்டுமென்று கேட்டனர். தேவன்*
*அவர்களுக்கு கீஷ் என்பவனின் மகனாகிய*
*சவுலைக் கொடுத்தார். சவுல் பென்யமீனின்*
*குடும்ப மரபில் வந்தவன். அவன் நாற்பது*
*ஆண்டுகள் மன்னனாக இருந்தான்.* 22 *தேவன்*
*சவுலை எடுத்துக்கொண்ட பிறகு தாவீதை*

அவர்களுக்கு மன்னனாக்கினார். தாவீதைக்
குறித்து தேவன் கூறியதாவது: ‘ஈசாயின் மக
னான தாவீதை எனக்குப் பிடித்திருக்கி
றது. என்னென்ன செய்யவேண்டுமென நான்
நினைக்கிறவற்றை அவன் செய்வான்’
23தேவன் தாவீதின் தலைமுறையினரில் ஒரு
வரை இஸ்ரவேலுக்கு (யூதருக்கு) மீட்பராக
அனுப்பினார். அவ்வாறு வந்தவர்தான்
இயேசு. தேவன் இதைச் செய்வதாக வாக்
குறுதி அளித்தார். 24இயேசு வரும் முன்னர்
எல்லா யூத மக்களுக்கும் யோவான் போதித்
தான். அவர்கள் வாழ்க்கையை மாற்ற விரும்
புவதைக் காட்டும் பொருட்டு யோவான் மக்
களை ஞானஸ்நானம் பெறும்படியாகக் கூறி
னான். 25யோவான் தன் வேலையை முடித்துக்
கொண்டிருக்கும் போது அவன், ‘நான்
யாரென்று நினைக்கிறீர்கள். நான் கிறிஸ்து
அல்ல. அவர் எனக்குப் பின் வருவார். அவர்
மிதியடிகளை அவிழ்ப்பதற்கும் எனக்குத்
தகுதி கிடையாது’ என்றான்.
26‘எனது சகோதரர்களே! ஆபிரகாமின்
குடும்பத்து மக்களே! உண்மையான தேவனை
வணங்கும் யூதரல்லாதோரே, கவனியுங்கள்!
மீட்பைக் குறித்த செய்தி நமக்காக அனுப்பப்
பட்டுள்ளது. 27எருசலேமில் வாழும் யூதர்
களும், யூதத் தலைவர்களும் இயேசுவே மீட்பர்
என்பதை உணரவில்லை. இயேசுவைக்
குறித்து தீர்க்கதரிசிகள் எழுதிய வார்த்தைகள்
ஒவ்வொரு ஓய்வுநாளிலும் யூதர்களுக்கு
வாசிக்கப்பட்டன. ஆனால் அவர்கள் புரிந்து
கொள்ளவில்லை. யூதர்கள் இயேசுவைக் குற்
றப்படுத்தினார்கள். அவர்கள் இதைச் செய்த
போது தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் நிறை
வேறும்படிச் செய்தார்கள். 28இயேசு இறப்பதற்
கான உண்மையான காரணத்தை அவர்
களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால்
அவரைக் கொல்லும்படியாக பிலாத்துவைக்
கேட்டார்கள். 29கிறிஸ்துவுக்கு ஏற்படும் என
வேதவாக்கியங்கள் கூறிய எல்லா தீமை
களையும் அந்த யூதர்கள் செய்தார்கள். பின்
அவர்கள் இயேசுவைச் சிலுவையிலிருந்து
இறக்கி, அவரை ஒரு கல்லறையில் வைத்
தார்கள். 30ஆனால் தேவன் அவரை மரணத்
திலிருந்து எழுப்பினார்! 31அதன் பிறகு,
கலிலேயாவிலிருந்து எருசலேமுக்கு இயேசு
வோடு வந்திருந்தவர்கள் அவரைப் பல
நாட்கள் கண்டார்கள். இவர்களே, இப்போது
எல்லா மக்களுக்கும் அவரது சாட்சிகள்.
32தேவன் நமது முன்னோருக்குக் கொடுத்த
வாக்குறுதியைப் பற்றிய நற்செய்தியை நாங்
கள் உங்களுக்குக் கூறிக்கொண்டிருக்கிறோம்.
33நாம் அவர்களுடைய மக்கள். இந்த வாக்
குறுதி நமக்கு உண்மையாகுமாறு தேவன்
செய்தார். இயேசுவை மரணத்திலிருந்து எழுப்
பியபடியால் தேவன் இதைச் செய்தார்.
சங்கீதம் இரண்டிலும் நாம் இதைப்பற்றி
வாசிக்கிறோம்.

‘நீர் எனது மகன் இன்று நான் உமது
தந்தையாகி இருக்கிறேன்.’
சங்கீதம் 2:7

34தேவன் இயேசுவை மரணத்திலிருந்து எழுப்
பினார். இயேசு மீண்டும் கல்லறைக்கு ஒரு
போதும் போகமாட்டார். புழுதியாக மாட்டார்.
எனவே தேவன் சொன்னார்:

‘நான் தாவீதுக்குச் செய்த தூய உண்மை
யான வாக்குறுதிகளை உங்களுக்குக்
கொடுப்பேன்.’
சங்கீதம் 16:10

35ஆனால் இன்னொரு இடத்தில் தேவன் சொல்
கிறார்:

‘உங்களது பரிசுத்தமானவரின் சரீரத்
தைக் கல்லறையில் மக்கிப்போக அனு
மதிக்க மாட்டீர்கள்.’
ஏசாயா 55:3

36தேவனுடைய விருப்பத்தை தாவீது உயி
ரோடிருக்கும் காலத்தில் நிறைவேற்றினான்.
பின் அவன் இறந்தான். தாவீது அவனது
முன்னோரோடு அடக்கம் செய்யப்பட்டான்.
அவனது சரீரமும் கல்லறையில் மக்கிப்
போனது 37ஆனால் தேவன் மரணத்திலிருந்து
எழுப்பினவரோ கல்லறையில் மக்கிப்போக
வில்லை. 38-39சகோதரரே, நாங்கள் உங்களுக்கு
கூறுவது என்னவென்று நீங்கள் புரிந்து
கொள்ள வேண்டும். இவர் மூலமாக உங்கள்
பாவங்களின் மன்னிப்பை நீங்கள் பெற முடி
யும். மோசேயின் சட்டம் உங்களை உங்கள்
பாவங்களிலிருந்து விடுவிக்க முடியவில்லை.
ஆனால் இயேசுவில் விசுவாசம் வைத்திருக்
கிற ஒவ்வொரு மனிதனும் இயேசுவின் மூல
மாக தனது எல்லாப் பாவங்களிலிருந்தும்
விடுவிக்கப்படுகிறான். 40சில காரியங்கள் நடக்
குமென்று தீர்க்கதரிசிகள் கூறினார்கள். எச்
சரிக்கையாயிருங்கள்! இக்காரியங்கள் உங்
களுக்கு நேராதபடிக்குப் பார்த்துக் கொள்
ளுங்கள். தீர்க்கதரிசிகள்,

41 ‘ஐயம்கொள்ளும் மக்களே, கவனியுங்கள்
நீங்கள் வியப்புறக்கூடும். ஆனால் மரித்து
அழிவீர்கள். ஏனெனில் உங்கள் காலத்
தில் நீங்கள் நம்பாத சிலவற்றை நான்
செய்வேன். சிலர் உங்களுக்கு விளக்கிச்
சொன்னாலும் நீங்கள் நம்ப மாட்டீர்கள்’
ஆபகூக் 1:5

என்றனர்.
42பவுலும் பர்னபாவும் ஜெப ஆலயத்தை
விட்டுச் செல்லும்பொழுது, அடுத்த ஓய்வு
நாளில் மீண்டும் வந்து இவற்றைக் குறித்து
இன்னும் பல விஷயங்களை அவர்களுக்குச்

சொல்லுமாறு மக்கள் கூறினார்கள். 43இக்கூட்
டத்திற்குப்பின், அந்த இடத்திலிருந்து யூதர்கள்
பலர் பவுலையும் பர்னபாவையும் பின்பற்றி
னார்கள். யூதர்களோடு யூத மதத்திற்கு மாறிய
பலரும் இருந்தார்கள். இவர்களும் உண்மை
யான தேவனை வணங்கினார்கள். பவுலும்
பர்னபாவும் தேவனுடைய கிருபையில் தொ
டர்ந்து நம்பிக்கை வைக்குமாறு அவர்களை
உற்சாகமூட்டினார்கள்.
44அடுத்த ஓய்வு நாளில் அநேகமாக நகரத்
தின் எல்லா மக்களும் தேவனுடைய வார்த்
தையைக் கேட்கும்படியாக ஒருமித்துக் கூடி
னார்கள். 45யூதர்கள் அந்த எல்லா மக்களையும்
அங்கே கண்டார்கள். அது அவர்களுக்கு
மிகுந்த பொறாமையை ஏற்படுத்தியது.
எனவே, அவர்கள் வெகு தீமையான சில
காரியங்களைக் கூறி பவுல் கூறிய வார்த்தை
களுக்கு எதிராக விவாதித்தார்கள். 46ஆனால்
பவுலும் பர்னபாவும் மிகவும் துணிச்சலாகப்
பேசினார்கள். அவர்கள், "யூதர்களாகிய உங்
களுக்கு முதலில் தேவனுடைய செய்தியை
நாங்கள் சொல்ல வேண்டும். ஆனால் நீங்கள்
கேட்க மறுக்கிறீர்கள். நீங்கள் உங்களை
இழக்கப்பட்டவர்களாக நித்தியமான வாழ்க்
கைக்குத் தகுதியற்றவர்களாக ஆக்கிக்கொள்
கிறீர்கள்! எனவே நாங்கள் இப்போது வேறு
தேசங்களின் மக்களிடம் செல்வோம்! 47இதைத்
தான் நாங்கள் செய்யும்படியாக ஆண்டவர்
எங்களிடம் சொல்லியிருக்கிறார். கர்த்தர் கூறி
னார்:

'இரட்சிப்பின் பாதையை உலகின்
எல்லா மக்களுக்கும் நீங்கள் காட்டும்
பொருட்டு உங்களை வேறு தேசங்
களுக்கு ஒளியாக்கினேன்.'
ஏசாயா 49:6

48பவுல் இவ்வாறு கூறியதை யூதரல்லாத
மக்கள் கேட்டபோது அவர்கள் மகிழ்ச்சி
கொண்டனர். அவர்கள் கர்த்தரின் செய்திக்கு
மதிப்பளித்தனர். பல மக்கள் செய்தியை நம்
பினர். இவர்கள் நித்தியமான வாழ்க்கைக்குத்
தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாவர்.
49எனவே கர்த்தரின் செய்தி நாடு முழு
வதும் சொல்லப்பட்டது. 50ஆனால் யூதர்கள்
சில முக்கியமான பக்தியுள்ள பெண்களையும்,
நகரத் தலைவர்களையும் சினமடையும்படி
யாகவும் பவுலுக்கும் பர்னபாவுக்கும் எதிரா
கவும் நகரத்திலிருந்து கிளப்பிவிட்டனர். இந்த
மக்கள் பவுலுக்கும் பர்னபாவுக்கும் எதிரான
செயல்களைச் செய்து அவர்களை ஊரை
விட்டு வெளியேறும்படிச் செய்தனர்.
51எனவே பவுலும் பர்னபாவும் தங்கள்
பாதங்களிலிருந்து தூசியை உதறினர். பின்
அவர்கள் அந்த இடத்தை விட்டு இக்கோனியா
நகருக்கு வந்தார்கள். 52ஆனால் அந்தியோகி
யாவிலுள்ள இயேசுவின் சீஷர்கள் மிகவும்
மகிழ்ச்சியடைந்து பரிசுத்த ஆவியால் நிரம்
பினர்.

### இக்கோனியத்தில் ஊழியம்

14 பவுலும் பர்னாபாவும் இக்கோனியம்
நகரத்திற்குச் சென்றனர். அவர்கள் யூத
ஜெபஆலயத்திற்குச் சென்றனர். (இதைத்தான்
அவர்கள் ஒவ்வொரு நகரத்திலும் செய்தனர்)
அவர்கள் அங்குள்ள மக்களிடம் பேசினர்.
பவுலும் பர்னபாவும் பேசின விதத்தில் பல
யூதர்களும், கிரேக்கர்களும் (யூதரல்லாதோரும்)
அவர்கள் கூறியதை முழுமையாக நம்பினர்.
2ஆனால் மனந்திரும்பாத யூதர்கள், யூதரல்லாத
சகோதரரைக் குறித்து தீமையானவற்றை
எண்ணும்படியாகச் செய்தனர். 3எனவே பவு
லும் பர்னபாவும் இக்கோனியத்தில் நீண்ட
காலம் தங்கினர். கர்த்தருக்காகத் துணிவோடு
பேசினர். தேவனுடைய கிருபையைக் குறித்து
பவுலும், பர்னபாவும் பேசினர். அற்புதங்
களையும் அதிசயங்களையும் நிகழ்த்துவதற்கு
அப்போஸ்தலர்களுக்கு உதவிசெய்து அவர்
கள் கூறியதை உண்மையென்று தேவன்
நிரூபித்தார். 4ஆனால் நகரமக்களில் சிலர்
யூதர்கள் கூறியதை ஒப்புக்கொண்டனர். நகரத்
தின் மற்ற மக்களோ பவுலையும் பர்னபாவை
யும் நம்பினர். எனவே நகரம் பிரிவுபட்டது.
5சில யூதரல்லாத மக்களும், சில யூதர்களும்,
அவர்களின் யூத அதிகாரிகளும் பவுலையும்
பர்னபாவையும் துன்புறுத்த முயன்றனர். இந்த
மக்கள் அவர்களைக் கற்களால் எறிந்து
கொல்ல எண்ணினர். 6பவுலும் பர்னபாவும்
இதை அறிந்தபோது, நகரிலிருந்து சென்றனர்.
அவர்கள் லிஸ்தீராவுக்கும், தெர்பைக்கும் லிக்
கோனியாவின் நகரங்களுக்கும், அந்த நகரங்
களைச் சூழ்ந்த கிராமப்புறப் பகுதிகளுக்கும்
சென்றனர். 7அவர்கள் அங்கும் கூட நற்செய்
தியைக் கூறினர்.

### லிஸ்திரா, தெர்பை நகர ஊழியம்

8பாதங்களில் ஊனமுற்ற மனிதன் ஒருவன்
லிஸ்தீராவில் இருந்தான். அவன் பிறவி
யிலேயே ஊனமுற்றவன். 9அவன் அங்கு உட்
கார்ந்துகொண்டு பவுல் பேசுவதைக் கேட்டுக்
கொண்டேயிருந்தான். பவுல் அவனைப் பார்த்
தான். தேவன் அவனைக் குணப்படுத்தமுடியும்
என்பதை அம்மனிதன் நம்பியதைப் பவுல்
கண்டான். 10எனவே பவுல் உரக்க, "எழுந்து
உன் கால்களால் நில்" என்றான். அம்மனிதன்
குதித்தெழுந்து சுற்றிலும் நடக்க ஆரம்பித்தான்.
11பவுல் செய்ததை மக்கள் கூட்டத்தினர் கண்ட
போது, அவர்கள் லிக்கோனிய மொழியில்
சத்தமிட்டனர். அவர்கள் "தேவர்கள் மனித
ரைப் போன்று மாறியுள்ளனர்! அவர்கள் நம்
மிடம் இறங்கி வந்துள்ளனர்!" என்றனர். 12மக்
கள் பர்னபாவை "சீயெஸ்"* என அழைக்கத்

---

**சீயெஸ்** கிரேக்க கடவுளர்களுள் மிக முக்கியமான ஒன்று.

தொடங்கினர். பவுல் முக்கிய பேச்சாளராக
இருந்ததால், அவர்கள் பவுலை “ஹெர்ம்ஸ்”*
என்றழைத்தனர்.
13 சீயஸின் தேவாலயம் நகரத்தினருகில்
இருந்தது. தேவாலயத்தின் பூசாரி சில காளை
களையும் மாலைகளையும் நகரக் கதவுகளுக்
கருகே கொண்டு வந்தான். பவுலையும்
பர்னபாவையும் வழிபடுவதற்கு பூசாரிகளும்
மக்களும் பலி செலுத்த விரும்பினர்.

14 அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும்
மக்கள் செய்துகொண்டிருப்பதைப் புரிந்து
கொண்டதும் அவர்கள் தங்கள் ஆடைகளைக்
கிழித்தனர்.* பின் அவர்கள் கூட்டத்தினர்
மத்தியில் ஓடி, அவர்களிடம் உரத்த குரலில்,
15 “மனிதரே ஏன் இவற்றையெல்லாம் செய்கிறீர்
கள்? நாங்கள் தேவர்கள் அல்ல. உங்களைப்
போன்ற மனிதர்கள்தான். எங்களுக்கும் உணர்
வுகள் உங்களைப்போலவே உண்டு. உங்
களுக்கு நற்செய்தியைச் சொல்ல நாங்கள்
வந்தோம். பயனற்ற இந்தக் காரியங்களை
விட்டு விலகும்படியாக நாங்கள் உங்களுக்கு
சொல்லிக் கொண்டிருக்கிறோம். உண்மை
யான ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்புங்
கள். அவரே வானம், பூமி, கடல், அவற்றி
லுள்ள பொருட்கள் அனைத்தையும் உண்டாக்
கியவர். 16 முன்பு எல்லா தேசங்களும் அவை
விரும்பியவற்றைச் செய்வதற்கு தேவன்
அனுமதித்தார். 17 ஆனால் அதே சமயம் தேவன்
உண்மையானவர் என்பதை நிறுவும் காரி
யங்களையே தேவன் செய்தார். அவர் உங்
களுக்கு நல்லவற்றையே செய்கிறார். அவர்
வானிலிருந்து உங்களுக்கு மழையைத் தரு
கிறார். அவர் தக்க காலங்களில் உங்களுக்கு
நல்ல அறுவடையைக் கொடுக்கிறார். அவர்
மிகுதியான உணவை உங்களுக்குத் தருகிறார்.
அவர் உங்கள் இருதயங்களை மகிழ்ச்சியால்
நிரப்புகிறார்” என்றனர். 18 பவுலும் பர்னபா
வும் மக்களுக்கு இவற்றைக் கூறினர். ஆனா
லும் அவர்களை வழிபடுவதற்காக அவர்கள்
இட்ட பலியை அநேகமாக பவுலும் பர்னபா
வும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

19 பின் அந்தியோகியாவிலிருந்தும், இக்கோ
னியத்திலிருந்தும் சில யூதர்கள் வந்தனர்.
அவர்கள் பவுலை எதிர்க்கும்படியாக மக்
களை ஏவினர். எனவே மக்கள் பவுலின்மீது
கற்களை வீசி, அவன் இறந்துவிட்டானென்று
நினைத்து அவனை ஊருக்குப் புறம்பே
இழுத்து வந்தனர். 20 இயேசுவின் சீஷர்கள் பவு
லைச் சுற்றிலும் கூடினர். பின் அவன் எழுந்து
ஊருக்குள் மீண்டும் சென்றான். மறுநாள்
அவனும் பர்னபாவும் புறப்பட்டு தெர்பை
நகரத்துக்குச் சென்றனர்.

### அந்தியோகியாவுக்குத் திரும்புதல்

21 பவுலும் பர்னபாவும் தெர்பை நகரத்
திலும் நற்செய்தியைக் கூறினர். பல மக்கள்
இயேசுவின் சீஷராயினர். லிஸ்திரா, இக்கோ
னியம், அந்தியோகியா நகரங்களுக்குப் பவு
லும் பர்னபாவும் திரும்பினர். 22 அந்நகரங்
களில் இயேசுவின் சீஷர்களை பவுலும் பர்ன
பாவும் வலிமைமிக்கவர்களாக ஆக்கினர்.
நம்பிக்கையில் நிலைத்திருப்பதற்கு அவர்கள்
உதவினர். பவுலும் பர்னபாவும், “தேவனு
டைய இராஜ்யத்துக்குள் செல்லும் நம் பாதை
யில் நாம் பல துன்பங்களை அனுபவிக்க
வேண்டும்” என்றனர். 23 பவுலும் பர்னபாவும்
ஒவ்வொரு சபைக்கும் மூப்பர்களை அமர்த்தி
னார்கள். அவர்கள் உபவாசமிருந்து அம்மூப்
பர்களுக்காக பிரார்த்தனை செய்தனர். அம்
மூப்பர்கள் கர்த்தராகிய இயேசுவில் நம்பிக்கை
வைத்த மனிதராயிருந்தார்கள். எனவே பவு
லும் பர்னபாவும் கர்த்தரின் பாதுகாப்பில்
அவர்களை விட்டனர்.
24 பவுலும் பர்னபாவும் பிசிதியா நாட்டின்
வழியாகச் சென்றனர். பின் அவர்கள் பம்
பிலியா நாட்டிற்கு வந்தனர். 25 அவர்கள் பெர்
காவில் தேவனுடைய செய்தியைக் கூறினார்
கள். பின் அவர்கள் அத்தாலியா நகரத்திற்குச்
சென்றனர்.
26 அங்கிருந்து பவுலும் பர்னபாவும் சிரியா
விலுள்ள அந்தியோகியாவிற்குக் கடல் வழி
யாகப் பயணமாயினர். இந்நகரில்தான் விசு
வாசிகள் அவர்களை தேவனுடைய கண்
காணிப்பில் ஆட்படுத்தி இவ்வேலை செய்ய
அனுப்பியிருந்தனர். இப்போது அவர்கள் தங்
கள் வேலையை முடித்திருந்தனர்.
27 பவுலும் பர்னபாவும் வந்து சேர்ந்தபோது
அவர்கள் சபையைக் கூட்டினர். தேவன் அவர்
களோடு செய்த எல்லாக் காரியங்களையும்
குறித்துப் பவுலும் பர்னபாவும் அவர்களுக்குக்
கூறினர். அவர்கள், “வேறு தேசங்களின் மக்
களும் நம்பும்படிக்குத் தேவன் ஒரு வாசலைத்
திறந்தார்” என்றார்கள். 28 கிறிஸ்துவின் சீஷர்க
ளோடு பவுலும் பர்னபாவும் நீண்டகாலம் அங்
கேயே தங்கினர்.

### எருசலேமில் சந்திப்பு

15 பின்பு யூதேயாவிலிருந்து அந்தியோ
கியாவுக்குச் சில மனிதர் வந்தனர்.
யூதரல்லாத சகோதரருக்கு அவர்கள் “நீங்கள்
விருத்தசேதனம் செய்து கொள்ளாவிட்டால்
இரட்சிக்கப்படமாட்டீர்கள். இதைச் செய்யும்படி
யாக மோசே நமக்குக் கற்பித்தார்” என்று
போதிக்க ஆரம்பித்தனர். 2 பவுலும் பர்னபா
வும் இந்தப் போதனையை எதிர்த்தனர்.
அதைக் குறித்து இந்த மனிதரிடம் அவர்கள்
விவாதித்தனர். எனவே அந்தச் சபையார்

---

**ஹெர்மஸ்** மற்றொரு கிரேக்க கடவுள். கிரேக்க மக்கள் இதை ஏனைய கடவுளர்களின் தூதுவராக நம்பினர்.

**தங்கள் ஆடைகளைக் கிழித்தனர்** அவர்கள் கோபத்துடன் உள்ளனர் என்பதற்கான அடையாளம்.

பவுலையும் பர்னபாவையும், வேறு சில மனிதர்களையும் எருசலேமுக்கு அனுப்பத் தீர்மானித்தனர். அங்கிருந்த அப்போஸ்தலரிடமும் மூப்பர்களிடமும் இதைக் குறித்து அதிகமாகப் பேசப் போகிறவர்களாக இந்த மனிதர்கள் இருந்தார்கள்.

3அவர்கள் பயணத்திற்கு சபை உதவிற்று. பெனிக்கே, சமாரியா ஆகிய தேசங்களின் வழியாக அம்மனிதர்கள் சென்றனர். யூதரல்லாத மக்கள் உண்மையான தேவனிடம் திரும்பியது குறித்த அனைத்தையும் அவர்கள் கூறினர். இது எல்லா சகோதரர்களுக்கும் மிகுந்த மகிழ்ச்சியை உண்டாக்கிற்று. 4பவுலும் பர்னபாவும் பிறரும் எருசலேமை வந்தடைந்தனர். அப்போஸ்தலரும், மூப்பர்களும் விசுவாசிகள் அனைவரும் சேர்ந்து அவர்களை வரவேற்றனர். பவுலும் பர்னபாவும், பிறரும் தேவன் தங்களிடம் செய்த அனைத்துக் காரியங்களையும் கூறினர். 5எருசலேமின் விசுவாசிகளில் சிலர் பரிசேயர்கள். அவர்கள் எழுந்து “யூதரல்லாத விசுவாசிகள் விருத்தசேதனம் செய்து கொள்ளவேண்டும். மோசேயின் சட்டங்களுக்குக் கீழ்ப்படியுமாறு அவர்களுக்குக் கூறவேண்டும்” என்று கூறினர்.

6அப்போது அப்போஸ்தலர்களும் மூப்பர்களும் இந்தச் சிக்கலை ஆய்ந்து அறியக் கூடினர். 7நீண்ட விவாதம் நடந்தது. பேதுரு எழுந்து அவர்களை நோக்கி, “சகோதரர்களே, தொடக்கக் காலத்தில் நிகழ்ந்தவற்றை நீங்கள் நினைவுகூருகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். யூதரல்லாத மக்களுக்கு நற்செய்தியைப் போதனை செய்வதற்கு அப்போது உங்களுக்கிடையிலிருந்து தேவன் என்னைத் தேர்ந்தெடுத்தார். அவர்கள் என் மூலமாக நற்செய்தியைக் கேட்டு விசுவாசம் வைத்தனர். 8தேவன் மனிதரின் எண்ணங்களை அறிவார். அவர் யூதரல்லாத மக்களையும் ஏற்றுக் கொண்டார். எங்களுக்குச் செய்தது போலவே அவர்களுக்கும் பரிசுத்த ஆவியை அளித்து தேவன் இதனைக் காட்டினார். 9இந்த மனிதர்கள் தேவனுக்கு நம்மிலிருந்தும் வேறுபட்டவர்களல்லர். அவர்கள் விசுவாசம் வைத்தபோது, தேவன் அவர்கள் இருதயங்களை பரிசுத்தமுறச் செய்தார். 10எனவே யூதரல்லாத விசுவாசிகளின் கழுத்தில் ஏன் பெரும் பாரத்தைச் சுமத்துகிறீர்கள். தேவனைக் கோபப்படுத்த நீங்கள் முயன்று கொண்டிருக்கிறீர்களா? அந்தப் பாரத்தைச் சுமப்பதற்கு நமக்கும் நமது முன்னோர்களுக்கும் வலிமை இருக்கவில்லை! 11நாமும் இந்த மக்களும் கர்த்தராகிய இயேசுவின் கிருபையினாலே இரட்சிக்கப்படுவோம் என்று நான் நம்புகிறேன்.” என்றான் 12அப்போது அந்தக் கூட்டம் முழுமையும் அமைதியாயிற்று. பவுலும் பர்னபாவும் பேசுவதைக் கவனித்தனர். யூதரல்லாத மக்களின் மத்தியில் தேவன் அவர்கள் மூலமாகச் செய்த அதிசயங்களையும் அற்புதங்களையும் குறித்துப் பவுலும் பர்னபாவும் விவரித்தார்கள். 13பவுலும் பர்னபாவும் பேசி முடித்தனர். பின் யாக்கோபு பேசினான். அவன், “சகோதரரே, எனக்குச் செவி கொடுங்கள். 14தேவன் யூதரல்லாத மக்களுக்குத் தமது அன்பை எவ்வாறு காட்டினார் என்பதை சீமோன் பேதுரு நமக்கு விவரித்தார். முதன் முறையாக யூதரல்லாத மக்களை தேவன் ஏற்று, அவர்களைத் தனது மக்களாக்கினார். 15தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும் இதனோடு ஒத்துப்போகின்றன.

16 இதற்குப் பிறகு நான் மீண்டும் திரும்புவேன். தாவீதின் வீட்டை மீண்டும் கட்டுவேன். அது விழுந்து விட்டது. அந்த வீட்டின் இடிந்த பகுதிகளை மீண்டும் கட்டுவேன். அவனது வீட்டைப் புதிய தாக்குவேன்.
17 பின் பிற மக்கள் எல்லோரும் கர்த்தரைத் தேடுவர். யூதரல்லாத மக்களும் என் மக்களே. கர்த்தர் இதைக் கூறினார்.
18 இந்தக் காரியங்கள் அனைத்தையும் செய்பவர் அவரே. தொடக்கக் காலத்திலிருந்தே, இவை அனைத்தும் அறியப்பட்டிருந்தன.’

ஆமோஸ் *9:11,12*

19“தேவனிடம் திரும்பிய யூதரல்லாத சகோதரரைத் தொந்தரவு செய்யக் கூடாது என்பது என்னுடைய நியாயம். 20ஆனால் ஒரு கடிதத்தை நாம் அவர்களுக்கு எழுதவேண்டும். அதில்:

விக்கிரகங்களுக்குக் படைக்கப்பட்ட உணவை உண்ணாதீர்கள். (இது உணவை அசுத்தப்படுத்துகிறது). பாலியல் பாவங்களில் ஈடுபடாதீர்கள். இரத்தத்தை ருசிக்காதீர்கள். நெரித்துக் கொல்லப்பட்ட மிருகங்களை உண்ணாதீர்கள் என்று எழுதுவோம்.

21ஒவ்வொரு நகரத்திலும் மோசேயின் சட்டத்தைப் போதிக்கும் மனிதர்கள் (யூதர்கள்) இருப்பதால், அவர்கள் இவற்றைச் செய்யக்கூடாது. ஒவ்வொரு ஓய்வு நாளன்றும் மோசேயின் போதனைகள் ஜெப ஆலயத்தில் படிக்கப்படுகின்றன. இவ்வாறு எழுதப்படவேண்டும்” என்று கூறினான்.

### யூதரல்லாத சகோதரருக்குக் கடிதம்

22பவுல், பர்னபா ஆகியோருடன் அந்தியோகியாவுக்குச் சில மனிதர்களை அனுப்பவேண்டுமென அப்போஸ்தலரும், மூப்பரும், சபையினர் எல்லோரும் முடிவு செய்தார்கள். அக்கூட்டத்தினர் தங்களில் சிலரைத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் பர்சபா என்ற யூதாவையும், சீலாவையும் தேர்ந்தெடுத்தனர். எருசலேமின் சகோதரர்கள் அவர்களை மதித்தனர். 23அக்

கூட்டத்தினர் அவர்கள் மூலமாக அக்கடிதத்தை
அனுப்பினார்கள். அக்கடிதம் கூறியது:

அப்போஸ்தலர்கள், மூப்பர்கள், சகோ
தரர்களிடமிருந்து அந்தியோகியாவிலும்,
சிரியாவிலும், சிலிசியாவிலுமுள்ள
அன்பான யூதரல்லாத சகோதரருக்கு:

24எங்கள் கூட்டத்திலிருந்து சில மனிதர்கள்
உங்களிடம் வந்தார்கள் எனக் கேள்விப்பட்
டோம். அவர்கள் கூறிய காரியங்கள் உங்
களைத் தொந்தரவு செய்து உங்கள் மனங்களை
நிலைகுலையச் செய்துள்ளன. ஆனால் அவற்
றைச் செய்யும்படியாக நாங்கள் அவர்களுக்
குக் கூறவில்லை. 25சில மனிதர்களைத் தேர்ந்
தெடுத்து உங்களிடம் அனுப்புவதென நாங்கள்
எல்லோரும் முழுமனதாக முடிவு செய்துள்
ளோம். நமது அன்பான நண்பர்களாகிய
பர்னபா, பவுல் ஆகியோரோடு அவர்களும்
இருப்பார்கள்.
26நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்
சேவைக்காக பர்னபாவும் பவுலும் தங்கள்
பிராணனையே கொடுத்துள்ளார்கள். 27என
வே அவர்களோடு யூதாவையும் சீலாவையும்
அனுப்புகிறோம். அவர்கள் வாய் வார்த்தை
களினால் அவற்றை உங்களுக்கு உறுதிசெய்
வார்கள். 28உங்கள் மீது இன்னும் அதிகமான
பாரங்கள் விதிக்கப்படலாகாதென பரிசுத்த
ஆவியானவர் முடிவு செய்தார். நாங்களும்
அதை ஆமோதிக்கிறோம். நீங்கள் செய்யத்
தேவையான இந்தக் காரியங்களை மட்டுமே
செய்ய வேண்டும்.

29 விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட உண
வைச் சாப்பிடாதீர்கள். இரத்தத்தை ருசிக்
காதீர்கள். நெரித்துக்கொல்லப்பட்ட மிரு
கங்களைச் சாப்பிடாதீர்கள். பாலியல்
பாவங்களில் ஈடுபடாதீர்கள்.

இத்தகைய காரியங்களில் நீங்கள் உங்களை
ஈடுபடுத்தாதிருந்தால் நல்லது.
30எனவே பவுல், பர்னபா, யூதா, சீலா
ஆகியோர் எருசலேமை விட்டுச் சென்றனர்.
அவர்கள் அந்தியோகியாவுக்குச் சென்றனர்.
அந்தியோகியாவில் விசுவாசிகளைக் கூட்டி
அக்கடிதத்தைக் கொடுத்தனர்.
31விசுவாசிகள் அதை வாசித்தபோது
மகிழ்ச்சியடைந்தனர். அக்கடிதம் அவர்களுக்கு
ஆறுதல் அளித்தது. 32யூதாவும் சீலாவும்கூடத்
தீர்க்கதரிசிகளாக இருந்தனர். சகோதரர்கள்
வலிமைபெற உதவுவதற்காக அவர்கள் பல
காரியங்களைக் கூறினர். 33அவர்கள் சகோ
தரரிடமிருந்து அமைதியின் வாழ்த்தைப் பெற்
றனர். யூதாவும் சீலாவும் எருசலேமில் தங்
களை அனுப்பிய சகோதரரிடம் சென்றனர்.
34*

35ஆனால் பவுலும் பர்னபாவும் அந்தியோ
கியாவில் தங்கினர். அவர்களும் இன்னும்
பலரும் தேவனுடைய செய்தியைக் கற்பிக்
கவும் உபதேசிக்கவும் செய்தார்கள்.

### பவுலும் பர்னபாவும் பிரிதல்

36சில நாட்களுக்குப் பிறகு பவுல் பர்ன
பாவை நோக்கி, "பல ஊர்களில் கர்த்தரின்
செய்தியை நாம் கூறியுள்ளோம். அந்த ஊர்களி
லுள்ள சகோதரர்களையும் சகோதரிகளையும்
சந்திக்கவும், அவர்கள் எவ்வாறு இருக்கிறார்
கள் என்பதைக் காணவும் நாம் அந்த ஊர்
களுக்குத் திரும்பவும் போகவேண்டும்" என்
றான். 37பர்னபா அவர்களோடு யோவான்
மாற்குவையும் அழைத்துச் செல்ல விரும்
பினான். 38ஆனால் அவர்களின் முதல் பயணத்
தில் பம்பிலியாவில் யோவான் மாற்கு அவர்
களை விட்டுப் பிரிந்தான். அவர்களது வேலை
யில் அவர்களோடு அவன் சேர்ந்து கொள்ள
வில்லை. எனவே பவுல் அவனைத் தம்முடன்
அழைத்துச்செல்ல வேண்டாமென வலியுறுத்
தினான். 39பவுலும் பர்னபாவும் இதைக் குறித்
துப் பெரிய வாக்குவாதம் நிகழ்த்தினார்கள்.
எனவே அவர்கள் பிரிந்து வெவ்வேறு வழி
களில் சென்றார்கள். பர்னபா சீப்புருவுக்கு
கடல் வழியாகச் சென்றான். அவனோடு மாற்
குவையும் சேர்த்துக் கொண்டான். 40பவுல்
தன்னோடு செல்வதற்கு சீலாவைத் தேர்ந்து
கொண்டான். அந்தியோகியாவில் சகோதரர்
கள் பவுலைக் கர்த்தரின் கவனிப்பில் ஒப்
புவித்து அவனை அனுப்பினர். 41பவுலும்
சீலாவும் சிரியா, சிலிசியா நாடுகளின்
வழியாக சபைகள் பலமடைவதற்கு உதவி
யபடியே பயணம் செய்தனர்.

### பவுல் - சீலா - தீமோத்தேயு

16 தெர்பை, லிஸ்திரா ஆகிய நகரங்களுக்
குப் பவுல் சென்றான். தீமோத்தேயு
எனப்படும் கிறிஸ்துவின் சீடன் அங்கிருந்
தான். தீமோத்தேயுவின் தாய் ஒரு விசுவா
சியான யூதப் பெண்மணி, அவன் தந்தை
ஒரு கிரேக்கன் (யூதன் அல்லன்). 2லிஸ்திரா,
இக்கோனியம் நகரங்களிலுள்ள விசுவாசிகள்
தீமோத்தேயுவை மதித்தனர். அவனைப்பற்றிய
நல்ல கருத்துக்களையே கூறினர். 3தீமோத்தேயு
தன்னுடன் பயணம் செய்ய பவுல் விரும்
பினான். அப்பகுதியில் வசித்த எல்லா யூதர்
களும் தீமோத்தேயுவின் தந்தை கிரேக்கன்
(யூதரல்லாதவர்) என்பதை அறிந்திருந்தார்
கள். ஆகவே பவுல் தீமோத்தேயுவிற்கு விருத்
தசேதனம் செய்வித்தான். 4பின் பவுலும் அவ
னோடிருந்த மனிதர்களும் பிற பட்டணங்கள்
வழியாகப் பிரயாணம் செய்தனர். எருசலே
மில் அப்போஸ்தலரும் மூப்பர்களும் எடுத்த
முடிவுகளையும் விதிகளையும் அவர்கள்
விசுவாசிகளுக்கு அளித்தார்கள். இந்த விதி
களைப் பின்பற்றும்படிக்கு அவர்கள் விசுவா

---

**வாக்கியம்** 34 சில கிரேக்கப் பிரதிகளில் 34வது
வாக்கியம் சேர்க்கப்பட்டிள்ளது. "ஆனால் சீலா
அங்கேயே இருக்கத் தீர்மானித்தான்."

சிகளுக்குக் கூறினர். 5எனவே சபைகள் விசு
வாசத்தில் வலிமையுற்று நாள்தோறும்
வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தன.

### ஆசியாவிற்கு வெளியே அழைப்பு

6பிகியா, கலாத்தியா நாடுகளின் வழியாகப்
பவுலும் அவனோடிருந்த மனிதர்களும் சென்
றனர். ஆசியா நாட்டில் அவர்கள் நற்செய்
தியைப் போதிப்பதை பரிசுத்த ஆவியானவர்
அனுமதிக்கவில்லை. 7மீசியா நாட்டிற்கருகே
பவுலும் தீமோத்தேயுவும் சென்றனர். பித்தி
னியா நாட்டிற்குள் போக அவர்கள் விரும்
பினர். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவர்
களை உள்ளே செல்ல விடவில்லை. 8எனவே
அவர்கள் மீசியா வழியாகச் சென்று துரோவா
நகருக்குச் சென்றனர். 9அன்றிரவு பவுல் ஒரு
காட்சியைக் கண்டான். அந்தக் காட்சியில்
மக்கதோனியா நாட்டைச் சேர்ந்த ஒரு மனிதன்
பவுலிடம் வந்தான். அம்மனிதன் அங்கு நின்று,
“மக்கதோனியாவுக்கு வந்து எங்களுக்கு
உதவுங்கள்” என்றான். 10பவுல் அக்காட்சி
யைக் கண்ட பின்பு கர்த்தருடைய நற்செய்
தியை அம்மக்களுக்குக் கூறுவதற்கு தேவன்
எங்களை அழைத்துள்ளார் என்பதை நாங்கள்
புரிந்துகொண்டோம்.

### லீதியாளின் மாற்றம்

11நாங்கள் ஒரு கப்பலில் துரோவாவை
விட்டுப் புறப்பட்டு சாமோத்திராக்கே தீவிற்குப்
பயணமானோம். மறுநாள் நாங்கள் நியாப்
போலி நகருக்கு கடல் வழியாகப் பயணமா
னோம். 12அங்கிருந்து நாங்கள் பிலிப்பிக்குச்
சென்றோம். மக்கதோனியாவில் பிலிப்பி ஒரு
முக்கியமான நகரம். அது ரோமர்களுக்கான
நகரம். சில நாட்கள் நாங்கள் அந்நகரில் தங்கி
னோம்.

13ஓய்வுநாளில் நகர கதவுகள் வழியாக
ஆற்றை நோக்கிச் சென்றோம். நதியருகே ஒரு
சிறப்பான பிரார்த்தனை செய்வதற்கு இடம்
கிடைக்கக்கூடும் என்று எண்ணினோம். சில
பெண்கள் அங்குக் கூடியிருந்தனர். நாங்கள்
அங்கு அமர்ந்து அவர்களோடு பேசினோம்.
14தியத்தீரா என்னும் நகரிலுள்ள லீதியாள்
என்னும் பெண்மணி அங்கிருந்தாள். ஊதாநிற
பட்டு ஆடைகளை விற்பதே அவளது தொழில்.
அவள் உண்மையான தேவனை வழிபட்டாள்.
அவள் பவுலைக் கவனித்துக் கொண்டிருந்
தாள். கர்த்தர் அவளது இதயத்தைத் திறந்து
பவுல் சொன்னவற்றை ஒப்புக்கொள்ளச் செய்
தார். அவள் பவுல் கூறியவற்றை நம்பினாள்.
15அவளும் அவளது வீட்டினரும் ஞானஸ்
நானம் பெற்றனர். பின் லீதியாள் எங்களை
அவளது வீட்டிற்கு அழைத்தாள். அவள், “கர்த்
தராகிய இயேசுவில் நான் உண்மையாகவே
விசுவாசம் உள்ளவள் என்று நீங்கள் எண்
ணினால் என் வீட்டிற்கு வந்து தங்குங்கள்”
என்றாள். அவள் எங்களை அவளோடு தங்கு
மாறு வற்புறுத்தினாள்.

### சிறையில் பவுலும் சீலாவும்

16ஒரு நாள் பிரார்த்தனை செய்யுமிடத்துக்கு
நாங்கள் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு
நிகழ்ச்சி நடந்தது. ஒரு வேலைக்காரச் சிறுமி
எங்களைச் சந்தித்தாள். அவளுக்குள் ஒரு
விசேஷ ஆவி இருந்தது. எதிர்காலத்தில் நடக்
கவிருப்பதைப்பற்றிக் கூறும் வல்லமையை
இந்த ஆவி அவளுக்குக் கொடுத்தது. அவளது
உரிமையாளர்களுக்கு இதைச் செய்து மிகுந்த
பணத்தை அவள் சம்பாதித்துக் கொடுத்தாள்.
17இந்தப் பெண் பவுலையும் எங்களையும் தொ
டர்ந்து வந்தாள். அவள் உரத்த குரலில் “இம்
மனிதர்கள் மிக உன்னதமான தேவனின் ஊழி
யர்கள்! உங்களுக்கு இரட்சிப்பின் வழியை
அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்!”
என்றாள். 18அவள் இதையே பல நாட்கள்
தொடர்ந்து செய்து வந்தாள். மேலும் அதைப்
பொறுக்கமுடியாத பவுல் அந்த ஆவியைப்
பார்த்து, “இயேசு கிறிஸ்துவின் வல்லமை
யால் அவளிடமிருந்து வெளியே வருமாறு
உனக்குக் கட்டளையிடுகிறேன்!” என்றான்.
உடனே ஆவி வெளியேறிற்று.

19அந்த வேலைக்காரப் பெண்ணின் உரி
மையாளர்கள் இதைக் கண்டனர். அப்பெண்
ணைப் பணம் சம்பாதிப்பதற்கு இனிமேல்
பயன்படுத்த முடியாது என்பதை அம்மனிதர்
கள் அறிந்தனர். எனவே அவர்கள் பவுலையும்
சீலாவையும் பிடித்து வந்து நகரத்தின் சந்
தியில் நிறுத்தினர். நகர அதிகாரிகள் அங்
கிருந்தனர். 20தலைவர்களின் முன்பு அம்மனி
தர்கள் பவுலையும் சீலாவையும் கொண்டு
வந்தனர். அவர்கள், “இம்மனிதர்கள் யூதர்கள்.
நகரத்தில் துன்பத்தை விளைவிக்கிறார்கள்
21நமக்குத் தகாத காரியங்களைச் செய்யும்படி
யாக அவர்கள் மக்களுக்குக் கூறிக் கொண்
டிருக்கிறார்கள். நாம் ரோம மக்கள். இக்காரி
யங்ளைச் செய்ய முடியாது” என்றார்கள்.
22பவுலையும், சீலாவையும் கூட்டத்தினர்
எதிர்த்தார்கள். பவுல், சீலா ஆகியோரின்
ஆடைகளைத் தலைவர்கள் கிழித்தார்கள். பவு
லையும், சீலாவையும் கழிகளால் அடிக்கும்படி
அவர்கள் சில மனிதர்களுக்குச் சொன்னார்
கள். 23அம்மனிதர்கள் பவுலையும் சீலாவையும்
பல முறை அடித்தார்கள். பின் அவர்கள்
பவுலையும் சீலாவையும் சிறையில் தள்ளி
னார்கள். தலைவர்கள் சிறை அதிகாரியை
நோக்கி, “கவனமாக அவர்களைக் காவலில்
வையுங்கள்!” என்றார்கள். 24சிறையதிகாரி
இந்த சிறப்புக் கட்டளையைக் கேட்டான்.
எனவே அவன் பவுலையும் சீலாவையும்
சிறையின் மிக உட்பகுதிக்கு அழைத்துச்
சென்று அடைத்து காவலில் வைத்தான்.
பெரிய மரத்தூண்களுக்கிடையில் அவர்கள்
கால்களைக் கட்டினான்.

**25**நள்ளிரவில் பவுலும், சீலாவும் பிரார்த்
தனை செய்துகொண்டும் தேவனை நோக்கித்
துதிப் பாடல்களைப் பாடிக் கொண்டுமிருந்
தனர். மற்ற சிறைக்கைதிகள் அவர்களைக்
கவனித்தவண்ணமிருந்தனர். **26**திடீரென்று ஒரு
பெரிய பூமியதிர்ச்சி உண்டாயிற்று. சிறை
யின் அஸ்திபாரத்தை அசைக்கும்படியாக
அது பலமாக இருந்தது. பின் சிறைச்சாலை
யின் கதவுகள் எல்லாம் திறந்தன. எல்லா
கைதிகளும் அவர்களது விலங்குகளிலிருந்து
விடுபட்டனர். **27**சிறையதிகாரி விழித்தெழுந்
தான். சிறைக் கதவுகள் திறந்திருப்பதை
அவன் கண்டான். சிறைக் கைதிகள் ஏற்
கெனவே தப்பித்துப் போயிருக்கவேண்டுமென
அவன் நினைத்தான். எனவே சிறையதிகாரி
தன் வாளை உருவி தற்கொலை செய்து
கொள்ள இருந்தான். **28**ஆனால் பவுல் உரக்க,
"உன்னைத் துன்புறுத்திக்கொள்ளாதே. நாங்
கள் எல்லோரும் இங்கு இருக்கிறோம்!" என்
றான்.

**29**சிறையதிகாரி விளக்குகளைக்கொண்டு
வருமாறு ஒருவனுக்குப் பணித்தான். பின்
அவன் உள்ளே ஓடினான். அவன் பயத்தால்
நடுங்கிக் கொண்டிருந்தான். அவன் பவுல்,
சீலா ஆகியோர் முன்பாகக் கீழே விழுந்தான்.
**30**பின் அவன் அவர்களை வெளியே அழைத்து
வந்து அவர்களிடம், "நான் இரட்சிப்படைய
என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.
**31**அவர்கள் அவனை நோக்கி, "கர்த்தராகிய
இயேசுவில் விசுவாசமாயிரு. நீயும் உன் வீட்
டாரும் இரட்சிப்பு அடைவீர்கள்" என்றார்கள்.
**32**எனவே பவுலும் சீலாவும் கர்த்தரின் செய்
தியை சிறையதிகாரிக்கும் அவன் வீட்டிலி
ருந்த ஒவ்வொருவருக்கும் கூறினர். **33**சிறை
யதிகாரி பவுலையும் சீலாவையும் அழைத்துச்
சென்று அவர்களது காயங்களைக் கழுவி
னான். பின் சிறையதிகாரியும் அவன் வீட்டி
லிருந்த அனைவரும் ஞானஸ்நானம் பெற்ற
னர். **34**அதன் பிறகு சிறையதிகாரி பவுலையும்
சீலாவையும் வீட்டிற்கு அழைத்துச் சென்று
சாப்பாடு கொடுத்தான். அவன் வீட்டிலிருந்த
அனைவரும் தேவன்மீது கொண்ட விசுவா
சத்தால் மகிழ்ந்தார்கள். **35**மறுநாள் காலையில்,
தலைவர்கள் சில வீரர்களைச் சிறையதி
காரியிடம், "அம்மனிதர்களை விடுதலை
செய்!" என்று கூற அனுப்பினர். **36**சிறையதி
காரி பவுலிடம், "உங்களை விடுதலை செய்யும்
படியாகக் கூறி தலைவர்கள் இந்த வீரர்களை
அனுப்பியுள்ளனர். நீங்கள் போகலாம். அமை
தியாகச் செல்லுங்கள்" என்று அறிவித்தான்.
**37**ஆனால் பவுல் வீரரை நோக்கி, "உங்கள்
தலைவர்கள் எங்களை விசாரணை செய்ய
வில்லை. ஆனால் மக்கள் முன்பாக அவர்கள்
எங்களை அடித்துச் சிறையில் அடைத்தார்
கள். நாங்கள் ரோம மக்கள். எங்களுக்கு
உரிமை உள்ளது. இப்போது தலைவர்கள்
நாங்கள் இரகசியமாகப்போக வேண்டுமென
விரும்புகிறார்கள். முடியாது, தலைவர்களே
வந்து எங்களை வெளியேற்றட்டும்!" என்
றான். **38**பவுல் கூறியவற்றை வீரர்கள் தலைவர்
களுக்குக் கூறினர். பவுலும் சீலாவும் ரோம
மக்கள்* என்பதைத் தலைவர்கள் கேள்விப்
பட்டபோது, அவர்கள் பயந்தார்கள். **39**எனவே
அவர்கள் வந்து பவுலிடமும், சீலாவிடமும்
தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தார்கள். அவர்
கள் பவுலையும் சீலாவையும் சிறைக்கு வெ
ளியே அழைத்து வந்து அவர்களை நகரத்தை
விட்டுப் போகுமாறு கூறினர். **40**ஆனால்
பவுலும் சீலாவும் சிறையினின்று வந்தபோது
அவர்கள் லிதியாளின் வீட்டிற்குச் சென்றனர்.
அவர்கள் விசுவாசிகள் சிலரை கண்டு, அவர்
களை ஆறுதல்படுத்தினார்கள். பின் பவுலும்
சீலாவும் வெளியேறினர்.

### தெசலோனிக்கேயில் பவுலும் சீலாவும்

**17** அம்பிபோலி, அப்போலோனியா நகரங்
கள் வழியாகப் பவுலும் சீலாவும் பிரயா
ணம் செய்தனர். அவர்கள் தெசலோனிக்கே
நகரத்திற்கு வந்தனர். அந்நகரில் யூதர்களின்
ஜெப ஆலயம் ஒன்று இருந்தது. **2**யூதர்களைப்
பார்க்கும்படியாகப் பவுல் ஜெப ஆலயத்திற்
குள் சென்றான். இதையே அவன் எப்போதும்
செய்தான். மூன்று வாரங்கள் ஓய்வு நாட்களில்
வேதவாக்கியங்களைக் குறித்துப் பவுல் யூதர்
களோடு பேசினான். **3**வேதவாக்கியங்களை
யூதர்களுக்கு பவுல் விவரித்தான். கிறிஸ்து
இறக்கவேண்டும் என்பதையும், மரணத்திலி
ருந்து எழவேண்டும் என்பதையும் காட்
டினான். பவுல் "நான் உங்களுக்குச் சொல்லிக்
கொண்டிருக்கிற மனிதனாகிய இயேசுவே
கிறிஸ்து ஆவார்" என்றான். அவர்களில் சிலர்
ஒப்புக்கொண்டு பவுலுடனும் சீலாவுடனும்
இணைந்தார்கள். **4**ஜெப ஆலயத்தில் உண்மை
யான தேவனை வழிபட்ட கிரேக்க மனிதர்கள்
இருந்தனர். அங்கு முக்கியமான பெண்மணி
கள் பலரும் இருந்தனர். இவர்களில் பலரும்
பவுலோடும் சீலாவோடும் சேர்ந்துகொண்ட
னர். **5**ஆனால் விசுவாசியாத யூதர்கள் பொறா
மைகொண்டனர். நகரத்திலிருந்து சில தீயமனி
தர்களை கூலிக்காக அமர்த்திக் கொண்டனர்.
இத்தீய மனிதர்கள் பல மக்களைச் சேர்த்துக்
கொண்டு நகரத்தில் கலகம் விளைவித்தனர்.
பவுலையும் சீலாவையும் தேடிக்கொண்டு இந்த
மனிதர்கள் யாசோனின் வீட்டிற்குச் சென்ற
னர். பவுலையும் சீலாவையும் நகர சபையின்
முன்பாக அழைத்து வர வேண்டுமென்று அம்
மனிதர்கள் கேட்டனர். **6**ஆனால் அவர்கள் பவு
லையும் சீலாவையும் கண்டுபிடிக்கவில்லை.
எனவே மக்கள் யாசோனையும், வேறு சில
விசுவாசிகளையும் நகரின் தலைவர்கள் முன்
பாக இழுத்து வந்தனர். மக்கள் எல்லோரும்

---

**ரோம மக்கள்** *ரோமக்குடிமக்கள் விசாரணை இல்லாமல் அடிக்கப்படக் கூடாது என்பது ரோம சட்டம்.*

“இம்மனிதர்கள் உலகத்தின் எல்லா இடங்
களிலும் கலகமுண்டாக்கினார்கள். இப்போது
இவர்கள் இங்கும் வந்துவிட்டனர்! [7]யாசோன்
அவர்களைத் தனது வீட்டில் வைத்திருக்கி
றான். இராயரின் சட்டங்களுக்கு எதிரான
செயல்களை அவர்களெல்லாம் செய்கின்றனர்.
இயேசு என்னும் இன்னொரு மன்னன் இருப்
பதாக அவர்கள் கூறுகின்றனர்” என்று கூக்
குரலிட்டனர். [8]நகரத்தின் தலைவர்களும் பிற
மக்களும் இவற்றைக் கேட்டனர். அவர்கள் கலக்
கமடைந்தார்கள். [9]யாசோனும் பிற விசுவாசி
களும் தண்டனைப் பணம் செலுத்தும்படி
யாகச் செய்தனர். பின் விசுவாசிகளை விடு
தலை செய்து போகும்படி அனுமதித்தனர்.

## பெரேயாவில் ஊழியம்

[10]அதே இரவில் விசுவாசிகள் பவுலையும்
சீலாவையும் பெரேயா எனப்பட்ட மற்றொரு
நகரத்திற்கு அனுப்பினர். பெரேயாவில் பவு
லும் சீலாவும் யூதர்களின் ஜெப ஆலயத்திற்குச்
சென்றனர். [11]தெசலோனிக்கேயின் யூதர்
களைக் காட்டிலும் இந்த யூதர்கள் சிறந்தவர்
களாக இருந்தனர். பவுலும் சீலாவும் கூறிய
வற்றை இந்த யூதர்கள் மிகுந்த ஆர்வமுடன்
வரவேற்றார்கள். பெரேயாவின் யூதர்கள் ஒவ்
வொருநாளும் வேதவாக்கியங்களைக் கற்றார்
கள். இக்காரியங்கள் உண்மையானவையா
என்று அறிய இந்த யூதர்கள் விரும்பினார்கள்.
[12]இந்த யூதர்களில் பலர் நம்பிக்கை கொண்
டனர். உயர்நிலையிலிருந்த பல கிரேக்கப்
பெண்களும் ஆண்களைப் போலவே நம்
பிக்கை கொண்டனர். [13]தெசலோனிக்கேயின்
யூதர்கள் பெரேயாவில் பவுல் தேவனுடைய
வார்த்தைகளை உபதேசித்தான் என்பதை
அறிந்தபோது அவர்கள் பெரேயாவுக்கும் வந்
தனர். தெசலோனிக்கேயின் யூதர்கள் பெரேயா
வின் மக்களைக் கலக்கமுறச்செய்து கலகம்
உண்டாக்கினர். [14]எனவே விசுவாசிகள்
விரைந்து பவுலைக் கடற்கரை வழியாக
அனுப்பிவைத்தனர், ஆனால் சீலாவும் தீமோத்
தேயுவும் பெரேயாவில் தங்கினர். [15]பவுலோடு
சென்ற விசுவாசிகள் அவனை அத்தேனே
நகரத்திற்கு அழைத்துச் சென்றனர். பவுலிடமி
ருந்து அந்தச் சகோதரர்கள் சீலாவுக்கும்
தீமோத்தேயுவுக்கும் குறிப்புகளை எடுத்துச்
சென்றனர். அக்குறிப்புகள், “எவ்வளவு விரை
வில் முடியுமோ, அவ்வளவு விரைவில் என்
னிடம் வாருங்கள்” என்றன.

## அத்தேனேயில் பவுல்

[16]அத்தேனேயில் பவுல் சீலாவுக்காகவும்
தீமோத்தேயுவுக்காகவும் காத்துக் கொண்டிருந்
தான். நகரம் விக்கிரகங்களால் நிறைந்திருப்
பதைக் கண்டு பவுல் மனக்கலக்கமடைந்திருந்
தான். [17]ஜெப ஆலயத்தில் பவுல் யூதர்களோடும்
உண்மையான தேவனை வழிபட்ட கிரேக்
கரோடும் பேசினான். நகரத்தின் சந்தை வெளி
களில் நேரம் போக்கிக்கொண்டிருந்த சில
மக்களோடும் பவுல் பேசினான். ஒவ்வொரு
நாளும் பவுல் இதைச் செய்தான். [18]எப்பிக்
கூரர், ஸ்தோயிக்கர் தத்துவவாதிகளில்* சிலர்
அவனோடு விவாதித்தார்கள்.

அவர்களில் சிலர், “தான் கூறிக்கொண்டி
ருப்பதைப்பற்றி இந்த மனிதனுக்கு உண்மை
யாகவே தெரியாது. அவன் என்ன சொல்ல
முயன்று கொண்டிருக்கிறான்? ” என்றார்கள்.
இயேசு மரணத்திலிருந்து எழுப்பப்பட்ட நற்
செய்தியைப் பவுல் அவர்களுக்குக் கூறிக்
கொண்டிருந்தான். எனவே அவர்கள், “வேறு
ஏதோ சில தேவர்களைக் குறித்து அவன்
நமக்குச் சொல்லிக்கொண்டிருப்பதாகப் படு
கிறது” என்றனர். [19]அவர்கள் பவுலைங் கண்டு
பிடித்து அரியோபாகஸ்* சங்கத்தின் கூட்டத்
திற்கு அவனை அழைத்துச் சென்றனர். அவர்
கள், “நீங்கள் போதிக்கிற இப்புதிய கருத்தை
எங்களுக்கு விளக்குங்கள். [20]நீங்கள் சொல்
லுபவை எங்களுக்குப் புதியவை. இவற்றைக்
குறித்து நாங்கள் முன்னர் கேள்விப்பட்ட
தில்லை. இப்போதனையின் பொருள் என்ன
என்று நாங்கள் அறிய விரும்புகிறோம்”
என்றனர். [21](அத்தேனேயின் மக்கள் அனை
வரும் அங்கே வாழ்ந்து கொண்டிருந்த பிற
நாட்டு மக்களும் இந்தப் புத்தம்புதிய கருத்துக்
களைப் பற்றிப் பேசிப் பேசியே பொழுதைக்
கழித்தனர்.)

[22]அரியோபாகஸ் சங்கத்தின் கூட்டத்தில்
பவுல் எழுந்து நின்றான். பவுல், “அத்தேனே
யின் மனிதர்களே, நீங்கள் எல்லாவற்றிலும்
பக்தியில் மிக்கவர்களாக இருப்பதை என்
னால் பார்க்கமுடிகிறது. [23]நான் உங்கள் நகரத்
தின் வழியாகப் போய்க்கொண்டிருந்தேன். நீங்
கள் வழிபடுகின்ற பொருள்களைப் பார்த்தேன்.
‘அறியப்படாத தேவனுக்கு’ என்று எழுதப்
பட்ட ஒரு பீடத்தையும் கண்டேன். நீங்கள்
அறியாத ஒரு தேவனை வழிபடுகின்றீர்கள்.
நான் உங்களுக்குக் கூறுகின்ற தேவன் அவரே!
[24]அவரே உலகம் முழுவதையும் அதிலுள்ள
எல்லாப் பொருட்களையும் உண்டாக்கின
தேவன். அவரே வானம் பூமி ஆகியவற்றின்
கர்த்தர். மனிதன் கட்டுகிற ஆலயங்களில் அவர்
வசிப்பதில்லை. [25]உயிர், மூச்சு, பிற அனைத்
தையும் மக்களுக்குக் கொடுப்பவர் இந்த
தேவனே. அவருக்கு மக்களிடமிருந்து எந்த
உதவியும் தேவையில்லை. தேவனுக்குத்
தேவையான எல்லாம் அவரிடம் இருக்கின்
றன. [26]ஒரு மனிதனை உருவாக்குவதிலிருந்து
தேவன் ஆரம்பித்தார். அவனிலிருந்து தேவன்
வெவ்வேறான மக்களை உருவாக்கினார்.

---

**தத்துவவாதிகள்** தங்கள் சொந்த சிந்தனை களை யும் மற்றவர் சிந்தனைகளையும் படித்துப் பேசுபவர் கள்.

**அரியோபாகஸ்** சங்கம் அத்தேனேயில் உள்ள முக்கியத் தலைவர்கள் உள்ள ஒரு குழு.

தேவன் அவர்களை உலகின் எல்லாப் பகுதி
களிலும் வசிக்கச் செய்தார். எப்போது, எங்கு
அவர்கள் வசிக்கவேண்டுமென்பதைத் தேவன்
மிகச் சரியாகத் தீர்மானித்தார். 27மக்கள் தன்
னைத் தேடவேண்டுமென்று தேவன் விரும்
பினார். அவர்கள் எல்லா இடங்களிலும் தேடி
அவரைக் கண்டுகொள்ளக் கூடும். ஆனால்
அவர் நம் ஒவ்வொருவருக்கும் தொலைவில்
இல்லை.

28 'நாம் அவரோடு வாழ்கிறோம். நாம்
அவரோடு நடக்கிறோம். நாம் அவரோடு
இருக்கிறோம்.'

உங்கள் கவிஞர்கள் சிலர் இதைச் சொல்லியி
ருக்கிறார்கள்.

'ஏனென்றால் நாம் அவரது பிள்ளைகள்.'

29நாம் தேவனின் பிள்ளைகள். மக்கள்
கற்பனை செய்கிற அல்லது உண்டாக்குகிற
பொருளைப் போன்றவர் தேவன் என்று நாம்
நினைக்கக்கூடாது. அவர் பொன், வெள்ளி
அல்லது கல்லால் செய்யப்பட்ட பொருளைப்
போன்றவர் அல்ல. 30கடந்த காலத்தில் மக்கள்
தேவனைப் புரிந்து கொள்ளவில்லை. தேவ
னும் அதைப் பொருட்படுத்தவில்லை. ஆனால்
இப்போது உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனை
யும் அவனது இருதயத்தையும் வாழ்க்கையை
யும் மாற்றும்படியாக எல்லா இடங்களிலும்
கூறுகிறார். 31தேவன் உலகிலுள்ள எல்லா
மக்களையும் நியாயம் தீர்ப்பதற்கு ஒரு
நாளைக் குறித்து வைத்துள்ளார். அவர் சரி
யான தீர்ப்பு வழங்குவார். அவர் ஒரு
மனிதனைப் (இயேசுவை) பயன்படுத்துவார்.
தேவன் பலகாலத்திற்கு முன்னரேயே இம்மனி
தனைத் தேர்ந்தெடுத்தார். அம்மனிதனை மர
ணத்தி னின்று எழுப்பியதன் மூலம் தேவன்
இதற்கான உறுதியை அனைவருக்கும் அளித்
தார்" என்றான்.

32இயேசு மரணத்தினின்று எழுதல் என்
பதைக் கேள்விப்பட்டபோது அவர்களில் சிலர்
கேலிசெய்தார்கள். மற்றவர்கள்," உங்களிடம்
இதைக் குறித்து மேலும் பின்னர் கேட்போம்"
என்றனர். 33எனவே பவுல் அவர்களுக்கிடை
யிலிருந்து சென்றான். 34ஆனால் மக்களில்
சிலர் பவுலை நம்பி அவனோடு சேர்ந்து
கொண்டார்கள். அவர்களில் ஒருவன் தியொனீ
சியு, அவன் அரியோபாகஸ் சங்கத்தின் உறுப்
பினன். வேறொருத்தி தாமரி என்று அழைக்
கப்பட்ட ஒரு பெண்மணி. இன்னும் சில மக்க
ளும் அவர்களுடன் விசுவாசிகளாக மாறினர்.

### கொரிந்துவில் பவுல்

18 இதன் பிறகு பவுல் அத்தேனேயை
விட்டு, கொரிந்து நகரத்திற்குச் சென்
றான். 2கொரிந்துவில் பவுல் ஆக்கில்லா என்
னும் பெயருள்ள யூத மனிதனைச் சந்தித்தான்.
ஆக்கில்லா பொந்து நாட்டில் பிறந்தவன்.
ஆனால் ஆக்கில்லாவும் அவனது மனைவி
பிரிசில்லாவும் சமீபத்தில் இத்தாலியிலிருந்து
கொரிந்துவுக்கு வந்திருந்தனர். கிலவுதியு*
எல்லா யூதர்களும் ரோமை விட்டுப்போக
வேண்டுமென்று கட்டளையிட்டதால் அவர்கள்
இத்தாலியிலிருந்து வந்தனர். பவுல், ஆக்
கில்லா, பிரிசில்லா ஆகியோரைச் சந்திக்கச்
சென்றான். 3அவர்களும் பவுலைப் போலவே
கூடாரம் கட்டுபவர்கள். இதன் காரணமாகப்
பவுல் அவர்களோடு தங்கியிருந்து வேலை
செய்து வந்தான். 4ஒவ்வொரு ஓய்வு நாளிலும்
பவுல் ஜெப ஆலயத்தில் யூதரோடும் கிரேக்
கரோடும் பேசினான். அவர்கள் இயேசுவில்
விசுவாசம் கொள்ள ஒப்புமாறு செய்வதற்குப்
பவுல் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

5சீலாவும் தீமோத்தேயுவும் மக்கதோனியா
விலிருந்து கொரிந்துவிலுள்ள பவுலிடம் வந்
தனர். இதன் பிறகு பவுல் தனது நேரம் முழு
வதையும் மக்களுக்கு நற்செய்தியைக் கூறுவ
திலேயே செலவிட்டான். இயேசுவே கிறிஸ்து
என்பதை அவன் யூதர்களுக்குக் காட்டினான்.
6ஆனால் யூதர்கள் பவுலின் போதனையை
ஏற்றுக்கொள்ளவில்லை. சில புண்படுத்தும்
வார்த்தைகளை யூதர்கள் கூறினர். எனவே
பவுல் உடையிலிருந்த தூசியை உதறினான்.
அவன் யூதரை நோக்கி, "நீங்கள் இரட்சிக்கப்
படாவிட்டால் அது உங்களின் தவறுதான்!
நான் என்னால் முடிந்ததைச் செய்துவிட்டேன்!
இதன் பிறகு, நான் யூதரல்லாத மக்களிடம்
மட்டுமே செல்வேன்!" என்றான். 7பவுல் ஜெப
ஆலயத்தை விட்டு யுஸ்து என்பவனின்
வீட்டிற்குப் போனான். இம்மனிதன் உண்
மையான தேவனை வணங்கினான். அவன்
வீடு ஜெப ஆலயத்திற்கு அடுத்திருந்தது. 8அந்த
ஜெப ஆலயத்திற்கு அதிகாரி கிறிஸ்பு என்
பவன். கிறிஸ்புவும் அவன் வீட்டில் வசிக்கும்
எல்லா மக்களும் கர்த்தரை விசுவாசித்தனர்.
கொரிந்துவிலுள்ள வேறு பலரும் பவுல் கூறி
யதைக் கேட்டனர். அவர்களும் விசுவாசம்
வைத்து ஞானஸ்நானம் பெற்றனர்.

9இரவு வேளையில் பவுலுக்கு ஒரு தரிசனம்
கிடைத்தது. கர்த்தர் அவனை நோக்கி,
"பயப்படாதே! மக்களுக்குப் போதிப்பதைத்
தொடர்ந்து செய். நிறுத்தாதே! 10நான் உன்
னோடு இருக்கிறேன். யாரும் உன்னை தாக்கித்
துன்புறுத்த முடியாது. என்னுடைய மக்கள்
பலர் நகரத்தில் இருக்கிறார்கள்" என்றார்.
11ஒன்றரை ஆண்டு காலம் பவுல் அங்கேயே
தங்கி மக்களுக்குத் தேவனுடைய வார்த்
தையை உபதேசித்தான்.

### கல்லியோன் முன் பவுல்

12கல்லியோன் அகாயா நாட்டின் ஆளுநரா
னான். அக்காலத்தில் யூதர்களில் சிலர் பவு

**கிலவுதியு** ரோம நாட்டின் பேரரசன். கி.பி. 41-54.

லுக்கு எதிராகக் குழுவாக வந்தனர். அவர்கள்
பவுலை நீதிமன்றத்திற்குக் கொண்டு போனார்
கள். 13யூதர்கள் கல்லியோனிடம், “யூதவிதிக்கு
மாறான வகையில் தேவனை வழிபடும்படி
இம்மனிதன் மக்களுக்குக் கற்பித்துக் கொண்
டிருக்கிறான்!” என்றார்கள்.

14பவுல் ஏதோ சொல்ல இருந்தான். ஆனால்
கல்லியோன் யூதர்களிடம், “நீங்கள் பெரிய
குற்றத்தைக் குறித்தோ அல்லது தவறைக்
குறித்தோ புகார் செய்திருந்தால் நான் உங்
களுக்குச் செவிசாய்த்திருப்பேன். 15ஆனால்
யூதர்களாகிய நீங்கள் கூறுபவையோ வார்த்
தைகள், பெயர்கள் ஆகியவற்றைப் பற்றிய
வினாக்களும், உங்களுடைய சட்டத்தைப் பற்
றிய வாக்குவாதமும் மட்டுமேயாகும். எனவே
நீங்களே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்
கொள்ளவேண்டும். இந்த விஷயங்களில் நான்
நீதிபதியாக இருக்க விரும்பவில்லை!” என்
றான். 16பின் கலலியோன் அவர்களை நீதி
மன்றத்தை விட்டுப்போகச் செய்தான்.

17அவர்கள் எல்லோரும் சொஸ்தேனேயைப்
பிடித்துக் கொண்டார்கள். (சொஸ்தேனே அப்
போது ஜெப ஆலயத்தின் தலைவனாக இருந்
தான்) அவர்கள் சொஸ்தேனேயை நீதிமன்றத்
திற்கு முன்பாக அடித்தார்கள். ஆனால் கல்
லியோன் இதைக்குறித்து எந்தக் கவலையும்
படவில்லை.

### அந்தியோகியாவுக்குத் திரும்புதல்

18பவுல் சகோதரர்களுடன் பலநாட்கள் தங்கி
யிருந்தான். பின் அவன் அவர்களை விட்டுப்
புறப்பட்டு, சிரியாவிற்குக் கடற்பயணமா
னான். பிரிசில்லாவும் ஆக்கில்லாவும் அவ
னோடிருந்தனர். கெங்கிரேயாவில் பவுல்
தனது தலைமயிரைக் களைந்தான்.* அவன்
தேவனுக்கு ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தான்
என்பதை இது உணர்த்தியது. 19பின் அவர்கள்
எபேசு பட்டணத்தை அடைந்தார்கள். இங்கு
அவன் ஆக்கில்லாவையும், பிரிசில்லாவையும்
பிரிந்தான். பவுல் எபேசுவில் இருந்தபோது
ஜெப ஆலயத்திற்குள் சென்று யூதரோடு பேசி
னான்.

20யூதர்கள் பவுலை இன்னும் சில காலம்
தங்குமாறு வேண்டினார்கள். ஆனால் பவுல்
மறுத்துவிட்டான். 21“ஆனால் தேவன் விரும்
பினால் நான் உங்களிடம் மீண்டும் வருவேன்”
என்று புறப்படும்பொழுது கூறினான். எனவே
பவுல் எபேசுவிலிருந்து மீண்டும் கடற்பயணம்
செய்தான்.

22பவுல் செசரியா நகரத்திற்குச் சென்றான்.
பின்னர் அவன் எருசலேமிலிருந்த சபையின
ரைச் சந்தித்து அவர்களை வாழ்த்தினான்.
அதன் பிறகு பவுல் அந்தியோகியா நகரத்
திற்குச் சென்றான். 23பவுல் அந்தியோகியா
வில் சிலகாலம் தங்கியிருந்தான். பின் அவன்
கலாத்தியா, பிரிகியா நாடுகள் வழியாகச்
சென்றான். இந்நாடுகளில் பவுல் ஊர் ஊராகப்
பயணம் செய்தான். அவன் இயேசுவின் சீஷர்
கள் அனைவரையும் பலப்படுத்தினான்.

### அப்பொல்லோவின் ஊழியம்

24அப்பொல்லோ என்னும் பெயருள்ள
யூதன் எபேசுவிற்கு வந்தான். அப்பொல்லோ
அலெக்ஸாண்டிரியா நகரத்தில் பிறந்தவன்.
அவன் கல்வியில் தேர்ந்தவன். அவன் வேத
வாக்கியங்களை வல்லமையுடன் பயன் படுத்
தினான். 25கர்த்தரைப் பற்றி அவன் கற்றிருந்
தான். அப்பொல்லோ ஆன்மீக உற்சாகம்
நிரம்பியிருந்தான். இயேசுவைக் குறித்து மக்க
ளிடம் பேசிக்கொண்டிருந்தான். இயேசுவைக்
குறித்து சரியான கருத்துக்களையே அப்பொல்
லோ கற்பித்தான். அவனுக்குத் தெரிந்தது
யோவானின் ஞானஸ்நானம் மட்டுமே. 26அப்
பொல்லோ ஜெப ஆலயங்களில் துணிவாகப்
பேசத் தொடங்கினான். ஒவ்வொரு முறையும்
அவன் துணிவுடன் அதைச் செய்தான். அவன்
பேசுவதைப் பிரிசில்லாவும் ஆக்கில்லாவும்
கேட்டனர். அவர்கள் அவனைத் தங்கள் வீட்
டிற்கு அழைத்துச் சென்று தேவனுடைய
வழியை இன்னும் துல்லியமாக அறிய உதவி
னார்கள். 27அகாயா நாட்டிற்குப் போவதற்கு
அப்பொல்லோ விரும்பினான். அதற்கு எபே
சுவின் சகோதரர்கள் அவனுக்கு உதவினர்.
அகாயாவிலுள்ள இயேசுவின் சீஷர்களுக்கு
அவர்கள் ஒரு கடிதம் எழுதினர். அக்கடிதத்தில்
அப்பொல்லோவை இச்சீஷர்கள் வரவேற்கு
மாறு அவர்கள் கேட்டனர். அகாயாவில் உள்ள
இந்தச் சீஷர்கள் தேவனுடைய கிருபையின்
மூலமாக இயேசுவில் விசுவாசம் வைத்திருந்
தார்கள். அப்பொல்லோ அங்கு வந்துச் சேர்ந்த
பொழுது அவன் அவர்களுக்கு மிகவும் உத
வினான். 28அவன் எல்லா மக்களுக்கும்
முன்பாக யூதர்களுக்கு எதிராக மிக வன்மை
யாக வாதிட்டான். யூதர்கள் தவறான போ
தனைகளைப் பெற்றிருந்தார்கள் என்பதை
நிரூபித்தான். அவன் வேதவாக்கியங்களை
பயன்படுத்தி இயேசுவே கிறிஸ்து என்று
காட்டினான்.

### எபேசுவில் பவுல்

19 அப்பொல்லோ கொரிந்து நகரில் இருந்
தபோது எபேசு நகருக்குச் செல்லும்
வழியில் பவுல் சில உள்பகுதிகளின் வழியா
கப் போய்க்கொண்டிருந்தான். பவுல் எபேசு
வில் சீஷர்கள் சிலரைக் கண்டுபிடித்தான்.
2பவுல் அவர்களை நோக்கி, “நீங்கள் விசுவா
சித்தபோது பரிசுத்த ஆவியானவரைப் பெற்
றீர்களா?” என்று கேட்டான்.

இந்தச் சீஷர்கள் அவனுக்கு, “நாங்கள்
பரிசுத்த ஆவியானவரைப்பற்றிக் கேள்விப்
படவே இல்லை” என்றனர்.

---

***தலைமயிரைக் களைந்தான்*** *கடவுளுக்கு வேண்
டியிருந்த ஒரு காரியம் முடிந்துவிட்டது என்பதை
இதன் மூலம் யூதர்கள் காட்டினார்கள்.*

3எனவே பவுல் அவர்களை நோக்கி, "பின்
நீங்கள் எத்தகைய ஞானஸ்நானம் பெற்றீர்
கள்?" என்று கேட்டான்.
அவர்கள், "யோவான் கற்பித்த ஞானஸ்
நானம் அது" என்றார்கள். 4பவுல், "மக்கள்
தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க விரும்
புவதைக் காட்டுவதற்கு யோவான் அவர்களை
ஞானஸ்நானம் பெறும்படியாகக் கூறினான்.
அவனுக்குப்பின் வருகிற ஒருவரை நம்பும்
படியாக யோவான் மக்களுக்குக் கூறினான்.
அவர் இயேசுவே" என்றான்.
5அவர்கள் இதனைக் கேட்டபோது அவர்கள்
கர்த்தராகிய இயேசுவின் பெயரில் ஞானஸ்
நானம் பெற்றார்கள். 6அப்போது பவுல்
அவனது கைகளை அவர்கள்மீது வைத்த
போது பரிசுத்த ஆவியானவர் அவர்கள்மீது
வந்தார். அவர்கள் வெவ்வேறு மொழிகளைப்
பேசவும் தீர்க்கதரிசனம் சொல்லவும் ஆரம்பித்
தனர். 7இக்குழுவில் சுமார் பன்னிரண்டு மனி
தர்கள் இருந்தனர்.
8பவுல் ஜெப ஆலயத்திற்குள் சென்று, மிக
வும் துணிவாகப் பேசினான். பவுல் மூன்று
மாதங்கள் இதைச் செய்தான். அவன் யூதர்
களிடம் தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிப்
பேசி, அவற்றை யூதர்கள் ஏற்றுக்கொள்ளும்
படித் தூண்ட முயற்சித்தான். 9ஆனால் சில
யூதர்கள் பிடிவாதமாக இருந்தனர். அவர்கள்
நம்ப மறுத்தனர். இந்த யூதர்கள் தேவனுடைய
வழியைக் குறித்துத் தீயவற்றைப் பேசினர்.
எல்லா மக்களும் இவற்றைக் கேட்டனர்.
எனவே பவுல் இந்த யூதரை விட்டு நீங்கி,
இயேசுவின் சீஷர்களைத் தன்னோடு அழைத்
துச் சென்றான். திறன்னு என்ற ஒருவனின்
பள்ளிக்கூடம் இருந்த இடத்திற்குப் பவுல் போ
னான். பவுல் அங்கிருந்த மக்களுடன் தினமும்
கலந்துரையாடினான். 10பவுல் இதை இரண்டு
வருடங்கள் செய்தான். இச்செயலால் ஆசியா
வில் வசித்துக்கொண்டிருந்த ஒவ்வொரு யூத
னும் கிரேக்கனும் (யூதரல்லாத) தேவனுடைய
வார்த்தையைக் கேட்டனர்.

## ஸ்கேவாவின் பிள்ளைகள்

11சில அசாதாரணமான அற்புதங்களைச்
செய்வதற்குத் தேவன் பவுலைப் பயன்படுத்
தினார். 12பவுல் பயன்படுத்திய துணிகளையும்
கைக்குட்டைகளையும் சிலர் எடுத்துச் சென்
றனர். இவற்றை மக்கள் நோயாளிகள்மீது
வைத்தனர். அவர்கள் இதைச் செய்தபோது,
நோயாளிகள் குணமடைந்தார்கள். அசுத்த
ஆவிகள் அவர்களைவிட்டு நீங்கிச் சென்றன.
13-14சில யூதர்களும் சுற்றுப் பிரயாணம்
செய்து மக்களை விட்டு அசுத்த ஆவிகள்
நீங்கும்படியாகச் செய்தனர். ஸ்கேவாவின்
ஏழு மகன்களும் இதைச் செய்தனர். (ஸ்கேவா
ஒரு தலைமை ஆசாரியன்) கர்த்தர் இயேசுவின்
பெயரைப் பயன்படுத்தி, மக்களிடமிருந்து
அசுத்த ஆவிகளை வெளியேற்ற இந்த யூதர்கள்
முயன்றனர். அவர்கள் எல்லோரும், "பவுல்
பேசுகின்ற அதே இயேசுவினால், வெளியேறு
மாறு நான் கட்டளையிடுகிறேன்!" என்று
கூறினர்.
15ஆனால் ஒரு முறை ஒரு அசுத்த ஆவி
இந்த யூதர்களை நோக்கி, "எனக்கு இயேசு
வைத் தெரியும், எனக்குப் பவுலைப் பற்றியும்
தெரியும், ஆனால் நீங்கள் யார்?" என்று
கேட்டது.
16மேலும் அசுத்த ஆவி பிடித்த மனிதன்,
இந்த யூதர்கள் மீது தாவினான். அவர்கள்
எல்லோரைக் காட்டிலும் அவன் மிகுந்த பலம்
பொருந்தியவனாக இருந்தான். அவன் அவர்
களை அடித்து, அவர்களின் ஆடைகளைக்
கிழித்துப் போட்டான். அந்த வீட்டிலிருந்து
இந்த யூதர்கள் நிர்வாணமாக ஓடிப்போனார்
கள். 17எபேசுவின் எல்லா ஜனங்களும்,
யூதரும் கிரேக்கரும் இதனை அறிந்தனர். தேவ
னிடம் மிகுந்த மரியாதை கொள்ளத் துவங்
கினர். கர்த்தராகிய இயேசுவின் பெயரை
மக்கள் அதிகமாக மகிமைப்படுத்த ஆரம்பித்
தனர்.
18விசுவாசிகளில் பலர் தாங்கள் செய்த
பாவச் செயல்களை வெளிப்படையாக ஒப்புக்
கொள்ளத் துவங்கினார்கள். 19சில விசுவாசி
கள் மந்திரத்தைப் பயன்படுத்தினவர்களாயி
ருந்தனர். அவர்கள் தங்கள் மந்திர நூல்களைக்
கொண்டு வந்து, அவற்றை எல்லோருக்கும்
முன்பாக எரித்தனர். அப்புத்தகங்கள் சுமார்
ஐம்பதாயிரம் வெள்ளிக்காசுகள்* மதிப்புடை
யனவாக இருந்தன. 20இவ்வாறே கர்த்தரின்
வார்த்தை மிக்க வல்லமை வாய்ந்த வகையில்
அதிகமான மக்களைப் பாதிக்க ஆரம்பித்தது.
மிக அதிக எண்ணிக்கையில் மக்கள் விசு
வாசம் வைத்தனர்.

## பவுல் பயணத்திட்டம்

21இக்காரியங்களுக்குப் பிறகு, பவுல் எருச
லேமுக்குச் செல்லத் திட்டமிட்டான். மக்கதோ
னியா, அகாயா நாடுகள் வழியாகச் சென்று,
பின் எருசலேமுக்குச் செல்லப் பவுல் திட்டமிட்
டான். பவுல், "நான் எருசலேமை அடைந்த
பிறகு, ரோமையும் பார்க்க வேண்டும்" என்று
எண்ணினான். 22தீமோத்தேயுவும், எரஸ்துவும்
பவுலுக்கு உதவியவர்களில் இருவர். மக்கதோ
னியாவுக்கு அவர்களைத் தனக்கு முன்பா
கவே பவுல் அனுப்பினான். ஆசியாவில்
இன்னும் சிலகாலம் பவுல் தங்கியிருந்தான்.

## எபேசுவில் குழப்பம்

23ஆனால் அக்காலத்தில் எபேசுவில் மிகத்
தீவிரமான ஒரு குழப்பம் ஏற்பட்டது. தேவ
னுடைய வழியைக் குறித்த குழப்பம் அது.
அவையெல்லாம் இவ்வாறு நிகழ்ந்தன. 24தெ
மெத்திரியு என்னும் பெயர்கொண்ட மனிதன்

---

***50,000 வெள்ளிக் காசுகள்*** ஒரு காசு என்பது ஒரு மனிதனுக்கான ஒருநாள் கூலி.

ஒருவன் இருந்தான். அவன் வெள்ளி வேலை
செய்பவனாக இருந்தான். ஆர்தமிஸ்* தேவதை
யின் தேவாலயத்தைப் போன்று தோற்றம
ளித்த வெள்ளியாலான சிறிய மாதிரி தேவா
லயங்களை அவன் செய்து வந்தான். இவ்வே
லையைச் செய்தவர்கள் மிகுந்த பணம் சம்பா
தித்தார்கள். 25இதே வேலையைச் செய்து வந்த
வர்கள் அனைவரையும் அதன் தொடர்பான
வேலையைச் செய்தவர்களையும் தெமெத்
திரியு ஒன்று கூட்டினான். தெமெத்திரியு அவர்
களை நோக்கி, “நமது வளம் இத்தொழிலைச்
சார்ந்துள்ளதை அறிவீர்கள். 26ஆனால் இந்த
மனிதன் பவுல் செய்து கொண்டிருப்பதைப்
பாருங்கள்! அவன் சொல்வதைக் கேளுங்கள்!
பவுல் மனிதர்களைத் தூண்டி, மனம் மாற்றி
விட்டான். எபேசுவிலும் அநேகமாக ஆசியா
வின் எல்லாப் பகுதிகளிலும் இதைச் செய்
திருக்கிறான். மனிதன் செய்கின்ற கடவுள்
சிலைகள் உண்மையானவை அல்ல என்று
பவுல் சொல்கிறான். 27பவுல் சொல்கின்ற
இந்தக் காரியங்கள் மக்களை நமது வேலைக்
கெதிராகத் திருப்பக்கூடும். ஆனால் இன்
னொரு சிக்கலும் இருக்கிறது. பெரிய தேவி
யான ஆர்தமிஸின் தேவாலயம் முக்கியமான
தல்ல என்று மக்கள் நினைக்கக் கூடும்.
அவளது பெருமை அழிக்கப்படக்கூடும். ஆசி
யாவிலும், உலகம் முழுவதிலும் உள்ள
ஒவ்வொருவரும் வழிப்படுகின்ற தேவதை
ஆர்தமிஸ் ஆவாள்” என்றான்.
28அம்மனிதர்கள் இதனைக் கேட்டபோது
மிகவும் கோபமுற்றனர். அவர்கள், “எபேசு
பட்டணத்தார்களின் தேவியான ஆர்தமிஸே
பெரியவள்” என்று உரக்கக் கூவினர். 29நகரத்
தின் எல்லா மக்களும் குழப்பமான நிலையில்
காயுவையும், அரிஸ்தர்க்குவையும் பிடித்தார்
கள். (இவ்விருவரும் மக்கதோனியாவைச்
சேர்ந்தவர்கள். அவர்கள் பவுலோடு பயணம்
செய்து கொண்டிருந்தனர்.) பின் எல்லா
மக்களும் அரங்கிற்குள் ஓடினார்கள். 30பவுல்
உள்ளே சென்று கூட்டத்தில் பேச விரும்
பினான். ஆனால் இயேசுவின் சீஷர்கள் அவ
னைப் போக அனுமதிக்கவில்லை. 31மேலும்
நாட்டின் சில தலைவர்கள் பவுலின் நண்பர்
களாக இருந்தனர். இத்தலைவர்கள் அவனுக்கு
ஒரு செய்தி அனுப்பினர். அவர்கள் பவுல்
அரங்கிற்குள் செல்ல வேண்டாமென்று கூறி
னர். 32ஒருவர் சத்தம்போட்டு ஒன்றையும் இன்
னொருவர் சத்தம்போட்டு இன்னொன்றையும்
சொன்னார்கள். மேலும் அவர்கள் எதற்காகக்
கூடியிருக்கிறார்கள் என்பதைப் பெரும்
பாலோர் அறியாதவாறு கூட்டத்தில் குழப்பம்
மிகுந்திருந்தது. 33யூதர்கள் அலெக்ஸாண்டர்
என்னும் பெயருள்ள ஒருவனை மக்கள் முன்
பாக நிறுத்தினர். அவன் செய்ய வேண்டியதை
மக்கள் அவனுக்கு விளக்கினார்கள். மக்களுக்
குக் காரியங்களை விளக்கவேண்டியிருந்த
தால் அலெக்ஸாண்டர் தனது கையை அமை
திக்காக அசைத்தான். 34அலெக்ஸாண்டர் ஒரு
யூதன் என்பதை மக்கள் அடையாளம் கண்ட
போது அவர்கள் எல்லோரும் உரத்தகுரலில்
கூச்சலிட ஆரம்பித்தனர். சுமார் இரண்டு மணி
நேரம் அவர்கள் தொடர்ந்து கூச்சலிட்டனர்.
மக்கள் “எபேசுவின் ஆர்தமிஸ் பெருமை பொ
ருந்தியவள்! எபேசுவின் ஆர்தமிஸ் பெருமை
மிக்கவள்! ஆர்தமிஸ் பெரியவள்!” என்றனர்.
35நகர அலுவலன் மக்களை அமைதியாக
இருக்குமாறு வேண்டினான். அவன், “எபேசு
வின் மக்களே! ஆர்தமிஸ் தேவியின் தேவா
லயத்தையும் பரலோகத்திலிருந்து விழுந்த
அவளது பரிசுத்த பாறையையும்* பெற்ற
நகரம் எபேசு என்பதை எல்லா மக்களும்
அறிவர். 36இவற்றை யாரும் மறுக்க முடியாது.
எனவே நீங்கள் அமைதியாக இருங்கள். முரட்
டுத்தனமாக எதையும் செய்யாதீர்கள் 37நீங்கள்
இந்த மனிதர்களை அழைத்து வந்திருக்கிறீர்
கள். ஆனால் நமது தேவிக்கு விரோதமாக
அவர்கள் எதுவும் கூறவில்லை. அவள் தேவா
லயத்திலிருந்து அவர்கள் எதையும் திருட
வில்லை. 38நம்மிடம் நீதி வழங்கும் மன்றங்
களும் நீதிபதிகளும் இருக்கிறார்கள். தெமெத்
திரியுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் எவ
ருக்கேனும் அவர்களுக்கு எதிராக வழக்குகள்
இருக்கின்றனவா? அவர்கள் நீதிமன்றத்திற்குப்
போகவேண்டும்! அங்கே குற்றச்சாட்டுகளை
யும் எதிர் குற்றச்சாட்டுகளையும் வைக்கலாம்.
39நீங்கள் பேசவேண்டியது வேறு ஏதேனும்
உள்ளதா? அப்படியானால் மக்களின் நகர
மன்றம் நமக்கிருக்கிறது. அங்கு முடிவெடுக்
கலாம். 40நான் இதை ஏன் சொல்கிறேன் என்
றால் இன்று ஒருவன் இந்தத் தொல்லையைப்
பார்த்துவிட்டு, நாம் கலகத்தை உண்டாக்குகி
றோம் என்று கூறலாம். இந்தத் தொல்லையை
நம்மால் விளக்க முடியாது, ஏனெனில் இக்
கூட்டத்திற்கு உண்மையான காரணம் எதுவும்
இல்லை” என்றான். 41நகர அலுவலன் இவற்
றைக் கூறிய பிறகு, அவன் மக்களை வீடுகளுக்
குச் செல்லுமாறு கூறினான். எல்லா மக்களும்
கலைந்தார்கள்.

### மக்கதோனியா, கிரீஸில் பவுல்

20 தொல்லை நீங்கியபோது பவுல் சீஷர்
களைத் தன்னை வந்து பார்க்குமாறு
அழைத்தான். அவன் அவர்களுக்கு ஆறுதல்
மொழிகளைக் கூறி, பின் விடை பெற்றான்.
பவுல் மக்கதோனியா நாட்டிற்குத் தன் பயணத்
தைத் துவக்கினான். 2மக்கதோனியாவிற்குச்
சென்ற வழியில் பல இடங்களில் தங்கி சீஷர்
களைப் பலப்படுத்துவதற்குப் பல காரியங்

**ஆர்தமிஸ்** சின்ன ஆசியாவிலுள்ள மக்களால் வழிபடப்படும் கிரேக்க தேவதை.

**பரிசுத்த பாறை** சாதாரணமான இது ஒரு பாறை. ஆனால் மக்கள் இப்பாறை ஆர்தமிஸ் போல் இருப்பதாக எண்ணி வணங்கினர்.

களை அவர்களுக்குக் கூறினான். பின் பவுல்
கிரீசை அடைந்தான். 3அவன் அங்கு மூன்று
மாதங்கள் தங்கினான். அவன் சிரியாவுக்குக்
கடற்பயணம் செய்வதற்குத் தயாராகிக் கொண்
டிருந்தான். ஆனால் சில யூதர்கள் அவனுக்
கெதிராக திட்டம் வகுத்துக் கொண்டிருந்தனர்.
எனவே பவுல் மக்கதோனியா வழியாக சிரி
யாவுக்குத் திரும்பிப்போக முடிவு செய்தான்.
4சில மனிதர்கள் அவனோடிருந்தனர். அவர்
கள் பெரேயா நகரத்தைச் சேர்ந்த சோபத்தர்,
தெசலோனிக்கா நகரத்தின் அரிஸ்தர்க்கு
மற்றும் செக்குந்து, தெர்பெ நகரின் காயு,
தீமோத்தேயு, ஆசியாவின் இரண்டு மனிதர்
களான தீகிக்குவும், துரோப்பீமும் ஆவர்.
5பவுலுக்கு முன்னரே இம்மனிதர்கள் சென்
றனர். துரோவா நகரில் அவர்கள் எங்களுக்
காக காத்திருந்தனர். 6புளிப்பில்லாத அப்பத்
தின் பண்டிகைக்குப் பிறகு நாங்கள் பிலிப்பி
நகரத்திலிருந்து கடற்பயணமாகச் சென்றோம்.
ஐந்து நாட்களுக்குப் பிறகு துரோவாவில்
இம்மனிதர்களை நாங்கள் சந்தித்தோம். அங்கு
ஏழு நாட்கள் தங்கினோம்.

### துரோவாவில் பவுல்

7கர்த்தரின் திருவிருந்தை* உண்பதற்காக
நாங்கள் அனைவரும் வாரத்தின் முதல்
நாளாகிய ஞாயிறு அன்று கூடினோம். பவுல்
கூட்டத்தில் பேசினான். மறுநாள் அங்கிருந்து
செல்லத் திட்டமிட்டான். நள்ளிரவு வரைக்கும்
பவுல் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தான்.
8நாங்கள் எல்லோரும் மாடியிலுள்ள அறை
யில் கூடியிருந்தோம். அறையில் பல விளக்
குகள் ஒளிவீசிக் கொண்டிருந்தன. 9ஐத்தீகு
என்னப்பட்ட இளைஞன் ஜன்னலில் அமர்ந்
திருந்தான். பவுல் தொடர்ந்து பேசிக்கொண்டே
யிருந்தான். ஐத்தீகு மிக, மிக தூக்க கலக்கமுற்
றான். கடைசியில் அவன் தூங்கி, ஜன்னலிலி
ருந்து விழுந்தான். மூன்றாம் மாடியிலிருந்து
அவன் கீழே விழுந்தான். மக்கள் சென்று
அவனைத் தூக்கியபோது அவன் இறந்து விட்
டிருந்தான். 10பவுல் ஐத்தீகுவிடம் இறங்கிச்
சென்றான். அவன் முழங்காலிட்டு ஐத்தீகுவை
கட்டித் தழுவினான். பவுல் பிற விசுவாசி
களை நோக்கி, “கவலைப்படாதீர்கள். அவன்
இப்போது உயிரோடிருக்கிறான்” என்றான்.
11பவுல் மீண்டும் மாடிக்குச் சென்றான். அவன்
அவர்களோடு அப்பத்தைப் பிட்டு உண்டான்.
பவுல் அவர்களோடு நீண்ட நேரம் பேசிக்
கொண்டிருந்தான். அவன் பேசி முடித்தபோது
அதிகாலைப் பொழுதாகியிருந்தது. பின் பவுல்
புறப்பட்டுப்போனான். 12மக்கள் இளைஞனை
(ஐத்தீகுவை) வீட்டிற்குள் எடுத்துச் சென்றனர்.
அவன் உயிரோடிருந்தான். மக்கள் மிகவும்
ஆறுதல் அடைந்தனர்.

### மிலேத்துவுக்குப் பயணம்

13ஆசோ நகருக்கு நாங்கள் கடல்வழியாக
பயணமானோம். நாங்கள் பவுலுக்கு முன்பா
கவே முதலாவதாக அங்கு சென்றோம். ஆசோ
வில் பவுல் எங்களைச் சந்தித்து அங்குள்ள
கப்பலில் எங்களோடு சேர்ந்துகொள்ளத் திட்ட
மிட்டான். பவுல் ஆசோவிற்கு நிலத்தின் வழி
யாகப் பயணம்செய்ய விரும்பியதால் இவ்
வாறு செய்யும்படி எங்களுக்குக் கூறினான்.
14பின்னர் பவுலை நாங்கள் ஆசோவில் சந்தித்
தோம். அங்கு அவன் எங்களோடு கப்பலின்
மேல் வந்தான். நாங்கள் எல்லோரும் மித்தி
லேனே நகருக்குச் சென்றோம். 15மறுநாள்
நாங்கள் மித்திலேனேயிலிருந்து கடற்பயணமா
னோம். கீயுதீவின் அருகேயுள்ள ஓரிடத்திற்கு
வந்தோம். மறுநாள் சாமோஸ் தீவிற்கு நாங்கள்
கடல்வழியாகப் பயணமானோம். ஒரு நாள்
கழித்து, மிலேத்து நகரத்திற்கு வந்தோம்.
16எபேசுவில் தங்கவேண்டாமென்று பவுல் ஏற்
கெனவே முடிவெடுத்திருந்தான். ஆசியாவில்
நீண்டகாலம் தங்க அவன் விரும்பவில்லை.
முடிந்தால் பெந்தெகோஸ்து* நாளில் எருசலே
மில் இருக்க விரும்பியதால் அவன் அவசரப்
பட்டுக் கொண்டிருந்தான்.

### எபேசு மூப்பர்களுடன் பவுல்

17மிலேத்துவிலிருந்து பவுல் ஒரு செய்தியை
எபேசுவுக்கு அனுப்பினான். எபேசு சபை
யின் மூப்பரைத் தன்னிடம் வருமாறு அவன்
அழைத்தான். 18மூப்பர்கள் அவனிடம் வந்த
பொழுது பவுல் அவர்களை நோக்கி, “நான்
ஆசியாவுக்கு வந்த முதல் நாளிலிருந்து என்
வாழ்க்கையைக் குறித்து நீங்கள் அறிவீர்கள்.
நான் உங்களோடிருந்த காலம் முழுவதும் நான்
வாழ்ந்த வகையையும் நீங்கள் அறிவீர்கள்.
19யூதர்கள் அடிக்கடி எனக்கு எதிராகக்
காரியங்களைத் திட்டமிட்டனர். இது எனக்குத்
துன்பங்களைத் தந்தது. நான் அடிக்கடி அழு
தேன். ஆனால் மிகப் பணிவாய் எப்போதும்
தேவனுக்குச் சேவை செய்தேன் என்பது உங்
களுக்குத் தெரியும். 20உங்களுக்கு மிகவும்
சிறந்ததையே நான் எப்போதும் செய்தேன்.
இயேசுவைக் குறித்த நற்செய்தியை உங்களுக்
குக் வெளிப்படையாகக் கூறினேன். வீடுகளி
லும் உங்களுக்குக் கற்பித்தேன். 21தங்கள் இருத
யங்களை மாற்றி, தேவனுக்கு நேராகத் திரும்
பும்படி, யூதரும் கிரேக்கருமாகிய எல்லா
மக்களுக்கும் நான் கூறினேன். நமது கர்த்தரா
கிய இயேசுவில் நம்பிக்கை வைக்குமாறு
அவர்கள் எல்லோருக்கும் சொன்னேன்.
22ஆனால் இப்போது பரிசுத்த ஆவியானவருக்
குக் கீழ்ப்படிந்து எருசேலேமுக்கு நான் போக
வேண்டும். எனக்கு அங்கு என்ன நேரு
மென்று எனக்குத் தெரியாது. 23துன்பமும்

---

**கர்த்தரின் திருவிருந்து**. இயேசு தன் சீஷர்களுக்குத் தன்னை நினைவுகொள்வதற்காகக் கொடுத்த உணவு. லூக்கா 22:14-20.

**பெந்தெகோஸ்து** கோதுமை அறுவடை நாளை யூதர்கள் விழாவாகக் கொண்டாடுவர்.

சிறையும் எருசலேமில் எனக்காக காத்திருப்
பதை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு நகரி
லும் கூறுவதை மட்டும் அறிவேன். 24நான்
எனது உயிரைப் பொருட்படுத்தவில்லை.
நான் பந்தயத்தை முடிக்கிறேன் என்பதும்
தேவனுடைய கிருபையைப் பற்றிய நற்செய்
தியை மக்களுக்குச் சொல்லுமாறு கர்த்தரா
கிய இயேசு எனக்குக் கொடுத்த வேலையை
முடிக்கிறேன் என்பதும் முக்கியமானவை.
25“இப்போது நான் சொல்வதைக் கேளுங்
கள். என்னை உங்களில் ஒருவரும் திரும்பவும்
பார்க்கமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரி
யும். தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றிய
நற்செய்தியை நான் உங்களோடிருந்தபோதெல்
லாம் உங்களுக்குக் கூறினேன். 26எனவே நான்
உறுதியாயிருக்கிற ஒன்றைக் குறித்து இன்று
உங்களுக்குக் கூற முடியும். உங்களில் சிலர்
இரட்சிக்கப்படாவிட்டால் தேவன் என்னைக்
குற்றம் சாட்டமாட்டார். 27நீங்கள் அறிந்து
கொள்ளவேண்டுமென தேவன் விரும்பிய
அனைத்தையும் உங்களுக்குக் கூறினேன்.
எதையும் விட்டு வைக்கவில்லை என்பதால்
இதை நான் சொல்ல முடிகிறது. 28உங்களுக்
காகவும் தேவன் உங்களுக்குத் தந்த எல்லா
மக்களுக்காகவும் எச்சரிக்கையாக இருங்கள்.
அவரது மந்தையைக் கவனிக்கும் வேலையை
பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குக் கொடுத்
திருக்கிறார். தேவனின் சபைக்கு நீங்கள்
மேய்ப்பர்களைப்போல் இருக்க வேண்டும்.
தேவன் தமது சொந்த இரத்தத்தால் வாங்கிய
சபை இது. 29நான் பிரிந்த பின் உங்கள்
குழுவில் சில மனிதர்கள் வருவார்கள் என்
பதை அறிவேன். அவர்கள் கொடிய ஓநாய்
களைப் போல் இருப்பார்கள். அவர்கள் மந்தை
யை (கூட்டத்தை) அழிக்க முயல்வர். 30மேலும்
உங்கள் சொந்தக் குழுவின் மனிதர்களும்
மோசமான தலைவராக மாறுவர். அவர்கள்
தவறான போதனைகளைப் போதிக்கத் தொ
டங்குவர். உண்மையை விட்டு விலகி இயேசு
வின் சீஷர்கள் சிலரைத் தம்மைப் பின்பற்று
மாறு செய்வார்கள். 31எனவே எச்சரிக்கை
யாக இருங்கள்! எப்போதும் இதை நினைவு
கூருங்கள். நான் உங்களோடு மூன்று ஆண்டு
கள் இருந்தேன். இக்காலத்தில் நான் உங்களை
எச்சரிப்பதை நிறுத்தவில்லை. நான் இரவும்
பகலும் உங்களுக்கு உபதேசித்தேன். நான்
அடிக்கடி உங்களுக்காக அழுதேன்.
32“நான் இப்போது உங்களை தேவனுக்கு
நியமம் செய்கிறேன். உங்களைப் பலப்படுத்தக்
கூடிய தேவனுடைய கிருபையைப் பற்றிய
தேவனுடைய செய்தியைச் சார்ந்திருக்கிறேன்.
தேவன் தனது பரிசுத்த மக்கள் எல்லோருக்கும்
கொடுக்கும் ஆசீர்வாதத்தை இந்தச் செய்தி
உங்களுக்குக் கொடுக்கும். 33நான் உங்களோ
டிருந்தபோது, பிறருடைய பணத்தையோ
விலை உயர்ந்த ஆடைகளையோ விரும்
பவில்லை. 34எனது தேவைகளைப் பூர்த்தி
செய்து கொள்வதற்கும், என்னோடிருந்த மக்க
ளின் தேவைகளுக்காகவும் எனது கைகளைக்
கொண்டே நான் எப்போதும் உழைத்தேன்
என்பது உங்களுக்குத் தெரியும். 35நான் செய்
ததைப் போலவே நீங்களும் உழைத்து எளிய
மக்களுக்கு உதவவேண்டுமென எப்போதும்
உங்களுக்குச் சுட்டிக் காட்டினேன். கர்த்தராகிய
இயேசுவின் வார்த்தைகளை நினைவு கூரு
வதற்கு உங்களுக்குக் கற்பித்தேன். ‘நீங்கள்
ஒன்றைப் பெறும் வேளையைக் காட்டிலும்
பிறருக்குக் கொடுக்கும்போதே மகிழ்ச்சியாக
இருங்கள்’ என்று இயேசு கூறினார்” என்
றான்.
36இவ்விஷயங்களைக் கூறி முடித்த பின்னர்,
பவுல் எல்லோருடனும் முழங்காலிட்டு பிரார்த்
தனை செய்தான். 37-38அங்கு அழுகின்ற பெரும்
சத்தம் இருந்தது. பவுல் மீண்டும், அவர்கள்
தன்னைப் பார்க்கமாட்டார்கள் என்று கூறிய
தால் அம்மனிதர்கள், மிகவும் வருத்தமுடனிருந்
தார்கள். அவர்கள் பவுலைக் கட்டிக்கொண்டு,
முத்தம் கொடுத்தனர். அவனை வழியனுப்புவ
தற்காக அவனோடு கப்பல்வரைக்கும் சென்
றனர்.

## பவுல் எருசலேமுக்குப் போகிறான்

21 நாங்கள் அனைவரும் மூப்பர்களிடமி
ருந்து விடைபெற்றோம். பின் கடற்பய
ணம் துவங்கினோம். நேராகக் கோஸ் தீவிற்
குச் சென்றோம். மறுநாள் ரோது தீவிற்குச்
சென்றோம். ரோதுவிலிருந்து நாங்கள் பத்தா
ராவுக்குப் போனோம். 2சீப்புரு பகுதிக்குப்
போய்க்கொண்டிருந்த கப்பல் ஒன்றை பத்தாரா
வில் கண்டோம். நாங்கள் அக்கப்பலில் ஏறி,
கடலில் பயணப்பட்டோம். 3சீப்புரு தீவினருகே
நாங்கள் கடற்பயணம் செய்தோம். வடதிசை
யில் நாங்கள் அதைப்பார்க்க முடிந்தது.
ஆனால் நாங்கள் அங்கு நிற்கவில்லை. நாங்
கள் சிரியா நாட்டிற்கு பயணமானோம். தீரு
நகரத்தில் சில சரக்குகளை இறக்கும் பொருட்டு
கப்பல் நிறுத்தப்பட்டது. 4தீருவில் சீஷர்கள்
சிலரைக் கண்டோம். அவர்களோடு ஏழு நாட்
கள் தங்கியிருந்தோம். பரிசுத்த ஆவியானவர்
அவர்களுக்குக் கூறியதின்படி, அவர்கள்
பவுலை எருசலேமுக்குப் போகாதபடி எச்ச
ரித்தனர். 5ஆனால் எங்கள் சந்திப்பிற்குப் பின்
நாங்கள் புறப்பட்டோம். எங்கள் பயணத்தைத்
தொடர்ந்தோம். இயேசுவின் சீஷர்கள் எல்லோ
ரும், பெண்களும், குழந்தைகளும் கூட எங்க
ளோடு நகருக்கு வெளியே வந்து எங்களுக்கு
விடை கொடுக்க வந்தனர். கடற்கரையில் நாங்
கள் முழங்காலிட்டு பிரார்த்தனை செய்தோம்.
6பின் நாங்கள் விடைபெற்று கப்பலில் ஏறி
னோம். சீஷர்கள் வீட்டிற்குச் சென்றனர்.
7தீருவிலிருந்து நாங்கள் எங்கள் பயணத்
தைத் தொடர்ந்து பித்தொலோமாய் நகருக்குச்
சென்றோம். அங்கு நாங்கள் சகோதரர்களை
வாழ்த்தினோம், அவர்களோடு ஒருநாள் தங்கி

யிருந்தோம். [8]மறுநாள் நாங்கள் பித்தொலோ
மாயை விட்டுப் புறப்பட்டு செசரியா நகரத்
திற்குப் போனோம். நாங்கள் பிலிப்புவின்
வீட்டிற்குச் சென்று, அவனோடு தங்கினோம்.
நற்செய்தியைக் கூறும் வேலையைப் பிலிப்பு
செய்து வந்தான். ஏழு உதவியாளரில் அவ
னும் ஒருவன். [9]அவனுக்குத் திருமணமாகாத
நான்கு பெண்கள் இருந்தனர். தீர்க்கதரிசனம்
சொல்லும் வரம் அப்பெண்களுக்கு இருந்தது.
[10]பல நாட்கள் நாங்கள் அங்கிருந்த பிறகு
அகபு என்னும் தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து
வந்தான். [11]அவன் எங்களிடம் வந்து பவுலின்
கச்சையை*வாங்கினான். பின்பு அகபு அக்கச்
சையால் தனது கைகளையும் கால்களையும்
கட்டினான். அகபு, “இக்கச்சையைக் கட்டுகிற
மனிதனை இவ்வாறே எருசலேமில் யூதர்கள்
கட்டுவார்கள். பின் அவனை யூதரல்லாத மனி
தரிடம் ஒப்படைப்பார்கள் என்று பரிசுத்த
ஆவியானவர் எனக்குக் கூறுகிறார்” என்
றான்.

[12]நாங்கள் எல்லோரும் இந்த வார்த்தை
களைக் கேட்டோம். எனவே நாங்களும் இயேசு
வின் உள்ளூர் சீஷர்களும் எருசலேமுக்குப்
போக வேண்டாமென்று பவுலைக் கெஞ்சி
னோம்.

[13]ஆனால் பவுல், “ஏன் நீங்கள் அழுது
கொண்டிருக்கிறீர்கள்? ஏன் என்னை இத்
தனை கவலை கொள்ளச் செய்கிறீர்கள்? நான்
எருசலேமில் கட்டப்படுவதற்குத் தயாராக
இருக்கிறேன். கர்த்தராகிய இயேசுவின் நாமத்
திற்காக இறப்பதற்கும் நான் தயாராக உள்
ளேன்” என்றான்.

[14]பவுலை வற்புறுத்தி அவனை எருசலே
முக்கு போகாதிருக்கச் செய்ய எங்களால்
இயலவில்லை. எனவே அவனை வேண்டு
வதை நாங்கள் நிறுத்திவிட்டு, “கர்த்தர் விரும்
புவது நடக்கட்டும் என்று நாங்கள் பிரார்த்
தனை செய்கிறோம்” என்றோம். [15]இதன் பிறகு
நாங்கள் தயாராகி எருசலேமுக்குப் புறப்பட்
டோம். [16]செசரியாவிலுள்ள சீஷர்களில் சிலர்
எங்களோடு சென்றனர். இந்தச் சீஷர்கள் செச
ரியாவிலிருந்த எங்களை சீப்புருவிலிருந்து
வந்த மினாசோனின் வீட்டிற்கு அழைத்துச்
சென்றனர். முதன்முதலாக இயேசுவின் சீஷர்
களாக மாறியவர்களில் இந்த மினாசோனும்
ஒருவன். நாங்கள் அவனோடு தங்கும்படியாக
அவர்கள் எங்களை அவனது வீட்டிற்கு
அழைத்துச் சென்றனர்.

### பவுல் யாக்கோபைச் சந்தித்தல்

[17]எருசலேமிலே விசுவாசிகள் எங்களைக்
கண்டு, சந்தோஷம் அடைந்தனர். [18]மறுநாள்
பவுல் யாக்கோபைக் காண எங்களோடு வந்
தான். எல்லா மூப்பர்களும் அங்கிருந்தனர்.
[19]பவுல் அவர்கள் எல்லோரையும் வாழ்த்
தினான். யூதரல்லாத மக்கள் மத்தியில் பல
காரியங்களைச் செய்வதற்குக் தேவன்
அவனை எவ்வாறு பயன்படுத்தினார் என்
பதை அவன் அவர்களுக்குக் கூறினான்.
தேவன் அவன் மூலமாகச் செய்தவற்றையெல்
லாம் அவன் அவர்களுக்குச் சொன்னான்.
[20]மூப்பர்கள் இவற்றைக் கேட்டபோது, அவர்
கள் தேவனை வாழ்த்தினர். பின் அவர்கள்
பவுலை நோக்கி, “சகோதரரே, ஆயிரக்கணக்
கான யூதர்கள் விசுவாசிகளாக மாறியதை
நீங்கள் பார்க்க முடிகிறது. ஆனால் அவர்கள்
மோசேயின் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவதை
முக்கியமானதாக நினைக்கிறார்கள். [21]உங்கள்
போதனையைக் குறித்து இந்த யூதர்கள் கேள்
விப்பட்டிருக்கிறார்கள். யூதர்கள் அவர்கள்
பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்ய
வேண்டாமென்றும், யூத வழக்கங்களுக்குக்
கீழ்ப்படியவேண்டாம் எனவும் நீர் கூறுவதைக்
கேட்டிருக்கிறார்கள். [22]நாங்கள் என்ன செய்
வோம்? நீர் வந்திருப்பதை இங்குள்ள யூத
விசுவாசிகள் அறிந்து கொள்வர். [23]எனவே
நீங்கள் செய்யவேண்டியதை நாங்கள் உங்க
ளுக்குக் கூறுகிறோம். எங்களுடனிருப்போரில்
நான்கு பேர் தேவனுக்கு ஒரு வாக்குறுதி
அளித்துள்ளனர். [24]இம்மனிதர்களை உங்க
ளோடு அழைத்துச்சென்று அவர்களின் தூய்
மைப்படுத்தும் சடங்கில் பங்கு பெறுங்கள்.
அவர்கள் செலவை ஏற்றுக்கொள்ளுங்கள்.
எனவே அவர்கள் தங்கள் தலைமுடியை
சிரைத்துக்கொள்ள* முடியும். இதைச் செய்யுங்
கள். உங்களைப்பற்றி அவர்கள் கேள்விப்பட்ட
விஷயங்கள் பொய்யானவை என்று அது
எல்லோருக்கும் நிரூபித்துக் காட்டும். உங்கள்
சொந்த வாழ்க்கையில் மோசேயின் சட்டத்திற்
குக் கீழ்ப்படிகிறீர்கள் என்பதை அவர்கள்
காண்பார்கள். [25]யூதரல்லாத விசுவாசிகளுக்கு
நாங்கள் ஏற்கெனவே ஒரு கடிதம் அனுப்பி
யுள்ளோம். அக்கடிதம்,

> ‘விக்கிரகங்களுக்கு கொடுக்கப்பட்ட உணவை உண்ணாதீர்கள். இரத்தத்தை ருசிக்காதீர்கள், நெரித்துக் கொல்லப்பட்ட மிருகங்களை உண்ணாதீர்கள், பாலியல் தொடர்பான பாவங்களைச் செய்யாதீர்கள்’

என்று கூறிற்று” என்றார்கள்.

[26]பின்பு பவுல் அந்த நான்கு மனிதர்களை
யும் அவனோடு அழைத்துச் சென்றான்.
மறுநாள் பவுல் தூய்மைப்படுத்தும் சடங்கில்
பங்கேற்றான். பின் அவன் தேவாலயத்துக்குச்
சென்றான். தூய்மைப்படுத்தும் சடங்கு முடிய
வேண்டிய காலத்தைப் பவுல் பிறருக்கு அறி
வித்தான். கடைசி நாளில் ஒவ்வொரு மனித

---

**கச்சை** பவுலின் கச்சை. அகபு எருசலேமில் உள்ள யூதர்கள் பவுலைக் கைது செய்வார்கள் என்று தீர்க்கதரிசனம் கூறினான்.

**தலைமுடியைச் சிரைத்துக் கொள்ள** தங்கள் பொருத்தனை முடிந்துவிட்டதைக் காட்டும் அடையாளம்.

னுக்காகவும் ஒரு காணிக்கை கொடுக்கப்படும்.
27ஏழு நாட்களும் முடிவடையும் காலம்
நெருங்கிக் கொண்டிருந்தது. ஆசியாவிலுள்ள
யூதர்களில் சிலர் பவுலைத் தேவாலயத்தில்
கண்டனர். அவர்கள் எல்லா மக்களிடமும்
குழப்பம் விளைவித்தனர். அவர்கள் பவு
லைப் பிடித்தனர். 28அவர்கள் உரக்க, “யூத
மனிதரே, எங்களுக்கு உதவுங்கள்! மோசேயின்
சட்டத்தை எதிர்க்கவும் நம் மக்களுக்கும் தேவா
லயத்துக்கும் எதிராகவும் பலவற்றையும் கற்
பிக்கின்ற மனிதன் இவன்தான். இம்மனிதன்
எல்லா இடங்களிலுமுள்ள எல்லா மனிதருக்
கும் இவ்விஷயங்களை உபதேசிக்கின்றான்.
இப்போது தேவாலயத்துக்கு உள்ளே சில
கிரேக்க மக்களை அழைத்துக்கொண்டு வந்தி
ருக்கிறான். இத்தூய ஸ்தலத்தைத் தூய்மையி
ழக்கச் செய்திருக்கிறான்!” என்றார்கள். 29பவு
லோடு துரோப்பீமுவை எருசலேமில் பார்த்
ததால் யூதர்கள் இதைச் சொன்னார்கள். எபே
சுவிலுள்ள துரோப்பீமு ஒரு கிரேக்கன். பவுல்
அவனைத் தேவாலயத்துக்குள் அழைத்துச்
சென்றான் என்று யூதர்கள் எண்ணினர்.

30எருசலேமின் எல்லா மக்களும் நிலை
குலைந்தார்கள். அவர்கள் எல்லோரும் ஓடிப்
பவுலைப் பிடித்தனர். தேவாலயத்துக்கு வெ
ளியே அவனை இழுத்து வந்தனர். உடனே
கதவுகள் மூடப்பட்டன. 31மக்கள் பவுலைக்
கொல்ல முயற்சித்தனர். எருசலேமிலுள்ள
ரோமப் படை அதிகாரி நகரம் முழுவதும்
தொல்லை அடைந்துள்ளது என்ற செய்
தியைப் பெற்றான். 32உடனே அவன் மக்கள்
கூடியிருந்த இடத்திற்கு ஓடினான். அவன் வீரர்
களையும் படை அதிகாரிகளையும் தன்னுடன்
அழைத்து வந்தான். மக்கள் அதிகாரிகளையும்
வீரர்களையும் கண்டனர். எனவே பவுலை
அடிப்பதை நிறுத்தினர். 33அதிகாரி பவுலிடம்
சென்று அவனைக் கைது செய்தான். இரண்டு
விலங்குகளால் பவுலைக் கட்டுமாறு அதிகாரி
வீரர்களுக்குக் கட்டளையிட்டான். பின் அதி
காரி, “இம்மனிதன் யார்? இவன் செய்த தவறு
என்ன?” என்று கேட்டான். 34அங்கிருந்தோரில்
சிலர் ஒன்றைக் கூக்குரலிடவும் பிறர் வேறொன்
றைக் கூக்குரலிடவும் செய்தனர். குழப்பமாக
வும், கூச்சலாகவும் இருந்தமையால் அதிகாரி
நடந்த உண்மையை அறிந்து கொள்ள முடிய
வில்லை. எனவே அதிகாரி வீரர்களிடம் பவு
லைப் படைக்கூடத்துக்கு அழைத்துக் கொண்டு
செல்லுமாறு கூறினான். 35-36எல்லா மக்களும்
அவர்களைப் பின்தொடர்ந்தனர். வீரர்கள் படி
களினருகே வந்தபோது, அவர்கள் பவுலைச்
சுமக்க வேண்டியதாயிற்று. மக்கள் அவனைக்
காயப்படுத்த முனைந்ததால் அவனது பாது
காப்பிற்காக அவர்கள் இவ்வாறு செய்தனர்.
மக்கள் உரக்க, “அவனைக் கொல்லுங்கள்”
என்று கத்தினர்.

37வீரர்கள் பவுலைப் படைக்கூடத்திற்குள்
கொண்டுசெல்லத் தயாராயினர். ஆனால் பவுல்
அதிகாரியிடம் பேசினான். பவுல், “நான் உங்
களோடு சிலவற்றைப் பேசலாமா?” என்று
கேட்டான். அதிகாரி, “நீ கிரேக்க மொழி பேசுகி
றாயா?

38அப்படியானால் நான் நினைத்தது
போன்ற மனிதன் அல்ல நீ. சமீபத்தில் அரசுக்கு
எதிராகத் தொல்லை ஏற்படுத்திய எகிப்திய
மனிதன் என்று நான் எண்ணினேன். எகிப்
திய மனிதன் நாலாயிரம் கொலையாளிகளை
பாலைவனத்திற்குக் கூட்டிச் சென்றான்” என்
றான்.

39பவுல், “இல்லை நான் தர்சுவைச் சேர்ந்த
யூத மனிதன். தர்சு சிலிசியா நாட்டில் உள்ளது.
அம்முக்கியமான நகரின் குடிமகன் நான்.
தயவுசெய்து நான் மக்களிடம் பேச அனு
மதியுங்கள்” என்றான். 40பவுல் மக்களிடம்
பேச அதிகாரி அனுமதித்தான். எனவே பவுல்
படிகளில் ஏறி நின்றான். மக்கள் அமைதியாக
இருக்கும்படியாக கைகளால் சைகை செய்
தான். மக்கள் அமைதியடைந்ததும் பவுல்
அவர்களோடு பேசினான். அவன் யூத மொழி
யைப்* பயன்படுத்தினான்.

### பவுல் மக்களோடு பேசுகிறான்

22 பவுல், “எனது சகோதரர்களே! தந்தை
யரே! நான் கூறுவதைக் கேளுங்கள்.
நான் என் சார்பான நியாயங்களை உங்கள்
முன்வைக்கிறேன்.” என்றான். 2பவுல் யூத மொ
ழியில் பேசுவதை யூதர்கள் கேட்டார்கள்.
எனவே அவர்கள் மேலும் அமைதியாயினர்.
பவுல், 3“நான் ஒரு யூதன். நான் சிலிசியா
நாட்டிலுள்ள தர்சுவில் பிறந்தவன். இந்நகரில்
(எருசலேமில்) வளர்ந்தவன். நான் கமாலியே
லின்* மாணவன். நமது முன்னோரின் சட்டங்
களை அவர் எனக்கு மிக நம்பிக்கையுடன்
போதித்தார். நான் தேவனுடைய சேவையில்,
நீங்கள் எல்லோரும் இப்போது இருப்பதைப்
போல், முனைந்து நின்றேன். 4இயேசுவின்
வழியைப் பின்பற்றிய மக்களைத் தண்டித்
தேன். அவர்களில் சிலர் என் நிமித்தமாகக்
கொல்லப்பட்டனர். நான் ஆண்களையும் பெண்
களையும் கைது செய்தேன். அவர்களை சிறை
யில் வைத்தேன். 5தலைமை ஆசாரியரும்
முதிய யூதர்களின் சங்கமும் இது உண்மை
என்பதை உங்களுக்குக் கூற முடியும்! ஒரு
முறை இந்த அதிகாரிகள் என்னிடம் சில
கடிதங்களைக் கொடுத்தனர். அக்கடிதங்கள்
தமஸ்குவிலுள்ள யூத சகோதரர்களுக்கு முக
வரி இடப்பட்டிருந்தன. நான் அங்கு இயேசு
வின் சீஷர்களைக் கைது செய்வதற்கும் தண்ட
னைக்காக அவர்களை எருசலேமுக்குக்
கொண்டுவரவும் போய்க் கொண்டிருந்தேன்.

---

**யூதமொழி** பொதுவாக இது அரமேய மொழி. எபிரேயு மொழி போன்றது.

**கமாலியேல்** பரிசேயர்களின் மிக முக்கியமான ஆசிரியர். யூதமத குரு அப். 5:34.

### பவுலின் சாட்சி

6“ஆனால் தமஸ்குவிற்கு நான் செல்லும்
வழியில் ஏதோ ஒன்று எனக்கு நிகழ்ந்தது.
நான் தமஸ்குவை நெருங்கிக் கொண்டிருந்த
போது அது நண்பகல் நேரம். திடீரென்று
என்னைச் சுற்றிலும் வானிலிருந்து மிகுந்த
ஒளி பிரகாசித்தது. 7நான் தரையில் வீழ்ந்தேன்.
ஒரு குரல் என்னிடம், ‘சவுலே, சவுலே, நீ
ஏன் எனக்கு இத்தீய காரியங்களைச் செய்கின்
றாய்?’ என்றது. 8நான், ‘ஆண்டவரே நீர் யார்?’
என்று கேட்டேன், அக்குரல், ‘நான் நாசரேத்
தின் இயேசு. நீ கொடுமைப்படுத்துகிறவன்
நானே’ என்றது. 9என்னோடிருந்த மனிதர்கள்
அக்குரலைக் கேட்கவில்லை. ஆனால் அம்மனி
தர்கள் ஒளியைக் கண்டார்கள்.

10நான், ‘ஆண்டவரே, நான் என்ன செய்
யட்டும்?’ என்றேன். கர்த்தராகிய இயேசு பதி
லாக, ‘எழுந்து தமஸ்குவுக்குள் போ, நீ செய்ய
வேண்டுமென நான் திட்டமிட்டுள்ள அனைத்
தையும் குறித்து அங்கே உனக்கு அறிவிக்
கப்படும்’ என்றார். 11என்னால் பார்க்கமுடியா
தபடிக்கு, அப்பிரகாசமான ஒளி என்னைக்
குருடாக்கிற்று. எனவே என் மனிதர்கள் என்
னைத் தமஸ்குவுக்கு வழி நடத்தினார்கள்.
12தமஸ்குவில் அனனியா* என்னும் பெய
ருள்ள மனிதன் என்னிடம் வந்தான்.
அனனியா பக்திமான். அவன் மோசேயின்
சட்டங்களுக்கு கீழ்ப்படிந்தவன். அங்கு வாழ்ந்த
யூதர்கள் அனைவரும் அவனை மதித்தனர்.
13அனனியா என் அருகில் வந்து, ‘சகோதரனா
கிய சவுலே, மீண்டும் பார்ப்பாயாக’ என்றான்.
உடனே என்னால் பார்க்க முடிந்தது. 14அன
னியா என்னிடம், ‘நமது முன்னோர்களின்
தேவன் அவரது திட்டத்தைத் தெரிந்து கொள்
வதற்கு உன்னைத் தேர்ந்தெடுத்தார். நேர்மை
யானவரைக் (இயேசுவை) கண்டு அவரது
வார்த்தைகளை அவரிடமிருந்து கேட்பதற்காக
அவர் உன்னைத் தெரிந்து கொண்டார்.
15எல்லா மக்களுக்கும் நீ அவரது சாட்சியாக
இருப்பாய். நீ பார்த்ததையும் கேட்டதையும் நீ
மனிதருக்குக் கூறுவாய். 16இப்போது இன்னும்
காத்திராமல் எழுந்திரு. ஞானஸ்நானம் பெற்
றுக்கொள். உன் பாவங்கள் நீங்கக் கழுவப்படு.
உன்னை இரட்சிப்பதற்காக இயேசுவின் மீது
விசுவாசம் கொண்டு இதனைச் செய்’ என்
றான். 17பிற்பாடு நான் எருசலேமுக்குத்
திரும்பி வந்தேன். நான் தேவாலய முற்றத்தில்
பிரார்த்தனை செய்துகொண்டிருந்தபோது ஒரு
காட்சியைக் கண்டேன். 18நான் இயேசுவைக்
கண்டேன். இயேசு என்னிடம், ‘விரைவாகச்
செயல்படு. இப்போதே எருசலேமை விட்டு
செல். இங்குள்ள மக்கள் என்னைப்பற்றிய
உனது சாட்சியை ஏற்றுக்கொள்ளமாட்டார்
கள்’ என்றார். 19நான், ‘ஆனால் கர்த்தாவே,
நான் விசுவாசிகளைச் சிறையில் அடைத்தும்
அவர்களை அடித்துத் துன்புறுத்தியவனுமா
யிருந்தேன். என்பதை மக்கள் அறிவர். உங்
களிடம் நம்பிக்கை வைத்த மக்களைத் தேடி
யூத ஜெப ஆலயங்களுக்கெல்லாம் சென்றேன்.
20உங்கள் சாட்சியாக ஸ்தேவான் கொல்லப்
பட்டபோது நான் அங்கிருந்ததையும் மக்கள்
அறிவர். நான் அங்கு நின்று ஸ்தேவான்
கொல்லப்பட வேண்டுமென ஆமோதித்தேன்.
அவனைக் கொன்று கொண்டிருந்த மனிதர்
களின் அங்கிகளையும் வைத்திருந்தேன்!’ என்
றேன். 21ஆனால் பின்னர் இயேசு என்னை
நோக்கி, ‘இப்போது புறப்பட்டுச் செல். நான்
உன்னைத் தூர இடங்களுக்கு யூதரல்லாத மக்
களிடம் அனுப்புவேன்’ என்றார்” என்றான்.
22யூதரல்லாத மக்களிடம் செல்வதைப் பற்றிய
இக்கடைசி வார்த்தைகளைப் பவுல் கூறிய
போது, மக்கள் கவனிப்பதை நிறுத்தினர்.
அவர்கள் எல்லோரும் உரக்க, “அவனைக்
கொல்லுங்கள். உலகத்திலிருந்து அவனை
ஒழித்துக்கட்டுங்கள். இப்படிப்பட்ட ஒரு மனி
தனை உயிர்வாழ விடக்கூடாது” என்றனர்.
23அவர்கள் கூக்குரலிட்டு தங்கள் அங்கிகளைக்
கழற்றி வீசினர். அவர்கள் புழுதியை அள்ளி
வானத்தில் வீசினர்.* 24அப்போது அதிகாரி
பவுலைப் படைக்கூடத்திற்கு அழைத்துச் செல்
லுமாறு கட்டளையிட்டான். பவுலை அடிக்கு
மாறு வீரர்களுக்கு கூறினான். அவனுக்கு எதி
ராக மக்கள் கூக்குரலிடுவதன் காரணத்தைப்
பவுல் கூறவேண்டுமென்று விரும்பினான்.
25எனவே வீரர்கள் பவுலை அடிப்பதற்கு
முயலத் துவங்கினர். ஆனால் பவுல் அங்
கிருந்த படை அதிகாரியை நோக்கி, “தவறு
செய்ததாக நிரூபிக்கப்படாத ஒரு ரோமக்
குடிமகனை அடிக்கும் உரிமை உங்களுக்கு
உண்டா?” என்று கேட்டான்.

26அதிகாரி இதைக் கேட்டபோது, கட்டளை
யிடுபவனிடம் சென்று இதைக் குறித்துப் பேசி
னான். அவன், “நீ செய்வது என்னவென்று
உனக்குத் தெரியுமா? இம்மனிதன் ஒரு ரோமக்
குடிமகன்!” என்றான்.

27அதிகாரி பவுலிடம் வந்து, “சொல், நீ
உண்மையாகவே ரோமக் குடிமகனா?” என்று
கேட்டான்.

பவுல் “ஆம்” என்றான்.

28அதிகாரி, “நான் ரோமக் குடிமகன் ஆவ
தற்கு மிகுந்த பணம் செலுத்தவேண்டியதா
யிற்று” என்றான்.

ஆனால் பவுல், “நான் பிறப்பால் குடிமகன்”
என்றான். 29பவுலைக் கேள்விக் கேட்பதற்கு
அவனைத் தயார் செய்து கொண்டிருந்த மனி
தர்கள் உடனே அவனை விட்டு விலகினர்.
ரோமக் குடிமகனான பவுலைக் கட்டியதால்
அதிகாரி பயந்தான்.

---

**அனனியா** அப்போஸ்தலர் நடபடிகளில் மூன்று பேர் இதே பெயரில் உள்ளனர். அப். 5:1; 23:2.

**புழுதியை அள்ளி வானத்தில் வீசினர்.** இம்முறையில் அவர்கள் தமது கோபத்தைக் காட்டினர்.

### பவுலும் – யூதத்தலைவர்களும்

30மறுநாள் யூதர்கள் பவுலுக்கு எதிராகப்
பேசும் உறுதியான காரணத்தைக் கண்டறிய
அந்த அதிகாரி முடிவு செய்தான். எனவே
தலைமை ஆசாரியரையும் யூதர்களையும்
அழைத்து பவுலின் விலங்குகளைக் கழற்றக்
கட்டளையிட்டான். பின் பவுலை வெளியே
அழைத்து வந்து, அக்கூட்டத்தின் முன்பாக
நிறுத்தினான்.

23 யூத சங்கக் கூட்டத்தினரைப் பார்த்துப்
பவுல், "சகோதரர்களே! தேவனுக்கு
முன்பாக நல்ல வகையில் என் வாழ்க்கையை
வாழ்ந்திருக்கிறேன். சரியென்று நான் நினைத்
ததையே எப்போதும் செய்து கொண்டிருக்
கிறேன்" என்றான். 2தலைமை ஆசாரியனான
அனனியா அங்கிருந்தான். பவுல் கூறுவதைக்
கேட்ட அனனியா, பவுலின் அருகே நின்ற
மனிதரை நோக்கிப் பவுலின் வாயில் அடிக்
குமாறு கூறினான். 3பவுல் அனனியாவைப்
பார்த்து, "தேவன் உன்னையும் அடிப்பார்!
அழுக்கான சுவர் வெள்ளையடிக்கப்பட்டது
போன்று நீ காணப்படுகிறாய்! நீ அங்கு
அமர்ந்து மோசேயின் சட்டப்படி என்னை
நியாயந்தீர்க்கிறாய். ஆனால் என்னை அடிக்கு
மாறு அவர்களிடம் கூறிக்கொண்டிருக்கிறாய்.
அது மோசேயின் சட்டத்திற்கு எதிரானது"
என்றான்.

4பவுலின் அருகில் நின்றிருந்த மனிதர்கள்
அவனை நோக்கி, "தேவனுடைய தலைமை
ஆசாரியனிடம் நீ இவ்வாறு பேசக்கூடாது. நீ
அவரை அவமானப்படுத்திக் கொண்டிருக்கி
றாய்!" என்றனர்.

5பவுல், "சகோதரர்களே, இம்மனிதன்
தலைமை ஆசாரியன் என்பது எனக்குத் தெரி
யாது. வேதவாக்கியங்களில் இவ்வாறு கூறப்
பட்டுள்ளது, 'உன் மக்களின் தலைவர்களைக்
குறித்து தீயவற்றைக் கூறலாகாது'* என்று
எழுதப்பட்டுள்ளது" என்றான்.

6அக்கூட்டத்தில் சிலர் சதுசேயராகவும்,
சிலர் பரிசேயராகவும் இருந்தார்கள். எனவே
பவுலுக்கு ஒரு யோசனை ஏற்பட்டது. அவன்
அவர்களிடம் உரக்க, "எனது சகோதரரே,
நான் ஒரு பரிசேயன். எனது தந்தையும் ஒரு
பரிசேயர். மரணத்திலிருந்து மக்கள் எழுவர்
என்று நான் நம்புவதால் என்னை இங்கு
நியாயந்தீர்க்கின்றனர்!" என்றான். 7பவுல்
இதைக் கூறியதும், சதுசேயருக்கும் பரிசேய
ருக்கும் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது.
குழுவில் ஒரு பிரிவினை ஏற்பட்டது. 8(மக்கள்
இறந்தபிறகு, மீண்டும் வாழ இயலாது என்று
சதுசேயர் நம்புகிறார்கள். தேவதூதர்களோ,
ஆவிகளோ இருப்பதில்லை என்று சதுசேயர்
கள் போதிக்கிறார்கள். ஆனால் பரிசேயர்கள்
இவற்றையெல்லாம் நம்புகிறார்கள்.) 9எல்லா
யூதர்களும் உரக்கச் சத்தமிட ஆரம்பித்தனர்.
பரிசேயரான சில வேதபாரகர்கள் எழுந்து
நின்று, இவ்வாறு விவாதித்தனர், "நாங்கள்
இந்த மனிதனிடம் எந்தக் குற்றத்தையும் காண
வில்லை. தமஸ்குவுக்கு வரும் வழியில் தேவ
தூதனோ ஆவியோ அவனோடு பேசியிருக்க
வேண்டும்!" என்றனர்.

10விவாதம் சண்டையாக மாறிற்று. யூதர்கள்
பவுலை நார் நாராகக் கிழித்து விடுவார்கள்
என்று அதிகாரி அஞ்சினான். எனவே அவன்
கீழே சென்று யூதர்களிடமிருந்து பவுலை
விலக்கி அழைத்துவந்து படைக்கூடத்தில்
வைத்திருக்குமாறு வீரர்களுக்குக் கட்டளை
யிட்டான்.

11மறுநாள் இரவு கர்த்தர் பவுலின் அருகே
வந்து நின்றார். அவர், "தைரியமாக இரு.
என்னைக் குறித்து எருசலேமின் மக்களுக்கு
நீ கூறியிருக்கிறாய். நீ ரோமுக்கும் சென்று
அங்குள்ள மக்களுக்கு என்னைக் குறித்துச்
சொல்லவேண்டும்" என்றார்.

12மறுநாள் காலையில் சில யூதர்கள் ஒரு
திட்டம் வகுத்தனர். அவர்கள் பவுலைக்
கொல்ல விரும்பினர். அவர்கள் தங்களுக்குள்
பவுலைக் கொல்லும் மட்டும் உண்பதோ,
பருகுவதோ இல்லை என்று ஒரு சபதம்
செய்து கொண்டனர். 13நாற்பது யூதர்களுக்கு
மேலாக இச்சதித்திட்டத்தை வகுத்தனர். 14இந்த
யூதர்கள் தலைமை ஆசாரியரிடமும் முதிய
யூதத் தலைவர்களிடமும் சென்று பேசினர்.
யூதர்கள், "நாங்கள் எங்களுக்குள் ஒரு சபதம்
செய்துள்ளோம். பவுலைக் கொல்லும் மட்டும்
உண்பதோ, உறங்குவதோ இல்லை என்று
தீர்மானமாக சபதம் பூண்டுள்ளோம்! 15எனவே
நாங்கள் செய்ய விரும்புவது இதுவே. நீங்க
ளும் யூதக் குழுவைச் சேர்ந்த எல்லாத் தலை
வர்களும் போர் அதிகாரிக்கு ஒரு செய்தியை
அனுப்புங்கள். பவுலை உங்களிடம் அனுப்பு
மாறு அவ்வதிகாரிக்குக் கூறுங்கள். பவுலிடம்
இன்னும் அதிகமான கேள்விகள் கேட்க விரும்
புவதாக அவ்வதிகாரிக்குச் சொல்லுங்கள்.
அவன் இங்கு வரும் வழியில் பவுலைக் கொல்
வதற்காக நாங்கள் காத்துக்கொண்டிருப்
போம்" என்றனர்.

16பவுலின் சகோதரியின் மகன் இத்திட்டத்
தைப் பற்றிக் கேள்விப்பட்டான். அவன் படைக்
கூடத்திற்குச் சென்று, இதைக் குறித்துப் பவு
லுக்குக் கூறினான். 17அப்போது பவுல் படை
அதிகாரிகளில் ஒருவரை அழைத்து அவரை
நோக்கி, "இவ்விளைஞனை அதிகாரியிடம்
அழைத்துச் செல்லுங்கள். இவன் அவருக்கு
ஒரு செய்தி சொல்ல வேண்டும்" என்றான்.
18எனவே படை அதிகாரி பவுலின் சகோதரி
யின் மகனை அதிகாரியிடம் அழைத்து வந்
தான். அதிகாரி "பவுல் என்ற கைதி இவ்
விளைஞனை உங்களிடம் அழைத்து செல்
லுமாறு கூறினான். அவன் உங்களிடம் ஏதோ
கூறவேண்டுமாம்" என்றான்.

---

**உன் ... கூறலாகாது** யாத். 22:28.

[19]அதிகாரி இளைஞனைக் கையைப் பிடித்து தனித்த ஓரிடத்திற்கு அழைத்துச் சென்றான். அவன் இளைஞனை நோக்கி, "நீ என்னிடம் என்ன கூற விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

[20]இளைஞன், "பவுலை நாளையச் சங்கக் கூட்டத்திற்கு அழைத்து வரும்படியாக உங்களைக் கேட்பதற்கு யூதர்கள் முடிவெடுத்துள்ளனர். அவர்கள் பவுலிடம் சில விளக்கங்களைக் கேட்கவிருப்பதாக நீங்கள் நினைக்க வேண்டுமென விரும்புகின்றனர். [21]ஆனால் அவர்களை நம்பாதீர்கள். 40 பேருக்கும் மேலான யூதர்கள் ஒளிந்திருந்து பவுலைக் கொல்லக் காத்திருப்பர். அவனைக் கொல்லும் வரைக்கும் உண்பதோ, பருகுவதோ இல்லை என்று அவர்கள் சபதமிட்டுள்ளனர். உங்கள் சம்மதத்திற்காக இப்போது அவர்கள் தயாராகக் காத்துக்கொண்டிருக்கின்றனர்" என்றான்.

[22]அதிகாரி இளைஞனை அனுப்பிவிட்டான். அதிகாரி அவனை நோக்கி, "அவர்கள் திட்டத்தை எனக்குக் கூறியதாக யாரிடமும் சொல்லாதே" என்றான்.

### செசரியாவிற்குப் பவுல் அனுப்பப்படுதல்

[23]பின்பு அதிகாரி இரண்டு படை அதிகாரிகளை அழைத்தான். அவன் அவர்களை நோக்கி, "செசரியாவுக்குப் போவதற்குச் சில மனிதர்கள் வேண்டும். இருநூறு படை வீரர்களை ஆயத்தப்படுத்துங்கள். எழுபது குதிரை வீரர்களையும் இருநூறு ஈட்டியேந்திய வீரர்களையும் தயார்படுத்துங்கள். இன்றிரவு ஒன்பது மணிக்குப் புறப்படத் தயாராக இருங்கள். [24]பவுல் சவாரி செய்வதற்கும் சில குதிரைகளைப் பெறுங்கள். ஆளுநர் பெலிக்ஸிடம் அவன் பாதுகாப்பாக அனுப்பப்பட வேண்டும்" என்றான். [25]அதிகாரி ஒரு கடிதம் எழுதினான். அக்கடிதத்தின் விபரம் வருமாறு.

[26] கிளாடியஸ் லைசியஸிடமிருந்து மிக மாட்சிமை மிக்க ஆளுநர் பெலிக்ஸ் அவர்களுக்கு,

வாழ்த்துக்கள்.

[27]யூதர்கள் இம்மனிதனைக் கைப்பற்றி அவனைக் கொல்வதற்கு இருந்தார்கள். அவன் ஒரு ரோமக் குடிமகன் என்பதை நான் அறிந்தேன். எனவே நான் எனது வீரரோடு சென்று அவனைக் காப்பாற்றினேன். [28]அவர்கள் ஏன் அவனைப் பழிக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்பினேன். [29]எனவே யூதச் சங்கத்திற்கு முன்னால் அவனைக் கொண்டு வந்தேன். இதுவே நான் கண்டது. தவறான சில காரியங்களைப் பவுல் செய்ததாக யூதர்கள் கூறுகிறார்கள். ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகள் அவர்களது சொந்த யூத விதிகளைப் பற்றியது. இந்த விஷயங்கள் எதுவும் சிறைத் தண்டனைக்கோ மரண தண்டனைக்கோ ஏற்றவை அல்ல. [30]சில யூதர்கள் பவுலைக் கொல்ல திட்டமிடுகிறார்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டது. எனவே, தாமதிக்காமல் நான் அவனை உங்களிடம் அனுப்புகிறேன். அவனுக்கெதிரான காரியங்களை உங்களுக்கு சொல்லுமாறு நான் அந்த யூதர்களுக்குச் சொல்லி இருக்கிறேன் என்பதே.

[31]அவர்களுக்குச் சொல்லப்பட்ட காரியங்களை வீரர்கள் செய்தனர். அன்றிரவு அந்திபத்ரி நகரத்திற்கு வீரர்கள் பவுலைக் கூட்டிச் சென்றனர். [32]மறுநாள் குதிரை மேலிருந்த வீரர்கள் பவுலோடு செசரியாவுக்குச் சென்றனர். ஆனால் மற்ற வீரர்களும் ஈட்டியேந்திய வீரர்களும் எருசலேமிலுள்ள படைக்கூடத்துக்குத் திரும்பினர். [33]குதிரை மேலிருந்த வீரர்கள் செசரியாவுக்குள் நுழைந்து ஆளுநரிடம் கடிதத்தைக் கொடுத்தனர். பின் பவுலை அவரிடம் ஒப்படைத்தனர். [34]ஆளுநர் கடிதத்தைப் படித்தார். பின் அவர் பவுலை நோக்கி, "நீ எந்தப் பகுதியைச் சேர்ந்தவன்?" என்று கேட்டார். பவுல் சிலிசியாவைச் சேர்ந்தவன் என்பதை ஆளுநர் அறிந்தார். [35]ஆளுநர், "உன்மீது குற்றம் சுமத்தியவர்கள் இங்கு வரும்போது வழக்கை விசாரிக்கிறேன்" என்றார். அரண்மனையில் பவுலை வைத்திருக்கும் பொருட்டு ஆளுநர் ஆணைகள் பிறப்பித்தார். (இக்கட்டிடம் ஏரோதால் கட்டப்பட்டது)

### யூதர்களின் குற்றச்சாட்டு

24 ஐந்து நாட்களுக்குப் பிறகு அனனியா செசரியா நகரத்திற்கு வந்தான். அனனியா தலைமை ஆசாரியனாய் இருந்தான். சில முதிய யூதத் தலைவர்களையும் தெர்த்துல்லு என்னும் பெயருள்ள வழக்கறிஞரையும் அனனியா அழைத்து வந்திருந்தான். ஆளுநர் முன்னால் பவுல் மீது வழக்கு தொடுக்கும் பொருட்டு அவர்கள் செசரியாவுக்குச் சென்றார்கள். [2]கூட்டத்திற்கு முன் பவுல் அழைக்கப்பட்டான். தெர்த்துல்லு குற்றச்சாட்டுகளை எடுத்துரைக்கத் துவங்கினான்.

தெர்த்துல்லு, "மிகக் கனம் பொருந்திய பெலிக்ஸ் அவர்களே! உங்களால் எங்கள் மக்கள் மிகுந்த அமைதியோடு வாழ்கிறார்கள். உங்கள் ஞானமான உதவியால் எங்கள் நாட்டில் பல தவறான காரியங்கள் திருத்தப்பட்டு வருகின்றன. [3]உங்களிடமிருந்து இவற்றைப் பெறுவதால் மிக நன்றியுடையவர்களாக இருக்கிறோம். எல்லா இடங்களிலும் நாங்கள் அவற்றை ஒப்புக்கொள்கிறோம். [4]ஆனால் உங்கள் நேரத்தை மேலும் வீணாக்க நான் விரும்பவில்லை. எனவே நான் சுருக்கமாகச் சொல்கிறேன். தயவுசெய்து பொறுமையாக இருங்கள். [5]இம்மனிதன் தொல்லைகளை ஏற்படுத்துகிறவன். உலகமெங்குள்ள யூதர்களிடம் அமைதியைக் குலைக்கிறான். நசரேயக் குழு

வின் தலைவன் இவன். 6மேலும் அவன்
தேவாலயத்தை நாசமாக்க முயற்சி செய்து
கொண்டிருக்கிறான். ஆனால் நாங்கள் அவ
னைத் தடுத்துவிட்டோம். 8இக்குற்றச்சாட்டுகள்
அனைத்தும் உண்மையா என்பதை நீர் முடிவு
கட்டலாம். நீரே அவனிடம் சில கேள்விகளைக்
கேளும்"* என்றான். 9பிற யூதர்களும் ஒப்புக்
கொண்டனர். அவர்கள், "இவையனைத்தும்
உண்மையே!" என்றனர்.

10பவுல் பேசுமாறு ஆளுநர் குறிப்பிட்டார்.
எனவே பவுல் பதிலாக, "ஆளுநர் பெலிக்ஸ்
அவர்களே, இந்தத் தேசத்தின் (இஸ்ரவேலின்)
நியாயாதிபதியாக, நீண்ட காலமாக நீங்கள்
இருந்து வருகிறீர்கள் என்பது எனக்குத் தெரி
யும். எனவே நான் உங்கள் முன்பு எனக்காக
வழக்காடுவதில் மகிழ்ச்சியடைகிறேன். 11பன்
னிரண்டு நாட்களுக்கு முன்புதான் நான் எருச
லேமுக்கு வழிபடச் சென்றேன். இது உண்
மையா என்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.
12என்னைப் பழிக்கிற இந்த யூதர்கள் நான்
ஆலயத்தில் யாரோடும் விவாதிப்பதைப்
பார்க்கவில்லை. நான் மக்களிடம் தொல்லை
யையும் விளைவிக்கவில்லை. ஜெப ஆலயங்
களிலோ, நகரத்தின் வேறிடங்களிலோ நான்
விவாதிக்கவோ, தொல்லை விளைவிக்கவோ
செய்யவில்லை. 13இப்போது எனக்கெதிராக
அவர்கள் கூறும் குற்றச்சாட்டுகளை அவர்கள்
நிரூபிக்க முடியாது. 14ஆனால் நான் உங்க
ளுக்கு இதைச் சொல்வேன். இயேசுவின் வழி
யைப் பின்பற்றும் சீடனாக நான் நமது முன்
னோரின் தேவனை வணங்குகிறேன். 15இந்த
யூதர்கள் தேவனிடம் கொண்டுள்ள நம்பிக்கை
அதாவது நல்லோராயினும் தீயோராயினும்
சரி எல்லா மக்களும் மரணத்தினின்று எழுப்
பப்படுவர் என்ற அதே நம்பிக்கை எனக்கும்
உள்ளது. 16எனவே தான் தேவனுக்கும் மனித
ருக்கும் முன்பாக நான் சரியென்று நம்புவதை
எப்பொழுதும் செய்ய முயல்கிறேன்.

17"பலகாலம் எருசலேமிலிருந்து தொலை
வில் வாழ்ந்து வந்தேன். என் மக்களுக்குப்
பணம் கொண்டுவரவும் காணிக்கை செலுத்
தவும் நான் அங்குத் திரும்பிச் சென்றேன்.
18தேவாலயத்தில் நான் இதைச் செய்து கொண்
டிருந்தபோது சில யூதர்கள் என்னைக் கண்
டனர். சுத்தப்படுத்தும் பண்டிகையை* (சடங்
கை) முடித்தேன். நான் எந்தக் தொல்லையை
யும் ஏற்படுத்தவில்லை. என்னைச் சுற்றி
எந்தக் கூட்டமும் சேரவில்லை. 19ஆசியாவி
லுள்ள சில யூதர்கள் அங்கிருந்தார்கள். இங்கும்
உங்கள் முன் அவர்கள் நின்றுகொண்டிருக்க
வேண்டும். நான் ஏதேனும் தவறாகச் செய்
திருந்தால் என்னைக் குற்றம் சாட்டவேண்
டியவர்கள் அவர்களே. 20எருசலேமிலுள்ள
யூத சங்கத்தின் முன் நான் நின்றபோது என்
னில் ஏதேனும் பிழையை அவர்கள் கண்டார்
களா என்பதை இந்த யூதர்களிடம் விசாரியுங்
கள். 21நான் அவர்கள் முன்னிலையில் நின்ற
போது ஒன்றை மட்டும் கூறினேன். 'மரணத்தி
னின்று மக்கள் எழும்புவர் என்பதை நான்
நம்புவதால் இன்றைக்கு நீங்கள் என்னை நியா
யந்தீர்க்கிறீர்கள்' என்றேன்" என்று கூறி
னான்.

22இயேசுவின் வழிகளைக் குறித்து ஏற்
கனவே பெலிக்ஸ் நிரம்ப தெரிந்துவைத்திருந்
தான். அவன் வழக்கை இந்த இடத்தில் நிறுத்
தியவனாய், "அதிகாரி லீசியா இங்கு வருகிற
போது, இவற்றைக் குறித்து முடிவெடுப்பேன்"
என்றான். 23பெலிக்ஸ் படை அதிகாரியிடம்
பவுலைக் காவலில் வைக்குமாறு கூறினான்.
அவன் படை அதிகாரியிடம் பவுலுக்குச் சற்
றுச் சுதந்திரம் அளிக்குமாறும், பவுலின் நண்
பர்கள் அவனுக்குத் தேவையான பொருட்
களைக் கொண்டுவந்து உதவுவதற்கு அனுமதி
அளிக்குமாறும் கூறினான்.

### பெலிக்ஸ் முன் பவுல்

24சில நாட்களுக்குப் பிறகு பெலிக்ஸ்,
அவனது மனைவி துருசில்லாவுடன் வந்தான்.
அவள் யூதப் பெண்மணி. பெலிக்ஸ் பவுலைத்
தன்னிடம் அழைத்து வருமாறு கூறினான்.
கிறிஸ்து இயேசுவில் வைக்கும் விசுவாசத்
தைக் குறித்துப் பவுல் பேசுவதை பெலிக்ஸ்
கேட்டான். 25நேர்மையான வாழ்வு, தன்னடக்
கம், எதிர்காலத்தின் நியாயத்தீர்ப்பு ஆகியவற்
றைக் குறித்துப் பவுல் கூறியதைக் கேட்டு
அவன் அஞ்சினான். பெலிக்ஸ் "இப்போது
போய் விடு! இன்னும் கால அவகாசம் கிடைக்
கும்போது உன்னை அழைக்கிறேன்" என்
றான். 26பவுலோடு பெலிக்ஸ் பேசுவதற்கு
மற்றொரு காரணமும் இருந்தது. பவுல் தனக்கு
லஞ்சம் கொடுப்பான் எனவும் பெலிக்ஸ் நம்
பினான். எனவே பெலிக்ஸ் பவுலை அடிக்கடி
அழைப்பித்து அவனோடு பேசினான்.

27ஆனால் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு,
போர்சியு பெஸ்து ஆளுநரானார். பெலிக்ஸ்
ஆளுநராக இருக்கவில்லை. பெலிக்ஸ் யூதர்
களை மகிழ்விக்கும்படியாக ஏதேனும் செய்ய
வேண்டுமென்று விரும்பியதால் பவுலைச்
சிறையிலேயே விட்டுச் சென்றான்.

### பவுலின் வாதம்

25 பெஸ்து ஆளுநரானான். மூன்று நாட்
களுக்குப் பிறகு அவன் செசரியாவிலி
ருந்து எருசலேமுக்குச் சென்றான். 2தலைமை

---

***6-8 வாக்கியங்கள்*** *சில கிரேக்கப் பிரதிகளில் 6b-8a சேர்க்கப்பட்டுள்ளன. "நாங்கள் அவனை எங்கள் சொந்தச் சட்டங்கள் மூலம் தண்டிக்க விரும்பினோம். ஆனால் லைசியாஸ் வந்து அதிகமாக வற்புறுத்தி எங்களிடமிருந்து அவனை அழைத்துக் கொண்டு போனான். லைசியாஸ் தன் மக்களுக்கு எங்களைக் குற்றம்சாட்ட கட்டளையிட்டுள்ளான்."*

***சுத்தப்படுத்தும் பண்டிகை.*** *யூதர்கள் நசரேய விரதத்தை முடிக்கச் செய்யும் சிறப்பான செயல்கள்.*

ஆசாரியரும் முக்கியமான யூதத் தலைவர்
களும் பெஸ்துவுக்குமுன் பவுலுக்கு எதிராக
வழக்குகளைத் தொடுத்தனர். 3தங்களுக்கு ஓர்
உதவி செய்யும்படியாக பெஸ்துவை வேண்
டினர். பவுலை எருசலேமுக்கு மீண்டும் அனுப்
பும்படியாக பெஸ்துவைக் கேட்டார்கள். வழி
யில் பவுலைக் கொல்வதற்குத் திட்டம் வகுத்
தனர்.

4ஆனால் பெஸ்து, “இல்லை! பவுல்
செசரியாவில் வைக்கப்படுவான். நானே
செசரியாவுக்குச் சீக்கிரம் போவேன். 5உங்கள்
தலைவர்கள் சிலரும் என்னோடு வரலாம்.
அவன் உண்மையாகவே குற்றம் செய்திருந்
தால் சிசேரியாவில் அவர்கள் அம்மனிதன்
மீது வழக்கு தொடரலாம்” என்றான்.

6எட்டு அல்லது பத்து நாட்கள் பெஸ்து
எருசலேமில் தங்கினான். பின் அவன் செசரி
யாவுக்குத் திரும்பினான். மறுநாள் பெஸ்து
பவுலைத் தனக்கு முன்னால் அழைத்து வரு
மாறு வீரர்களுக்குக் கூறினான். பெஸ்து நீதி
பதியின் இருக்கையில் அமர்ந்திருந்தான்.
7பவுல் அறைக்குள் வந்தான். எருசலேமிலி
ருந்து வந்த யூதர்கள் அவனைச் சுற்றிலும்
நின்று கொண்டனர். பவுல் பல குற்றங்களைச்
செய்தான் என்று யூதர்கள் கூறினார்கள்.
ஆனால் இக்காரியங்கள் எதையும் நிரூபிக்க
முடியவில்லை. 8பவுல் (தனது சார்பாக) தன்
னைக் காத்துக்கொள்வதற்குக் கூறியதாவது,
“யூத சட்டத்துக்கு மாறாகவோ, தேவாலயத்
துக்கு எதிராகவோ, இராயருக்கு விரோதமா
கவோ, நான் எந்தக் குற்றத்தையும் செய்ய
வில்லை” என்றான்.

9ஆனால் பெஸ்து யூதர்களைத் திருப்திப்
படுத்த நினைத்தான். எனவே அவன் பவுலை
நோக்கி, “நீ எருசலேமுக்குப் போக விரும்
புகிறாயா? இக்குற்றங்களுக்காக நான் அங்கு
நீதி வழங்கவேண்டுமென்று விரும்புகிறாயா?”
என்று கேட்டான்.

10பவுல், “இராயனின் நியாயஸ்தலத்திற்கு
முன்பாக நான் நின்று கொண்டிருக்கிறேன்.
இங்கு நான் நியாயந்தீர்க்கப்படவேண்டும்!
நான் யூதர்களுக்கு எந்தக் குற்றத்தையும் செய்
யவில்லை. இது உண்மையென்பது உங்களுக்
குத் தெரியும். 11நான் ஏதேனும் தவறு செய்து,
சட்டமும் நான் அதற்காக இறக்க வேண்டு
மெனக் கூறினால், நான் இறப்பதற்குச் சம்மதிக்
கிறேன். நான் மரணத்தினின்று தப்பவேண்டு
மென்று கேட்கவில்லை. ஆனால் இப்பழிகள்
பொய்யெனில் யாரும் என்னை யூதரிடம் ஒப்
படைக்கக் கூடாது. நான் இராயரால் நியாயந்
தீர்க்கப்பட விரும்புகிறேன்!” என்றான்.

12பெஸ்து தனது ஆலோசகர்களிடம் இதைக்
குறித்துக் கலந்தாலோசித்தான். பின்பு அவன்,
“நீ இராயரைப் பார்க்கவேண்டுமெனக் கேட்
டாய், எனவே நீ இராயரிடம் போவாய்” என்
றான்.

### ஏரோது அகிரிப்பாவின் முன் பவுல்

13சில நாட்களுக்குப் பிறகு அகிரிப்பா
மன்னரும் பெர்னிசும்* பெஸ்துவைச் சந்திக்
குமாறு செசரியாவுக்கு வந்தனர். 14அங்குப்
பல நாட்கள் தங்கியிருந்தனர். பவுலின் வழக்
கைக் குறித்து பெஸ்து மன்னருக்குக் கூறி
னான். பெஸ்து, பெலிக்ஸ் சிறையில் விட்டுச்
சென்ற ஒரு மனிதன் இருக்கிறான். 15நான்
எருசலேமுக்குப் போனபோது தலைமை ஆசா
ரியரும், முதிய யூத அதிகாரிகளும் அவன்
மீது வழக்குத் தொடுத்தனர். அவனுக்கு நான்
மரண தண்டனை அளிக்கவேண்டுமென யூதர்
கள் விரும்பினர். 16ஆனால் நான் ‘ஒரு மனிதன்
குற்றம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டால்,
ரோமர் அவனைப் பிறரிடம் நியாயம் வழங்கு
வதன் பொருட்டு ஒப்படைப்பதில்லை. முதலில்
அம்மனிதன் அவனைப் பழியிடும் மக்களை
எதிர்கொள்ள வேண்டும். அவர்கள் இட்ட வழக்
குகளுக்கு எதிரான தனது கருத்துக்களைச்
சொல்லவேண்டும்’ என்று பதில் அளித்தேன்.
17எனவே இந்த யூதர்கள் வழக்காடுவதற்காக
செசரியாவுக்கு வந்தனர். நான் காலத்தை
வீணாக்கவில்லை. மறுநாளே நீதிபதியின்
இருக்கையில் அமர்ந்து, அம்மனிதனை
(பவுலை) அழைத்து வருமாறு கட்டளையிட்
டேன். 18யூதர்கள் எழுந்து நின்று அவனைப்
பழித்தனர். ஆனால் எந்தப் பயங்கரக் குற்
றத்தையும் அவன் செய்ததாக யூதர்கள் கூற
வில்லை. அவர்கள் சொல்வார்கள் என்று
நான் எண்ணியிருந்தேன். 19அவர்கள் தங்கள்
மதத்தைக் குறித்தும் இயேசு என்கிற மனித
னைப் பற்றியும் மட்டுமே கூறினார்கள். இயேசு
இறந்தார், ஆனால் பவுல் அவர் இன்னும்
உயிரோடிருக்கிறார் என்று கூறுகிறான்.
20எனக்கு இவற்றைக் குறித்து விவரமாகத்
தெரியவில்லை. எனவே நான் கேள்விகள்
கேட்கவில்லை. நான் பவுலை நோக்கி, ‘நீ
எருசலேமுக்குப் போய் அங்கு இவை குறித்து
நியாயந்தீர்க்கப்பட விரும்புகிறாயா?’ என்று
கேட்டேன். 21ஆனால் பவுல் செசரியாவிலேயே
வைக்கப்பட வேண்டுமென்று கேட்டான்.
அவன் இராயர் முடிவெடுக்க வேண்டுமென
விரும்புகிறான். ரோமில் இராயரிடம் அவனை
அனுப்பும் மட்டும் அவன் இங்கேயே வைக்
கப்பட நான் கட்டளையிட்டுள்ளேன்” என்று
கூறினான்.

22அகிரிப்பா பெஸ்துவை நோக்கி, “நானும்
நாளை இந்த மனிதன் கூறுவதைக் கேட்க
விரும்புகிறேன்” என்றான். பெஸ்து, “நீங்கள்
கேட்பீர்கள்” என்றான்.

23மறுநாள் அகிரிப்பாவும் பெர்னிசும்
அங்கு வந்தார்கள். மிக முக்கியமான மனிதர்
களுக்குரிய ஆடைகளை உடுத்தி, அதற்கேற்
றவாறு நடந்து கொண்டனர். அகிரிப்பாவும்

---

**பெர்னிசு** *அகிரிப்பாவின் சகோதரி. ஏரோது அகிரிப்பா 1ன் மூத்த மகன்.*

பெர்னிசும் படை அதிகாரிகளும், செசரியா
வின் முக்கிய மனிதர்களும் நியாயத்தீர்ப்பு
அறைக்குள் சென்றனர். பெஸ்து பவுலை
உள்ளே அழைத்து வருமாறு வீரர்களுக்குக்
கட்டளையிட்டான். 24பெஸ்து, “அகிரிப்பா மன்
னரும் இங்குள்ள எல்லோரும் இப்போது இம்
மனிதனைப் பார்க்கிறீர்கள். இங்கும், எருசலே
மிலுமுள்ள எல்லா யூத மக்களும் இவனுக்
கெதிராக என்னிடம் குற்றம் சாட்டியுள்ளனர்.
அவர்கள் குற்றங்களைக் கூறியபோது,
அவனை இனிமேலும் உயிரோடு விட்டு
வைக்கக் கூடாதென்று கூக்குரலிட்டனர். 25நான்
நியாயங்கேட்டபோது அவனிடம் எந்தத் தவ
றையும் காணவில்லை. அவனுக்கு மரணதண்
டனை விதிக்குமளவிற்கு எந்தக் காரணமும்
இருக்கவில்லை. அவன் இராயரிடம் நியாயம்
பெற விரும்புகிறான். எனவே அவனை ரோ
முக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளேன். 26இம்
மனிதன் செய்த தவறாக இராயருக்கு எழுது
வதற்கு தீர்மானமாக எதுவும் இல்லை.
எனவே உங்களுக்கு முன்பாக, விசேஷமாக
அகிரிப்பா மன்னரே, உங்களுக்கு முன்பாக
அவனைக் கொண்டு வந்துள்ளேன். நீங்கள்
அவனை வினவலாம். இராயருக்கு ஏதாவது
எழுதுமாறு கூறலாம். 27ஒரு கைதிக்கு எதிராக
எந்தக் குற்றத்தையும் குறிப்பிடாமல் அவனை
இராயரிடம் அனுப்புவது மூடத்தனமானது
என்று நினைக்கிறேன்” என்றான்.

### அகிரிப்பா மன்னன் முன் பவுல்

26 அகிரிப்பா பவுலை நோக்கி, “இப்
போது உன்னைப்பற்றி நீயே பேச
லாம்” என்றான். பின் பவுல் தனது கையை
உயர்த்தித் தனக்கு சார்பாகப் பேசத் துவங்
கினான். 2அவன், “அகிரிப்பா மன்னரே, யூதர்
கள் எனக்கு எதிராகச் சொன்ன எல்லா
வழக்குகளுக்கும் நான் பதில் கூறுவேன். நான்
இன்று உங்கள் முன்பாக நின்று இதைச்
செய்வதை ஓர் ஆசீர்வாதமாகக் கருதுகிறேன்.
3நீங்கள் எல்லா யூத வழக்கங்களையும் யூதர்
கள் வாதிடுகிற காரியங்களையும் மிகுதியாக
அறிந்திருப்பதால் நான் உங்களோடு பேசுவ
தில் மகிழ்ச்சி கொள்ளுகிறேன். தயவுசெய்து
நான் சொல்வதைக் கவனமாகக் கேளுங்கள்.

4“எனது முழு வாழ்க்கையைக் குறித்து
எல்லா யூதர்களும் அறிந்திருக்கிறார்கள்.
முதலில் எனது சொந்த நாட்டில் நான் வாழ்ந்த
வகையையும், பின்னர் எருசலேமில் வாழ்ந்த
வகையையும் பற்றி அவர்கள் அறிந்திருக்
கிறார்கள். 5இந்த யூதர்களுக்கு என்னைப் பல
காலமாகத் தெரியும். அவர்கள் விரும்பினால்
நான் ஒரு நல்ல பரிசேயன் என்று உங்களுக்
குக் கூற முடியும். யூத மக்களில் பிற எல்லா
பிரிவினரைக் காட்டிலும் பரிசேயர்கள் யூத
மத விதிகளைக் கவனமாகப் பின்பற்றுகி
றார்கள். 6தேவன் நமது முன்னோருக்குக் கொ
டுத்த வாக்குறுதியை நான் நம்புவதால் இப்
போது நான் விசாரணையிலிருக்கிறேன்.
7நமது மக்களில் பன்னிரண்டு குலத்தினரும்
பெறவேண்டுமென நம்பும் வாக்குறுதி இதுவே.
இந்நம்பிக்கைக்காக யூதர்கள் தேவனுக்கு
இரவும் பகலும் சேவை புரிகின்றனர். எனது
மன்னரே, நான் இந்த வாக்குறுதியிலேயே
நம்பிக்கை வைத்திருப்பதால் யூதர்கள் என்
மீது பழி சுமத்துகின்றனர்! 8தேவன் மரணத்
தினின்று மக்களை எழுப்பமுடியுமென்பது
நம்ப இயலாதது என ஏன் மக்கள் எண்ணு
கின்றனர்?

9நான் பரிசேயனாக இருந்தபோது, நாச
ரேத்தைச் சேர்ந்த இயேசுவின் பெயருக்கு எதி
ராகப் பல காரியங்களைச் செய்ய எண்ணி
னேன். 10எருசலேமில் விசுவாசிகளுக்கு*
எதிராகப் பல காரியங்களைச் செய்தேன்.
விசுவாசிகளில் பலரைச் சிறையிலிடும் அதி
காரத்தைத் தலைமை ஆசாரியர் எனக்குக்
கொடுத்திருந்தனர். இயேசுவின் சீஷர்கள்
கொல்லப்பட்டபோது, அது ஒரு நல்ல செய்கை
என்று நான் ஒப்புக்கொண்டேன். 11ஒவ்வொரு
யூத ஜெப ஆலயத்திலும் நான் அவர்களைத்
தண்டித்தேன். இயேசுவுக்கு எதிராக அவர்கள்
தகாதவற்றைப் பேசச் செய்வதற்கு முயற்சித்
தேன். அம்மக்களிடம் நான் கொண்ட அதிக
சினத்தால் அவர்களைக் கண்டுபிடித்துத் துன்
புறுத்துவதற்காக வேறு நகரங்களுக்கு சென்
றேன்.

### இயேசுவைப் பற்றி பவுலின் சாட்சி

12“ஒரு முறை தலைமை ஆசாரியர் தமஸ்கு
நகரத்திற்குப் போகும் அதிகாரத்தையும் அனு
மதியையும் கொடுத்தார்கள். 13நான் தமஸ்குவுக்
குப் போய்க்கொண்டிருந்தேன். அது நண்பகல்
பொழுது. நான் வானத்திலிருந்து ஓர் ஒளி
யைப் பார்த்தேன். சூரியனைக் காட்டிலும்
அதிகமாக அவ்வொளி பிரகாசித்தது. அந்த
ஒளி என்னையும் என்னோடு பயணம் செய்த
மனிதர்களைச் சுற்றியும் பிரகாசித்தது. 14நாங்
கள் எல்லோரும் நிலத்தில் வீழ்ந்தோம். அப்
போது யூத மொழியில் ஒரு குரல் என்னோடு
பேசுவதைக் கேட்டேன். அக்குரல் ‘சவுலே,
சவுலே, ஏன் இக்கொடுமைகளை எனக்கு
எதிராகச் செய்கிறாய்? நீ என்னை எதிர்ப்
பதன் மூலம் உன்னை நீயே துன்புறுத்திக்
கொண்டிருக்கிறாய்’ என்றது. 15நான், ‘ஆண்
டவரே, நீங்கள் யார்’ என்றேன். ஆண்டவர்,
‘நான் இயேசு. நீ துன்பப்படுத்துகிறவர் நானே.
16எழுந்திரு. நான் உன்னை எனது ஊழிய
னாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். நீ எனக்குச்
சாட்சியாக இருப்பாய். இன்று பார்த்த என்
னைப் பற்றிய செய்திகளையும், உனக்கு நான்
காட்டப்போகிற விஷயங்களையும் நீ மக்களுக்
குக் கூறுவாய். 17நான் உனது சொந்த மக்கள்

---

**விசுவாசிகள்** இலக்கியப்படி “தூயவர்கள்” இயேசுவை விசுவாசிக்கும் மக்களுக்கு வழங்கப் படும் பெயராகும்.

உன்னைத் துன்புறுத்துவதற்கு அனுமதிக்க
மாட்டேன். யூதரல்லாத மக்களிடமிருந்தும் நான்
உன்னைப் பாதுகாப்பேன். நான் உன்னை
இம்மக்களிடம் அனுப்புகிறேன். 18உண்மையை
இம்மக்களுக்கு நீ காட்டுவாய், அதனால் மக்கள்
இருளிலிருந்து ஒளிக்குத் திரும்புவார்கள்.
சாத்தானின் அதிகாரத்திலிருந்து தேவனிடம்
திரும்புவார்கள். மேலும் அவர்களது பாவங்
கள் மன்னிக்கப்படும். என்னை நம்புவதால்
பரிசுத்தமாக்கப்பட்ட மனிதரோடு அவர்களும்
பங்கு பெறமுடியும்’ என்றார்” என்று
கூறினான்.

## தன் ஊழியம் பற்றி பவுல்

19பவுல் தொடர்ந்து பேசினான். “அகிரிப்பா
மன்னரே, பரலோகத்திலிருந்து இக்காட்சி வந்த
போது, நான் அதற்குக் கீழ்ப்படிந்தேன். 20மக்
கள் அவர்களது இருதயங்களையும் வாழ்க்கை
களையும் மாற்றிக்கொண்டு, தேவனிடம் திரும்
பவேண்டுமென்று அவர்களுக்குக் கூற ஆரம்
பித்தேன். அவர்கள் மனம் மாறினார்கள் என்
பதை வெளிக்காட்டும்படியான செயல்களைச்
செய்யுமாறு மக்களுக்குக் கூறினேன். தமஸ்கு
விலுள்ள மக்களுக்கு முதலில் இதைக் கூற
ஆரம்பித்தேன். பின் எருசலேமுக்கும், யூதேயா
வின் ஒவ்வொரு பாகத்திற்கும் சென்று,
அங்குள்ள மக்களுக்கு இவற்றைக் கூறினேன்.
மேலும் யூதரல்லாத மக்களிடமும் நான் சென்
றேன். 21எனவேதான் யூதர்கள் என்னைப்
பிடித்து, தேவாலயத்தில் என்னைக் கொல்ல
முயன்றார்கள். 22ஆனால் தேவன் எனக்கு உத
வினார். இன்னமும் எனக்கு உதவிக்கொண்
டிருக்கிறார். தேவனுடைய உதவியால் நான்
இன்று இங்கு நின்று கொண்டிருக்கிறேன்.
நான் கண்ட மகத்தானதும் எளியதுமானவற்
றையும் கூறிக்கொண்டுள்ளேன். ஆனால் நான்
எதையும் புதிதாகக் கூறிக்கொண்டிருக்க
வில்லை. பின்னர் நிகழுமென்று மோசேயும்
தீர்க்கதரிசிகளும் கூறியவற்றை நான் கூறிக்
கொண்டிருக்கிறேன். 23தொல்லைகளை அனுப
வித்தபின் மரணத்தினின்று முதன் முதலில்
எழுபவர் கிறிஸ்துவே என்று அவர்கள்
கூறினர். மோசேயும் தீர்க்தரிசிகளும் கிறிஸ்து
யூத மக்களுக்கும் யூதரல்லாத மக்களுக்கும்
ஒளியைத் தருபவர் என்று கூறினார்கள்”
என்றான்,

## அகிரிப்பாவை தன் சார்பாக்க பவுல் முனைகிறான்.

24பவுல் இவற்றைத் தனக்குச் சாதகமாகக்
கூறிக்கொண்டிருந்தபொழுது பெஸ்து உரக்க,
“பவுலே, நீ பைத்தியக்காரன்! அதிகப்படிப்பு
உன்னைப் பித்தனாக்கிவிட்டது!” என்றான்.
25பவுல், “மிக மாட்சிமைமிக்க பெஸ்துவே,
நான் பித்தன் அல்லன். நான் கூறுபவை உண்
மையானவை. எனது வார்த்தைகள் ஒரு மூட
னின் வார்த்தைகள் அல்ல. அவை உண்மை
யானவையும், ஞானமிக்கவையும் ஆகும்.
26அகிரிப்பா மன்னர் இவற்றை நன்கு அறிந்
திருக்கிறார். நான் சுதந்திரமாக அவரோடு
பேசமுடியும். இவை அனைத்தையும் குறித்து
அவர் கேள்விப்பட்டிருக்கிறார் என்பதை
நான் அறிவேன். ஏன்? இவையனைத்தும்
மக்கள் காணும்படியாக நடந்தவையே. 27அகி
ரிப்பா மன்னரே, தீர்க்கதரிசிகள் எழுதிய
வற்றை நம்புகிறீர்களா? நீங்கள் நம்புகிறீர்கள்
என்பது எனக்குத் தெரியும்!” என்றான்.
28அகிரிப்பா பவுலிடம் “நீ அவ்வளவு எளி
தாக என்னைக் கிறிஸ்தவனாக மாறுவதற்குத்
தூண்டமுடியும் என்று நினைக்கிறாயா?”
என்று கேட்டான்.
29பவுல், “அது எளிதானதா கடினமானதா,
என்பது முக்கியமல்ல. நீங்கள் மட்டுமல்ல,
என்னைக் கேட்கிற இங்குள்ள ஒவ்வொரு
வரும் இன்று இரட்சிக்கப்பட்டு எனக்குப் பூட்
டப்பட்டுள்ள இந்த விலங்குகளைத் தவிர்த்து
எல்லாவற்றிலும் என்னைப் போலாக வேண்
டுமென்று தேவனிடம் பிரார்த்தனை செய்
கிறேன்” என்றான்.
30அகிரிப்பா மன்னரும் கவர்னர் பெஸ்து
வும் பெர்னிசும் அவர்களோடு அமர்ந்திருந்த
எல்லா மக்களும் எழுந்து 31ஒருவரோடொ
ருவர் பேசிக்கொண்டு அந்த அறையை
விட்டுச் சென்றார்கள். அவர்கள், “இம்மனிதன்
கொல்லப்படவோ, சிறையில் அடைக்கப்ப
டவோ கூடாது, உண்மையிலேயே தவறான
எதையும் அவன் செய்யவில்லை!” என்றார்
கள். 32அகிரிப்பா பெஸ்துவை நோக்கி,
“அவன் மட்டும் இராயரிடம் விண்ணப்பிக்காம
லிருந்திருந்தால் அவன் விடுதலை செய்யப்பட்
டிருக்கலாம்” என்றான்.

## ரோமாபுரிப் பயணம்

27 நாங்கள் இத்தாலிக்கு கடற்பயணம் செய்
யவேண்டுமென முடிவெடுக்கப்பட்டது.
ஜூலியஸ் என்னும் பெயருள்ள படை அதி
காரி பவுலையும் வேறு சில கைதிகளையும்
பொறுப்பேற்றுக் கொண்டான். இராயரின்*
படையில் ஜூலியஸ் சேவை புரிந்து கொண்
டிருந்தான். 2நாங்கள் ஒரு கப்பலில் ஏறிச்
சென்றோம். கப்பல் அதிரமித்தியம் என்னும்
நகரிலிருந்து வந்து ஆசியாவின் பல இடங்க
ளுக்குப் பயணம் செல்லத் தயாராக இருந்தது.
அரிஸ்தர்க்கும் எங்களோடு வந்தான். அம்
மனிதன் மக்கதோனியாவில் தெசலோனிக்கா
நகரத்தைச் சேர்ந்தவன். 3மறுநாள் நாங்கள்
சீதோன் நகரத்திற்கு வந்தோம். ஜூலியஸ்
பவுலோடு நல்ல முறையில் நடந்து கொண்
டான். அவன், பவுல் அவனது நண்பர்களைச்
சென்று சந்திக்கும் சுதந்திரத்தை அவனுக்குக்
கொடுத்தான். இந்த நண்பர்கள் பவுலுக்குரிய
தேவைகளைக் கவனித்து வந்தனர். 4நாங்கள்

---

**இராயன்** ரோமப் பேரரசின் தலைவர்.

சீதோன் நகரத்திலிருந்து கடலில் பயணமா
னோம். காற்று எங்களுக்கு எதிர்த்திசையில்
வீசியபடியால் சீப்புரு தீவின் கரையோரம்
எங்கள் கடற்பயணம் தொடர்ந்தது. 5சிலிசியா,
பம்பிலியா வழியாகக் கடலைக் கடந்து சென்
றோம். பின் லீசியாவிலுள்ள மீரா நகரத்திற்கு
நாங்கள் வந்தோம். 6மீராவில் படை அதிகாரி
அலெக்ஸாண்டிரியா நகரத்திலிருந்து வந்த
ஒரு கப்பலைக் கண்டான். இந்தக் கப்பல் இத்
தாலிக்குப் போய்க் கொண்டிருந்தது. எனவே
அவன் எங்களை அதில் ஏற்றினான்.

7நாங்கள் நிதானமாகப் பல நாட்கள் கடலில்
பயணம் செய்தோம். காற்று எங்களுக்கு எதி
ராக வீசிக்கொண்டிருந்தபடியால் கினீது
நகரை அடைவதே கடினமாக இருந்தது. அவ்
வழியாக மேலும் போக முடியவில்லை. சால்
மோனின் அருகேயுள்ள கிரேத்தா தீவின் தென்
பகுதியின் வழியாகக் கடல் பயணமானோம்.
8கடற்கரை ஓரமாகப் போனோம். ஆனாலும்
கடற்பயணம் கடினமாக இருந்தது. பாதுகாப்
பான துறைமுகம் என்னும் இடத்திற்கு வந்
தோம். லசேயா நகரம் அந்த இடத்திற்கு அருகா
மையிலிருந்தது.

9நிறைய நேரத்தை நாங்கள் இழந்திருந்
தோம். கடற்பயணம் செய்வது ஆபத்தானதாக
இருந்தது. ஏனெனில் யூதர்களின் உபவாச
தினம் ஆரம்பித்திருந்தது. எனவே பவுல்,
10“மனிதரே இப்பயணத்தில் இன்னும் தொல்
லைகள் மிகுதியாக இருக்கும் என்று எண்ணு
கிறேன்” என்று அவர்களை எச்சரித்தான்.
“கப்பலும், கப்பலின் பொருள்களும் இழக்கப்
படலாம். நம் உயிரையும் நாம் இழக்கக்கூடும்!”
என்றான். 11ஆனால் கப்பல் தலைவனும்
கப்பலின் சொந்தக்காரனும் பவுல் கூறியதை
ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் படை அதி
காரி பவுலை நம்பவில்லை. பதிலாக, தலை
வனும் கப்பலின் சொந்தக்காரனும் கூறியதை
அதிகாரி நம்பினான். 12குளிர்காலத்தில் கப்பல்
தங்குவதற்கு அத்துறைமுகமும் ஏற்றதல்ல.
எனவே பெரும்பான்மையான மனிதர்களும்
கப்பல் புறப்படவேண்டுமென முடிவெடுத்
தனர். பேனிக்ஸ் நகரத்தை அடையக் கூடுமென
அவர்கள் நம்பினர். குளிர்காலத்தில் கப்பல்
அங்குத் தங்கமுடியும். (கிரேத்தா தீவில்
பேனிக்ஸ் ஒரு நகரம். தென் மேற்கு, வடமேற்கு
திசைகளை நோக்கிய துறைமுகம் அங்கி
ருந்தது.)

### புயல்

13தெற்கிலிருந்து ஒரு நல்ல காற்று வீசியது.
கப்பலிலிருந்த மனிதர்கள், “நமக்குத் தேவை
யான காற்று இது. இப்போது அது வீசுகிறது!”
என்று நினைத்தார்கள். எனவே அவர்கள்
நங்கூரத்தை மேலே இழுத்தார்கள். கிரேத்தா
தீவுக்கு வெகு அருகில் பயணம் செய்தோம்.
14“வடகிழக்கன்” என்னும் பெயருள்ள மிகப்
பலமான காற்று தீவின் குறுக்காக வந்தது.
15இக்காற்று கப்பலைச் சுமந்து சென்றது.
காற்றுக்கு எதிராக கப்பலால் செல்லமுடிய
வில்லை. எனவே, முயற்சி செய்வதை விட்டு,
காற்று எங்களைச் சுமந்துசெல்லும்படியாக
விட்டோம். 16கிலவுதா என்னும் ஒரு சிறிய
தீவின் கீழே சென்றோம். எங்களால் உயிர்
மீட்கும் படகை வெளியே எடுக்கமுடிந்தது.
ஆனால் அதை எடுப்பது மிகக் கடினமான
செயலாக இருந்தது. 17உயிர்மீட்கும் படகை
மனிதர்கள் எடுத்தபின், அவர்கள் கப்பலைச்
சுற்றிலும் கயிறுகளால் கப்பல் சரியாக இருப்
பதற்கென்று கட்டினார்கள். சிர்டிஸின்* மணற்
பாங்கான கரையில் கப்பல் மோதக்கூடு
மென்று அவர்கள் நினைத்தார்கள். எனவே
துடுப்புகளை எடுத்துவிட்டு, காற்று கப்
பலைச் செலுத்தும்படியாக விட்டார்கள்.
18மறுநாள் புயல் கடுமையாகத் தாக்கியதால்
மனிதர்கள் கப்பலிலிருந்து சில பொருட்களை
வெளியே வீசினார்கள். 19ஒரு நாள் கழிந்ததும்
கப்பலின் கருவிகளை வெளியே வீசினர்.
20பல நாட்கள் எங்களால் சூரியனையோ,
நட்சத்திரங்களையோ பார்க்க முடியவில்லை.
புயல் கொடுமையாக இருந்தது. நாங்கள் உயிர்
பிழைக்கும் நம்பிக்கையைக் கைவிட்டோம்.
நாங்கள் இறந்து விடுவோமென எண்ணி
னோம். 21நீண்ட காலமாக அம்மனிதர்கள்
சாப்பிடவில்லை. பின்பு ஒருநாள் பவுல் அவர்
களுக்கு முன்பாக எழுந்து நின்று, “மனிதரே,
கிரேத்தாவை விட்டுப் புறப்படாதீர்கள் என்று
உங்களுக்குச் சொன்னேன். நீங்கள் நான் சொல்
வதைக் கேட்டிருக்கவேண்டும். இத்தனை
தொல்லைகளும் நஷ்டமும் உங்களுக்கு ஏற்பட்
டிருக்காது. 22ஆனால் இப்போதும் மகிழ்ச்
சியாக இருக்கும்படிக்கு உங்களுக்கு கூறுகி
றேன். உங்களில் ஒருவரும் இறக்கமாட்டீர்கள்!
ஆனால் கப்பல் அழிந்து போகும். 23நேற்று
இரவு தேவனிடமிருந்து ஒரு தூதன் என்னிடம்
வந்தான். நான் வணங்குகிற தேவன் அவரே.
நான் அவருடையவன். 24தேவதூதன், ‘பவுலே,
பயப்படாதே! நீ இராயருக்குமுன் நிற்க வேண்
டும். தேவன் உனக்கு இவ்வாக்குறுதியைத்
தருகிறார். உன்னோடு பயணமாகிய எல்லா
மனிதரின் உயிர்களும் காப்பாற்றப்படும்’ என்
றான். 25எனவே மனிதரே மகிழ்ச்சியாயி
ருங்கள்! நான் தேவனிடம் நம்பிக்கை வைத்
துள்ளேன். அவரது தூதன் கூறியபடி எல்லாம்
நடக்கும். 26ஆனால் நாம் ஒரு தீவிற்குச் சென்று
மோதுவோம்” என்றான். 27பதினான்காம் நாள்
இரவில் ஆதிரியாக் கடலைச் சுற்றிலும் நாங்
கள் கப்பலில் மிதந்துகொண்டிருந்தோம்.
மாலுமிகள் கரையை நெருங்குகிறோம் என்று
எண்ணினர். 28அவர்கள் ஒரு கனமான
பொருளை நுனியில் கட்டி கயிற்றை நீருக்குள்
வீசினர். நீர் 120 அடி ஆழமானது என்று
அவர்கள் கண்டனர். இன்னும் சற்று தூரம்

---

**சிர்டிஸ்** லிபியாக் கடற்கரையில் உள்ள பகுதி.

சென்று கயிற்றை மீண்டும் வீசினர். அங்கு
நீர் 90 அடி ஆழமாயிருந்தது. 29நாங்கள் பாறை
யில் மோதுவோமென்று மாலுமிகள் பயந்தார்
கள். எனவே நான்கு நங்கூரங்களை நீருக்குள்
பாய்ச்சினர். மறுநாளின் பகலொளிக்காக
பிரார்த்தனை செய்தனர். 30சில மாலுமிகள்
கப்பலைக் கைவிட விரும்பினர். அவர்கள்
உயிர் மீட்கும் படகை நீரில் இறக்கினர். கப்
பலின் முன்பக்கத்திலிருந்து அதிகமான நங்கூ
ரங்களை வீசுவதாக பிறமனிதர்கள் கருதும்படி
யாக நடந்துக் கொண்டனர். 31ஆனால் பவுல்
படை அதிகாரியையும், பிற வீரர்களையும்
நோக்கி, “இம்மனிதர்கள் கப்பலிலே இருக்கா
விட்டால் உங்கள் உயிர்களைக் காக்க முடி
யாது” என்றான். 32எனவே வீரர்கள் கயிறு
களை அறுத்து உயிர் மீட்கும் படகை நீரில்
விழச்செய்தனர். 33அதிகாலைக்குச் சற்று முன்
பவுல் எல்லா மக்களையும் ஏதேனும் உண்
பதற்குச் சம்மதிக்க வைத்தான். அவன் “கடந்த
இரண்டு வாரங்களாக நீங்கள் காத்துக்கொண்
டும், கவனித்துக்கொண்டும் இருக்கிறீர்கள். பதி
னான்கு நாட்களாக நீங்கள் எதையும் உண்ண
வில்லை. 34நீங்கள் இப்போது எதையாவது
சாப்பிடுமாறு உங்களை வேண்டுகிறேன். உயி
ரோடிருப்பதற்கு உங்களுக்கு இது தேவை.
உங்களில் யாரும் ஒரு தலை முடியைக்கூட
இழக்கமாட்டீர்கள்” என்றான். 35இதைக்கூறிய
பிறகு பவுல் ரொட்டியை எடுத்து எல்லோர்
முன்பாகவும் அதற்காக தேவனுக்கு நன்றி
சொன்னான். அதில் ஒருபகுதியை எடுத்து,
அவன் உண்ண ஆரம்பித்தான். 36எல்லா மனி
தர்களும் உற்சாகம் பெற்றனர். அவர்களும்
சாப்பிட ஆரம்பித்தார்கள். 37(கப்பலில் 276
பேர் இருந்தனர்.) 38நாங்கள் திருப்தியாக சாப்
பிட்டோம். பின் கப்பலிலிருந்த தானியங்களை
எல்லாம் கப்பலின் பாரத்தை குறைக்கும் பொ
ருட்டு கடலுக்குள் வீசினோம்.

## கப்பல் அழிந்தது

39பகல் ஒளி வர ஆரம்பித்ததும் மாலுமிகள்
நிலத்தைக் கண்டனர். அந்நிலம் எதுவென்று
அவர்களால் அறியமுடிய வில்லை. .அவர்கள்
கடற்கரையோடு கூடிய ஒரு வளைகுடாவைக்
கண்டனர். மாலுமிகள் அவர்களால் முடிந்த
வரைக்கும் கடற்கரைக்கு நேராக கப்பலைச்
செலுத்த முயன்றனர். 40ஆனால் கப்பல் மணல்
மேட்டில் மோதியது. 41கப்பலின் முன்பகுதி
அதற்குள் நுழைந்து நின்றது. கப்பலால் அசை
யமுடியவில்லை. பெரும் அலைகள் வந்து
கப்பலின் பின்பகுதியில் மோதி, கப்பலை
உடைத்துவிட்டன. 42எந்தக் கைதியும் நீந்தித்
தப்பித்துப் போகாதவாறு வீரர்கள் அவர்
களைக் கொல்வதற்கு முடிவுசெய்தார்கள்.
43ஆனால் படைத் தலைவன் பவுலை உயி
ரோடு காக்க எண்ணினான். எனவே வீரர்கள்
கைதிகளைக் கொல்வதற்கு அவன் அனுமதிக்
கவில்லை. நீந்தத் தெரிந்தவர்கள் கடலில்
குதித்து நீந்திக் கரை சேரலாமென்று ஜூலியஸ்
மக்களுக்குக் கூறினான். 44பிற மக்கள் மரப்
பலகைகளையோ கப்பலின் உடைந்த பகுதிக
ளையோ பிடித்து நீந்தினர். இவ்வாறு எல்லா
மக்களும் நிலத்தை அடைந்தனர். மக்களில்
ஒருவரும் இறக்கவில்லை.

## மெலித்தா தீவில் பவுல்

28 நாங்கள் நலமாகக் கரையை அடைந்த
போது அத்தீவு மெலித்தா என்று
அழைக்கப்பட்டதை அறிந்தோம். 2மழை
பெய்து கொண்டிருந்தது, குளிர் மிகுதியாக
இருந்தது. ஆனால் அங்கு வாழ்ந்த மக்கள்
எங்களை அசாதாரணமான அன்புடன் நடத்
தினார்கள். அவர்கள் எங்களுக்காக தீ மூட்டி
எங்களையெல்லாம் வரவேற்றனர். 3நெருப்
பின் பொருட்டு பவுல்விறகு குச்சிகளைச்
சேகரித்தான். பவுல் அக்குச்சிகளை நெருப்பில்
இட்டுக்கொண்டிருந்தான். விஷப் பாம்பு ஒன்று
வெப்பத்தினால் வெளியேறி வந்து பவுலின்
கையில் கடித்தது. 4தீவில் வாழ்ந்த மக்கள்
பவுலின் கையில் அப்பாம்பு தொங்கிக்கொண்
டிருப்பதைக் கண்டனர். அவர்கள், “இம்மனி
தன் ஒரு கொலைக்காரனாக இருக்கவேண்டும்.
அவன் கடலில் இறக்கவில்லை. ஆனால் தெய்
வீக நீதியானது அவன் வாழ்வதை விரும்ப
வில்லை” என்றனர். 5ஆனால் பவுல் பாம்
பைத் தீயினுள் உதறினான். அவனுக்கு எந்தத்
தீங்கும் ஏற்படவில்லை. 6பவுல் சரீரம் வீங்கக்
கூடும், அல்லது அவன் இறந்துவிடக்கூடும்
என்று மக்கள் எண்ணினர். மக்கள் காத்தி
ருந்து நீண்டநேரம் பவுலைக் கண்காணித்
தனர். ஆனால் அவனுக்கு எந்தத் தீங்கும்
நேரவில்லை. எனவே பவுலைக் குறித்த
தங்கள் கருத்தை அவர்கள் மாற்றிக் கொண்
டனர். அவர்கள் “அவன் ஒரு தேவன்”
என்றனர். 7அந்தப்பகுதியைச் சுற்றிலும் சில
வயல்கள் இருந்தன. தீவின் ஒரு முக்கியமான
மனிதனுக்கு அந்த வயல்கள் சொந்தமானவை.
அவன் பெயர் புபிலியு. அவன் எங்களைத்
தனது வீட்டிற்குள் வரவேற்றான். அவன் எங்க
ளுக்கு நல்லவனாக இருந்தான். நாங்கள்
அவனது வீட்டில் மூன்று நாட்கள் தங்கியிருந்
தோம். 8புபிலியுவின் தந்தை மிகவும் நோயுற்
றுப் படுக்கையிலிருந்தார். அவருக்கு காய்ச்
சலும் வயிற்றிளைச்சலும் இருந்தது. ஆனால்
பவுல் அவனிடம் சென்று அவனுக்காகப்
பிரார்த்தனை செய்தான். பவுல் தனது கை
களை அம்மனிதன் மீது வைத்து அவனைக்
குணமாக்கினான். 9இது நடந்தபின் தீவிலுள்ள
எல்லா நோயாளிகளும் பவுலிடம் வந்தனர்.
அவர்களையும் கூடப் பவுல் குணமாக்கினான்.
10-11தீவின் மக்கள் எங்களுக்குப் பல கௌரவங்
களை அளித்தார்கள். (நாங்கள் தீவில் மூன்று
மாதம் தங்கினோம்) நாங்கள் புறப்படுவதற்குத்
தயாரானபோது எங்களுக்குத் தேவையான
பொருட்களை மக்கள் கொடுத்தார்கள்.

### பவுல் ரோமுக்குப் போகிறான்

அலெக்ஸாண்டிரியாவிலிருந்து வந்த ஒரு
கப்பலில் நாங்கள் ஏறினோம். குளிர் காலத்தில்
அக்கப்பல் மெலித்தா தீவில் தங்கியிருந்தது.
மிதுனம்* என்னும் சின்னம் கப்பலின் முன்
புறத்தில் இருந்தது. 12சிராகூஸ் நகரில் நாங்கள்
கப்பலை நிறுத்தினோம். மூன்று நாட்கள் சிரா
கூஸில் தங்கியிருந்து பின் புறப்பட்டோம்.
13ரேகியு நகருக்கு நாங்கள் வந்தோம். தென்
மேற்கிலிருந்து மறுநாள் ஒரு காற்று வீசியது.
எனவே நாங்கள் கடலில் பயணமாக முடிந்தது.
ஒரு நாள் கழித்து நாங்கள் புத்தேயோலி நக
ருக்கு வந்தோம். 14அங்குச் சில சகோதரர்களை
நாங்கள் கண்டோம். ஒருவாரம் தம்மோடு எங்க
ளைத் தங்கியிருக்குமாறு எங்களைக் கேட்டுக்
கொண்டார்கள். இறுதியில் நாங்கள் ரோமை
அடைந்தோம். 15ரோமிலுள்ள விசுவாசிகள்
நாங்கள் அங்கிருப்பதை கேள்விப்பட்டனர்.
அப்பியு சந்தையிலும், மூன்று விடுதிகளிலும்
எங்களைச் சந்திக்கும்படியாக அவர்கள் வந்
தனர். விசுவாசிகளைக் கண்டபோது பவுல்
ஊக்கம் பெற்றான். பவுல் தேவனுக்கு நன்றி
கூறினான்.

### ரோமில் பவுல்

16பின்பு நாங்கள் ரோமுக்குச் சென்றோம்.
ரோமில் பவுல் தனித்து தங்குவதற்கு அனும
திக்கப்பட்டான். ஒரு வீரன் மட்டும் பவுலைக்
காவல் காப்பதற்காக அவனோடு தங்கினான்.
17மூன்று நாளைக்குப் பின் பவுல், சில மிக
முக்கியமான யூதர்களைத் தன்னிடம் வருமாறு
சொல்லியனுப்பினான். அவர்கள் எல்லோரும்
வந்தபோது பவுல், "எனது யூத சகோதரர்
களே, நான் நமது மக்களுக்கு (யூதர்களுக்கு)
எதிராக எதையும் செய்யவில்லை, நம் முன்
னோர்களின் மரபிற்கு எதிராகவும் எதையும்
நான் செய்யவில்லை. ஆனால் என்னை எருச
லேமில் சிறைப்பிடித்து ரோமரிடம் ஒப்படைத்
தனர். 18ரோமர்கள் என்னை விசாரித்தார்கள்.
ஆனால் நான் கொல்லப்படுவதற்கு ஏதுவான
எந்தக் காரணத்தையும் என்னிடம் கண்டு
பிடிக்க முடியவில்லை. எனவே அவர்கள்
என்னை விடுதலை செய்ய விரும்பினர்.
19ஆனால் அங்கிருந்த யூதர்கள் அதை விரும்ப
வில்லை. எனவே நான் என்னை இராயரிடம்
வழக்காடும்படியாக ரோமுக்கு கொண்டு
வருமாறு கேட்க வேண்டியதாயிற்று. ஆனால்
எனது மக்கள் தவறிழைத்தார்கள் என்று நான்
குற்றம் சாட்டிக் கொண்டிருக்கவில்லை.
20எனவே தான் உங்களைச் சந்தித்து உங்க
ளோடு பேச விரும்பினேன். இஸ்ரவேலரின்
நம்பிக்கையை நான் கொண்டிருப்பதால் இவ்
விலங்குகளால் கட்டப்பட்டிருக்கிறேன்" என்
றான்.

21யூதர்கள் பவுலுக்குப் பதிலாக, "நாங்
கள் உன்னைக் குறித்து யூதேயாவிலிருந்து
கடிதங்கள் எதையும் பெறவில்லை. அங்
கிருந்து பயணம் செய்த எந்த யூத சகோதரரும்
உன்னைக் குறித்து செய்தி கொண்டுவரவோ,
உன்னைப் பற்றித் தவறாக எதையும் கூறவோ
இல்லை. 22நாங்கள் உனது கருத்துக்களை
அறிய விரும்புகிறோம். இந்தக் கூட்டத்தின
ருக்கு (கிறிஸ்தவர்களுக்கு) எதிராக எல்லா
இடங்களின் மக்களும் பேசிக்கொண்டிருப்
பதை நாங்கள் அறிவோம்" என்றனர். 23பவு
லும் யூதரும் கூட்டத்திற்கு ஒரு நாளைத் தேர்ந்து
கொண்டனர். அந்த நாளில் இன்னும் பல
யூதர்கள் பவுலை அவனது வீட்டில் சந்தித்
தனர். நாள் முழுவதும் பவுல் அவர்களிடம்
பேசினான். தேவனுடைய இராஜ்யத்தைக்
குறித்து பவுல் அவர்களுக்கு விளக்கினான்.
இயேசுவைக் குறித்த காரியங்களில் அவர்கள்
நம்பிக்கை கொள்ளச் செய்ய முயன்றான். மோ
சேயின் சட்டங்களையும் தீர்க்கதரிசிகளின்
எழுத்துக்களையும் இதற்குப் பயன்படுத்
தினான்.

24சில யூதர்கள் பவுல் கூறியவற்றை
நம்பினார்கள். ஆனால் மற்றவர்கள் அதை
நம்பவில்லை. 25அவர்களிடையே ஒரு கருத்து
வேறுபாடு ஏற்பட்டது. யூதர்கள் புறப்படுவதற்
குத் தயாராக இருந்தனர். ஆனால் பவுல் அவர்
களுக்கு வேறொரு செய்தியையும் சொல்லிய
னுப்பினான். பரிசுத்த ஆவியானவர் ஏசாயா
தீர்க்கதரிசியின் மூலமாக உங்கள் முன்னோ
ருக்கு உண்மையைக் கூறினார். அவர்,

26 'இம்மக்களிடம் போய் அவர்களுக்குக்
கூறு. நீங்கள் கவனிப்பீர்கள், நீங்கள் கேட்
பீர்கள், ஆனால் புரிந்து கொள்ளமாட்டீர்
கள். நீங்கள் காண்பீர்கள், நீங்கள் பார்ப்
பீர்கள், ஆனால் நீங்கள் பார்ப்பவற்றை
புரிந்துகொள்ளமாட்டீர்கள்.
27 ஆம், இம்மக்களின் இருதயங்கள் கடினப்
பட்டுள்ளன. இம்மக்களுக்கு காதுகள் உள்
ளன. ஆனால் அவர்கள் கேட்பதில்லை.
இம்மக்கள் உண்மையைக் காணவும்
மறுக்கிறார்கள். இம்மக்கள் தம் கண்
களால் பார்க்காமலும், தம் காதுகளால்
கேளாமலும் தம் மனங்களால் புரிந்து
கொள்ளாமலும் இருக்கப் போவதா
லேயே இது நடந்தது. அவர்கள் குணமடை
வதற்காக என்னை நோக்கி திரும்பாமல்
இருப்பதற்காகவே இது நிகழ்ந்தது'

*ஏசாயா 6:9,10*

என்றார்.

28"தேவன் தமது இரட்சிப்பை யூதரல்லாத
மக்களுக்கு அனுப்பினார் என்பதை யூதராகிய

---

***மிதுனம்*** *இரட்டைக் கடவுள். இவர்கள் கேஸ்டர் மற்றும் போலுக்ஸ் எனப்படும் கிரேக்க தெய்வங்களின் சிலைகள்.*

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென
நினைக்கிறேன். அவர்கள் கவனிப்பார்கள்!”
என்றான். 29*
30அவனது வாடகை வீட்டில் பவுல் இரண்டு
ஆண்டுகள் முழுவதும் தங்கியிருந்தான். அவ
னைச் சந்திக்கும்படியாக வந்த மக்களை
வரவேற்றான். 31பவுல் தேவனுடைய இராஜ்
யத்தைக் குறித்துப் போதித்தான். கர்த்தர்
இயேசு கிறிஸ்துவைக் குறித்துக் கற்பித்தான்.
அவன் தைரியசாலியாக இருந்தான். அவன்
பேசுவதை நிறுத்த ஒருவரும் முயற்சிக்க
வில்லை.

---

**வாக்கியம் 29** பிற்காலத்தில் வந்த சில அப்போஸ்தலர் நடபடிகள் பிரதிகளில் 29வது வாக்கியம் சேர்க்கப்பட்டுள்ளது “பவுல் இதனைச் சொன்ன பிறகு, யூதர்கள் சென்றனர். ஒருவரோடு ஒருவர் மிகவும் விவாதித்துக் கொண்டனர்.”

# License Agreement for Bible Texts

***World Bible Translation Center***
***Last Updated: September 21, 2006***

Copyright © 2006 by World Bible Translation Center
All rights reserved.

**These Scriptures:**

- Are copyrighted by World Bible Translation Center.
- Are not public domain.
- May not be altered or modified in any form.
- May not be sold or offered for sale in any form.
- May not be used for commercial purposes (including, but not limited to, use in advertising or Web banners used for the purpose of selling online add space).
- May be distributed without modification in electronic form for non-commercial use. However, they may not be hosted on any kind of server (including a Web or ftp server) without written permission. A copy of this license (without modification) must also be included.
- May be quoted for any purpose, up to 1,000 verses, without written permission. However, the extent of quotation must not comprise a complete book nor should it amount to more than 50% of the work in which it is quoted. A copyright notice must appear on the title or copyright page using this pattern: "Taken from the HOLY BIBLE: EASY-TO-READ VERSION™ © 2006 by World Bible Translation Center, Inc. and used by permission." If the text quoted is from one of WBTC's non-English versions, the printed title of the actual text quoted will be substituted for "HOLY BIBLE: EASY-TO-READ VERSION™." The copyright notice must appear in English or be translated into another language. When quotations from WBTC's text are used in non-saleable media, such as church bulletins, orders of service, posters, transparencies or similar media, a complete copyright notice is not required, but the initials of the version (such as "ERV" for the Easy-to-Read Version™ in English) must appear at the end of each quotation.

Any use of these Scriptures other than those listed above is prohibited. For additional rights and permission for usage, such as the use of WBTC's text on a Web site, or for clarification of any of the above, please contact World Bible Translation Center in writing or by email at distribution@wbtc.com.

World Bible Translation Center
P.O. Box 820648
Fort Worth, Texas 76182, USA
Telephone: 1-817-595-1664
Toll-Free in US: 1-888-54-BIBLE
E-mail: info@wbtc.com

**WBTC's web site –** World Bible Translation Center's web site: http://www.wbtc.org

**Order online –** To order a copy of our texts online, go to: http://www.wbtc.org

**Current license agreement –** *This license is subject to change without notice. The current license can be found at:* http://www.wbtc.org/downloads/biblelicense.htm

**Trouble viewing this file –** If the text in this document does not display correctly, use Adobe Acrobat Reader 5.0 or higher. Download Adobe Acrobat Reader from:
http://www.adobe.com/products/acrobat/readstep2.html

**Viewing Chinese or Korean PDFs –** To view the Chinese or Korean PDFs, it may be necessary to download the Chinese Simplified or Korean font pack from Adobe. Download the font packs from:
http://www.adobe.com/products/acrobat/acrrasianfontpack.html